மலர் : 55

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH

INTERNATIONAL TAMIL EDITION

Volume - 55

# சத்தியத்தின் குரல்

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant

**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from

**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# ஒரே இனம் மற்றும் ஒரே சரீரம்

## One Race and One Body

*Louis Rushmore*

### ஒரே இனம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:26 இவ்விதமாய்ச் சொல்கிறது‘மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் தேவன் ஒரு மனிதனிடமிருந்து மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் உண்டாக்கினார் என்று மொழிபெயர்க்கின்றன. மொழிபெயர்ப்பு எப்படி இருந்தாலும் சரி, வேதாகமத்தை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் அறிந்து கொண்டிருக்க வேண்டிய ஒன்று இவ்வுலகில் ஒரே ஒரு இனம் தான் உண்டு, அந்த இனம் மனித இனம் என்பதுதான். ஒருவருடைய தோலின் நிறம், முடியின் நிறம், கண்ணின் நிறம், சரீரத் தோற்றம், கலாச்சாரம், மொழி, வர்க்கம் (ஆண் அல்லது பெண்,) வயது, பொருளாதாரம், கல்வி சமூகநிலை போன்றவைகளெல்லாம் இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரும் மனித இனத்தின் ஓர் அங்கம் என்னும் உண்மையோடு ஒப்பிடும்போது ஒரு பொருட்டே அல்ல. இவ்வுலகில் இதுவரை வாழ்ந்தவர்களும், இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களும், இனிமேல் வாழப்போகிறவர்களும் ஆதாம் மற்றும் ஏவாளை தங்கள் மூதாதையர்களாக கொண்டவர்கள்தான் (ஆதியாகமம் 1:28). இவ்வுலகில் உள்ள எல்லோருமே ஆதாம் மற்றும் ஏவாளோடு சம்மந்தமுடையவர்கள்தான். நாம் எல்லோருமே ஆதாம் ஏவாள் மூலமாக சகோதர சகோதரிகள்தான். நோவாவின் நாட்களில் உண்டான உலகளாவிய ஜலப் பிரளயத்திற்குப் பிறகு, நோவாவின் குடும்பத்தாரிடம் பலுகிப் பெருகி பூமியை நிரப்பும்படி தேவன் கட்டளையிட்டார் (ஆதியாகமம் 9:1). ஆகவே, நோவாவின் பேழையில் இரட்சிக்கப்பட்ட எட்டு ஆத்துமாக்களின் சந்ததியாகத்தான் இப்பூமியில் உள்ள ஒவ்வொருவரும் இருக்கிறோம் (1 பேதுரு 3:20). இன்னொரு முறை நாம் வலியுறுத்துகிற காரியம் என்னவென்றால் நீட்டிக்கப்பட்ட நோவாவின் குடும்பத்தின் மூலமாக நாம் எல்லோரும் சகோதர சகோதரிகளாய் இருக்கிறோம்.

நாம் எல்லோரும் மனிதர்களாய் இருக்கிறபடியால் முதல் பெற்றோர்களான ஆதாம் ஏவாளோடு சம்மந்தப்பட்டிருக்கிறோம்– அதைத்தொடர்ந்து நோவாவின் குடும்பத்தோடும் சம்மந்தப்பட்டிருக்கிறோம். தேவன் பட்சப்பாதமுள்ளவர் அல்ல என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை [ரோமர் 2:11; 1 பேதுரு 1:17]. இது உண்மையாயிருக்க, சுவிசேஷம்– மனித இனத்தை மீட்பதற்கான தேவனுடைய திட்டம் தோலின் நிறம், முடியின் நிறம், உடல் தோற்றம், கலாச்சாரம், வயது, கல்வி, சமூகப் பொருளாதார நிலை, இருப்பிடம் போன்ற எவ்விதப்பாகுபாடுமின்றி எல்லோருக்கும் பொதுவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. 'கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ, அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. [ரோமர் 1:16]



பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் [மாற்கு 16:15] ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, [மத்தேயு 28:19]. மனித இனத்தின் எந்த ஒரு நபரும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் உண்டாகும் ஆசீர்வாதங்களிடமிருந்து விலக்கப்படவில்லை.

**ஒரே சரீரம்**

ஒருவருடைய தோலின் நிறம், முடியின் நிறம், உடல் தோற்றம்,கலாச்சாரம், வயது, கல்வி, சமூகப் பொருளாதார நிலை, இருப்பிடம் போன்ற எவ்விதப்பாகுபாடுமின்றி யாரெல்லாம் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, அதன் நிபந்தனைகளுக்கு உட்படுகிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவால் வேதாகமத்தின் சபையிலே சேர்க்கப்படுகிறார்கள் [அப்போஸ்தலர் 2:47]. புதிய ஏற்பாடு ஒட்டுமொத்த மனித இனத்தையும் இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது யூதர்கள், யூதரல்லாதவர்கள் அல்லது புற ஜாதிகள். இந்த இரு

பிரிவினரும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக ஒரே சரீரமாகிறார்கள்.



ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், அக்காலத்திலே இயேசு கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். (எபேசியர் 2:11–18)

யூதர்களானாலும் சரி, யூதர்களல்லாதவர்களாக இருந்தாலும் சரி, யாரெல்லாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் எல்லோரும் ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறார்கள் (எபேசியர் 2:19). அதே நேரத்தில் யூதர்களானாலும் சரி, யூதர்கள் அல்லாதவர்களானாலும் சரி அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவில்லை என்றாலும் கூட நம் முதல் பெற்றோர்களான ஆதாம் ஏவாளோடு சம்மந்தப்பட்டிருப்போம், அதைத் தொடர்ந்து நோவாவின்குடும்பத்தோடும் சம்மந்தப்பட்டிருப்போம். ஆனால், தேவனுடைய வீடு அல்லது ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்க மாட்டோம் (ரோமர் 12:4–5; 1 கொரிந்தியர் 12:12; எபேசியர் 4:4; கொலோசெயர் 3:15). இங்கே ஒரே சரீரம் என்பது சபையைத்தான் குறிக்கிறது. எபேசியர் 1:22,23; கொலோசெயர் 1:18,24)'நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும்,

எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்' [1 கொரிந்தியர் 12:13],'ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள [கலாத்தியர் 3:28]. எவ்வித மொழி,நிற.இன, பொருளாதார பாகுபாடுமின்றி ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் ஆவிக்குரிய சமத்துவத்தை அதாவது இரட்சிப்பை அனுபவிக்க முடியும். ஆவிக்குரிய காரியங்களில் குறிப்பாக சபைக்கடுத்த காரியங்களில் ஆண் கிறிஸ்தவர்கள் மற்றும் பெண் கிறிஸ்தவர்களிடையே அவர்கள் வகிக்கும் பங்குகளில் தான் வித்தியாசம் ஏற்படும்.

## முடிவுரை

மனிதர்களால் செயற்கையாகவே உண்டாக்கப்பட்ட மொழி, நிற,இன, கலாச்சார மற்றும் பொருளாதார பாகுபாடுகளெல்லாம் ஒரே இனமாகிய மனித இனத்திலிருந்து ஒருவரை பறித்து விடவும் முடியாது, பிரித்து விடவும் முடியாது. மனிதனுக்கு மனிதன் மாறுபடும் தனித்தன்மை கூட ஒரே சரீரமாகிய வேதாகமத்தின் ஒரே சபையில் ஒருவருடைய ஆவிக்குரிய சமத்துவத்தை குறைத்து விடாது. நாம் எல்லோரும் ஒரே இனமாக அதாவது மனித இனமாக இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் அல்லது மேசியா என்று விசுவாசித்த நாம் எல்லோருமே [யோவான்8:24] இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதினாலும் [ரோமர் 10:9,10] கடந்த கால பாவங்களிலிருந்து மனந்திரும்புவதினாலும் [அப்போஸ்தலர் 2:38]; கிறிஸ்துவினுடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதினாலும் [ரோமர் 6 :4,5] நாம் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறோம் [கலாத்தியர் 3:28]. ஒட்டுமொத்த மனித இனமும், ஆதாம் ஏவாள் வம்சாவழியில் சகோதர சகோதரிகளாய் இருக்கிறார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாயிருக்கிறார்கள் [ரோமர் 8:17].

✞



*நிர்வாக ஆசிரியர் உரை*

# நாம் பரலோகில் பிரவேசிப்பதற்கு...

*E.Z.S. Rajanayagam*

**கி**றிஸ்துவின் நற்செய்தியானது பக்தியுள்ள யூதர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட போது, மிகுந்த வாஞ்சையோடு ஏற்றுக்கொண்டு, யூதர்கள் என்ற தங்கள் பாரம்பரிய அடையாளத்தை அச்சமின்றித் துறந்து, கிறிஸ்தவர்கள் என்ற புது நாமத்தைத் தரித்துக் கொண்டார்கள். பிரகாசமாக்கப்பட்ட அந்த நாட்களில், கிறிஸ்தவர்கள் என்ற நாமத்தினிமித்தம் எதிர் வந்த உபத்திரவங்களைக் கூட சகித்துக் கொண்டார்கள் (எபி. 10:22). ஆனால், காலப்போக்கில் சக யூதர்களின் தொடர் தாக்குதலுக்குப் பயந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் படியாகத் தாங்கள் விட்டு வந்த யூத முறைமைகளுக்கே மீண்டும் திரும்ப எத்தனித்தனர். நித்திய அழிவை நிச்சயமாய் ஏற்படுத்தும் இவ்விபரீதப் போக்கை எப்படியாகிலும் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கில், ஆவியானவரின் துணையோடு எழுதப்பட்டது தான் எபிரெயர் நிருபம். இந்நூலின் ஒட்டுமொத்தப் பொருளே **மேலானது** என்பது தான். மேலானது என்று பொருள்படும் வார்த்தைகள் குறைந்தது 13 முறை இடம் பெற்றுள்ளது. **மேலானதை விட்டு விட்டு கீழானதற்கு ஏன் போக வேண்டுமென்பது** தான் எபிரெயர் ஆசிரியர் இந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு முன்பாக எடுத்து வைக்கும் பலமான வாதம்.

ஆம், கிறிஸ்து தேவ தூதர்களைக் காட்டிலும் மேலானவர். எப்படியெனில், தேவ தூதர்கள் யாவரும் கிறிஸ்துவைத் தொழுது கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள் (எபி. 1:16). கிறிஸ்து மோசேயைக் காட்டிலும் மேலானவர். எப்படியெனில், மோசே இவராலே உண்டாக்கப்பட்டவர் (எபி. 3:4), கிறிஸ்துவின் ஆசாரியத்துவ முறை, ஆரோனின் ஆசாரியத்துவ முறையைக் காட்டிலும் மேலானது. எப்படியெனில், கிறிஸ்து ஒரே தரம் பலியிடப்பட்டிருக்கிறார். மொத்தத்தில் நீங்கள் கிறிஸ்துவினிமித்தம் இழப்பதை காட்டிலும், அவராலே ஆதாயபடுத்திக் கொள்வதே மிகவும் அதிகம் என்று தர்க்க ரீதியாக விளக்கி இதனடிப்படையில் **கீழானதாகிய பழைய பிரமாணத்திற்குத்** திரும்பிப் போகும் உங்கள் நினைப்புக்கு சாவு மணி அடித்து பூரணராகும்படி கடந்து போங்கள் என்று வலியுறுத்துகிறார் (எபி. 6:1).

நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் எபிரெயர் பத்தாம் அதிகாரமும் இக்கருத்தை ஒட்டியே உள்ளது. முதல் நான்கு வசனங்களில், பழைய பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தின் பெலவீனம் பகிரங்கப்படுத்தப்பட்டு, தொடர்ந்து 10-ம் அதிகாரம், 18-ஆம் வசனம் வரை இயேசு கிறிஸ்துவின் தியாக பலியின் வலிமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எபிரெயக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, எங்குமுள்ள மானிடம் முழுவதும் பரலோகம் செல்வதற்கு, இயேசு ஆண்டவர் செய்த தியாகம் இப்பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் சிலவற்றை நாம் இங்கே கவனிப்பது நல்லது. ஏனெனில், கிறிஸ்துவின் காரியங்களில் நம்பிக்கை கொண்டு வாழும் ஒருவனின் முடிவான இலக்கு பரலோகம். அந்தப் பரலோகம் நாம் செல்லுவதற்கு கிறிஸ்து என்ன செய்திருக்கிறார் என்பதை அறிவது நமக்கு மிகுந்த ஆன்மீக உத்வேகத்தைக் கொடுக்கும்.

**1. மாம்சமாகிய திரையின் வழியாய்ப் பிரவேசித்தார்** (10:19)

எபிரெய கிறிஸ்தவர்கள் ஏன் நன்றியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எபிரெய ஆசிரியர் இப்பகுதியில் எடுத்து வைக்கும் முதல் வாதம், அவர் மாம்சமாகிய திரையின் வழியாய்ப் பிரவேசித்தார் என்பது.

பொதுவாக, திரை என்பது ஒரு தடுப்பு. இரண்டு பகுதிகளைப் பிரிக்கும் ஒரு சாதனம். பழைய ஏற்பாட்டின் காலத்தில், தேவன் மலையின் மேல் மோசேக்குக் காட்டின மாதிரியின்படியாகக் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் முற்பகுதி **பரிசுத்த ஸ்தலம்** என்றும், உட்பகுதி **மகா பரிசுத்த ஸ்தலம்** என்றும் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு பகுதிகளையும் ஒருதிரை தான் பிரித்தது (யாத். 26:33) இந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாக பிரதான ஆசாரியன் மாத்திரம் வருடத்திற்கு ஒருமுறை தனக்காகவும், ஜனங்களுக்காகவும் பலி செலுத்தும்படி செல்லுவார் (எபி. 9:7; யாத். 30:10; லேவி. 6:14,150 பிரதான ஆசாரியன் இரத்தத்தோடு தான் உள்ளே பிரவேசிக்க வேண்டும். இரத்தமில்லாமல் உள்ளே பிரவேசிக்க முடியாது.

இப்பஜ மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கத் தடையாக இருந்த இந்தத் திரைச் சீலையானது கொல்கொதா மலையில், கோரச் சிலுவையில், **என் தேவனே! என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டு இயேசுவானவர் ஆவியை விட்டபோது, மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது** (மத். 27:51). திரைச்சீலை இப்படிக் கிழிந்தது பல உண்மைகளுக்கு உரமிட்டது. ஆம், (1) யூதர்களுக்கும், புற ஜாதிகளுக்குமிடையேயான

**தடுப்பு** திரைச்சீலை இரண்டாகக் கிழிந்ததின் மூலம் தகர்ந்து போனது. (2) தேவாலயத்துக் காரியங்கள் இதன் மூலம் **முடிவுக்கு** வந்தது. (3) அதுமாத்திரமல்ல, தேவன் யூதர்களோடு செய்து கொண்ட பழைய உடன்படிக்கை காரியங்களும் **நிறைவு** பெற்றது. இவைகளைனைத்தும் இயேசுவின் மரணத்தில் நிறைவேறியது.

அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் பக்தியாய் நடக்க விரும்புகிறோம். நானும், நீங்களும் பரலோகம் செல்லுவதற்கு கிறிஸ்து நமக்கு செய்த எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணிப்பார்த்து, ஓர் நன்றியுள்ள வாழ்க்கையை வரும் காலங்களில் நடத்தத் தீர்மானிக்கிறோமா அல்லது எபிரெயக் கிறிஸ்தவர்களைப் போல் நன்றி கெட்டவர்களாய் நடந்து, பெற்றுக்கொண்ட ஆன்ம நன்மைகளை மறந்து, விட்டு வந்த பழைய வழிக்குத் திரும்பிப் போகப் போகிறோமா? என்ன செய்யப் போகிறோம்? நாம் பரலோகம் செல்லுவதற்கு இயேசு தமது சரீரத்தையே ஒப்புக் கொடுத்திருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். அவருடைய சரீரம் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்தக் கோரக் காட்சியானது விவரிப்புக்கு அப்பாற்பட்டது. மகா பெரிய தியாகத்தை இயேசு நமக்காகச் செய்திருக்கிறார்.

II. **புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார்** (10:19).

எபிரெய கிறிஸ்தவர்கள் ஏன் நன்றியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு எபிரெய ஆசிரியர் இப்பகுதியில் எடுத்து வைக்கும் இரண்டாவது வாதம், **அவர் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார்** என்பது.

நாம் பரலோகம் செல்லுவதற்கு மாம்சமாகிய திரையின் வழியாகப் பிரவேசித்த இயேசுவானவர் தொடர்ந்து செய்த காரியம், புதிதும் ஜீவனுமான மார்க்கம். இயேசுவானவர் மாம்சமாகிய திரையின் வழியாகப் பிரவேசித்திருக்காவிட்டால் இன்றைக்கு கிறிஸ்துவின் மார்க்கம் என்பது இல்லை. மனிதன் நம்பிக்கையற்றவனாக வாழ்ந்து மரித்துக் கொண்டிருப்பான். மனிதனைப் பரலோக வாழ்வுக்குத் தயார்படுத்தும் இந்த உன்னத மார்க்கம், இயேசு ஆண்டவரின் தியாகத்தின் பலனே. **இந்த மார்க்கம் புதியது, ஜீவனுள்ளது.** இது இயேசுவினால், புதிதாக ஏற்படுத்தப்பட்டபடியால் **புதியது.** இன்னும், இது எப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருக்கிற கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டுள்ளபடியால் **ஜீவனுள்ளது.**

இயேசுவின் மூலம் ஏற்படப்போகும் இந்தப் புதிய மார்க்கம் குறித்து எரேமியா தீர்க்கன் மிக அழகாக முன்னுரைத்துள்ளார். இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல்

குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் **புது உடன்படிக்கை பண்ணுவேன்.** நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; .... நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்தில் எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.... நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரே.31:31,34)

இந்தப் புதிய மார்க்கம் குறித்து இயேசு அறிந்திருந்தபடியால் தான், தன்னுடைய ஊழிய நாட்களிலேயே இது குறித்துப் பிரசங்கித்தார். ஆம், புகழ்மிக்க அந்த மலைப்பிரசங்கத்தில், மோசேயின் பழைய பிரமாணத்தின் காரியங்களோடு, தன்னுடைய உபதேசத்தை ஒப்பிட்டு, **நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்று பேசியுள்ளார். (மத். 5:22,28,32, 34,39,44).

அப்படியானால், அருமையானவர்களே நம்முடைய வாழ்க்கையில் எந்த உபதேசத்தைக் கடைப்பிடித்துக் கொண்டுள்ளோம் புதிதும், ஜீவனுமான மார்க்கம் தான்? பரலோகத்தியில் பாதை காட்டும் என்பது புரிகிறதா, இல்லையா? உண்மை நிலை இப்படியிருக்கும் போது, எபிரெயக் கிறிஸ்துவர்களைப் போல பழைய ஏற்பாட்டுக் காரியங்களில் நாட்டமுடையவர்களாயிருப்பது எப்படி நியாயமாகும்? நம்முடைய நாட்களிலான இன்றைய கிறிஸ்தவம் இத்தவறைப் பகிரங்கமாக அல்லவா செய்து கொண்டுள்ளது!.

உதாரணமாக, நாம் பரலோகம் செல்வதெற்கென்று கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் புதிதும், ஜீவனுமான மார்க்கம், பண்டிகை கொண்டாடுங்கள் என்று எங்கே சொல்லுகிறது? பண்டிகைக் காரியங்கள் பழைய ஏற்பாட்டில் தானே இடம் பெற்றுள்ளது. புதிய ஏற்பாட்டில், சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபத்தில், பண்டிகை கொண்டாடுங்கள் என்று எந்த சபைக்காவது ஆவியானவர் எழுதியுள்ளாரா? சொல்லுங்கள். பரலோகம் செல்லுவதற்காகக் கொடுக்கப்பட்ட மார்க்கத்தில் பண்டிகை இல்லையென்றால், அதை ஏன் நாம் கொண்டாட வேண்டும்? கட்டளையிடப்படாத ஒன்றைச் செய்து விட்டு பரலோகம் போகலாம் என்னும் தைரியம் நமக்கு எப்படி வருகிறது?.

III. **இரத்தத்தினாலே தைரியம் கொடுத்தார்**

எபிரெயக் கிறிஸ்தவர்கள் ஏன் நன்றியுடையவர்களாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு எபிரெயர் ஆசிரியர் இப்பகுதியில் எடுத்துக் கொடுக்கும் இன்னுமொரு வாதம், அவருடைய இரத்தத்தினாலே

தைரியம் உண்டாயிருக்கிறது என்பது.

இங்கே தைரியம் என்பதற்கான பொருள் துணிச்சல் அல்ல. மாறாக, **மகிழ்ச்சியோடு கூடிய நம்பிக்கை.** இப்படிப்பட்ட நம்பிக்கை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிடைத்திருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில் பிரவேசிக்கும் இம் மகிழ்ச்சியின் நம்பிக்கை கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படுவதற்கு முன் வாழ்ந்தவர்களுக்கு முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. பேதுரு அப்போஸ்தலன் இக்கருத்து குறித்து தனது முதலாம் நிருபத்தில் கோடிட்டுக் காட்டுகிறார். ‘உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டான பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள் ‘ என்று (1 பேதுரு .1:10-11). உண்மை நிலை இப்படியிருக்கிறபடியால் சிலுவைக்குப் பின்னால் வாழ்கிறவர்களுக்கு கிறிஸ்துவின் இரத்தம் தைரியத்தைக் கொடுக்கிறதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இந்த தைரியம் கிறிஸ்து தாமே தனது சொந்த இரத்தத்தோடு உலகத்தாருடைய பாவ நிவர்த்திக்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்ததினாலே கிடைத்திருக்கிறது

அப்படியானால், அருமையானவர்களே, கிறிஸ்துவின் இரத்தினால் கிடைக்கும் சிலாக்கியங்களுக்கு நீங்கள் சொந்தமாகிவிட்டீர்களா? ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாக்கும் இரட்சிப்பை, கிறிஸ்துவின் புதிய எற்பாட்டு உபதேசத்தினடிப்படையில் பெற்றுவிட்டீர்களா? அதாவது, விசுவாசித்து (மாற்கு 16:16), மனந்திரும்பி (அப். 2:38), இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10). பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுவிட்டீர்களா? (அப். 22:16). ✞

---

**தேவ ஆசீர்வாதம்**

***தே****வன் நமக்கு என்ன செய்தார் என்று கேட்பதைக் காட்டிலும் நாம் தேவனுக்கு என்ன செய்தோம் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். எப்படி மண்ணைத் தோண்டத் தோண்டத் தண்ணீரின் அளவு பெருகுமோ அதைப்போல் நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுக்கக் கொடுக்கக் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும் அளவும் பெருகும்.*

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ஒரே இனம் ஒரே சரீரம் | Louis Rushmore | *...1* |
| நாம் பரலோகில் பிரவேசிப்பதற்கு... | E.Z.S. Rajanayagam | *...5* |
| ஊழியம் சபையின் பணி | J.C. Choate | *...12* |
| நீங்கள் ஆவிக்குரியபிரகாரமாக... | Jerry Bates | *...16* |
| கிறிஸ்தவத்தின் முரண்கள்... | Shane Fisher | *...20* |
| தீர்க்கதரிசியின் மதிகேடு | B. Arjunan | *...24* |
| சோர்ந்துபோக வேண்டாம் | P.C. Philemon rajah | *...28* |
| தேவன் அநீதியுள்ளவரல்லவே! | Benny Martin | *...33* |


## தேவன் - God


| | | |
|---|---|---|
| ஏன் தேவனே? | Jared Green | *...37* |
| நித்திய உத்திரவாதம்... | Robert Johnson | *...39* |
| தேவன் கட்டுப்பாட்டிலிருக்கிறார் | Terry Wheeler | *...41* |
| நம் தகப்பன் | Betty burton Choate | *...42* |


## ஆராதனை - Worship


| | | |
|---|---|---|
| கர்த்தரை ஸ்தோத்தரி | Raymond Elliott | *...47* |
| நம்முடைய ஆராதனை... | David Conley | *...48* |
| வந்து எங்களோடு ஆராதியுங்கள் | Larry Murdock | *...50* |


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை - Daily Christian Living


| | | |
|---|---|---|
| தேவனால் உங்களுக்காக தெரிந்து... | Aaron Cozort | *...56* |
| உன் பேச்சு உன்னை... | Paul Holland | *...59* |
| தேவன் எவ்வளவு நெருக்கமாக... | Cliff Holmes | *...62* |


## வேதாகம கதாபாத்திரம் - Bible Character


| | | |
|---|---|---|
| நீங்கள் எதைப் பார்க்க வந்தீர்கள்? | David R. Kenney | *...64* |
| பவுல் ஊழியத்தில் அமர்த்தப்படுதல் | Brian R. kenyon | *...66* |

## வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live


| | | |
|---|---|---|
| எல்லா ஆவிகளையும் நம்ப வேண்டாம் | Sunny David | ...72 |


## சபை - The Church


| | | |
|---|---|---|
| கிறிஸ்து எனக்காக தம்மைத் தாமே... | Mark N. Posey | ...76 |
| மனிதனால் உண்டாக்கப்பட்ட மதம் | T. Pierce Brown | ...79 |


## வேதாகம வரலாறு - Bible History


| | | |
|---|---|---|
| உங்கள் பிதாக்கள் என்னை... | Mark Mcwhorter | ...84 |


## தேவனுடைய வார்த்தை - Word Of God


| | | |
|---|---|---|
| இன்று ஏசாயா எதை பிரசங்கிப்பார் ? | Hiram Kemp | ...88 |
| முட்டாளின் மையக்கரு பாடல் | Denny Petrillo | ...92 |
| இரண்டு பேராவது, மூன்று பேராவது... | Louis Rushmore | ...94 |


## செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action


| | | |
|---|---|---|
| இந்த கடினமான காலகட்டத்தில்... | Martha Lynn Rushmore | ...96 |


## இரட்சிப்பு - Salvation


| | | |
|---|---|---|
| ஜெபம் அருவருப்பாகும் போது... | Ernest S. Underwood | ...98 |
| நீங்கள் விருத்தசேதனம் பண்ணப்பட... | Gary C. Hampton | ...99 |
| ஏழையாகிவிட்ட ராஜா | David A. Sargent | ...102 |


## கிறிஸ்தவ இல்லம் - Christian Home


| | | |
|---|---|---|
| குடும்ப ஜெப நேரத்தின்... | Rodney Nulph | ...103 |
| இள வயதினரின் சவால்கள் | Volois Hooper | ...106 |



1932 – 2008

# ஊழியம்! சபையின் பணி

## Evangelism! The work of the church

*J.C. choate*

இதை கற்பனை செய்து பாருங்கள். ஒருவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதை புரிந்து கொள்கிறார், பின்பு அவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார். உடனடியாக, தேவன் அந்த நபருடைய அற்பமான சரீரத்தை, மகிமையான சரீரமாக மாற்றுகிறார், அந்த நபரும் நித்திய வீட்டிற்குள் பிரவேசிக்கிறார். அது அற்புதமாக இருக்குமல்லவா? எந்தப் போராட்டங்களும் இல்லை, எந்த சோதனைகளுமில்லை. ஓர் ஆத்துமா கூட இழக்கடிக்கப்படுவதில்லை. என்ன ஓர் அருமையான திட்டம்!

ஏன் தேவன் இப்படி யோசிக்கவில்லை? பொறுங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனுடைய குடும்பத்தில் பிறந்த உடனேயே தேவனோடு இருப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், இரட்சிப்பின் செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல இந்த உலகத்தில் யார் தான் இருப்பார்? யாருமே இருக்க மாட்டார்கள்! காரியம் இப்படி இருந்தால், சுவிசேஷத்தின் இரட்சிக்கும் வல்லமை சபை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலேயே முடிவுக்கு வந்திருக்கும். இந்த ஓட்டுமொத்த உலகம் முழுலதும் அந்தக் காரத்திற்குள் மூழ்கிப் போயிருக்கும்.

எனவே தான், நாம் இந்த அந்நிய சூழ்நிலையில், அதாவது சாத்தான் அதிபதியாக இருக்கும் இருள் சூழ்ந்த இந்த உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் மனமாற்றமடைந்த அந்த சம்பவத்தை திரும்பிப் பாருங்கள். பெரும்பாலும், உங்களிடத்தில் அன்பும் அக்கறையும் கொண்ட ஏதோ ஒரு கிறிஸ்தவர் உங்களுக்கு சத்தியத்தை போதித்ததின் பலன்தானே இன்று நீங்கள் கிறிஸ்தவராய் இருக்கிறீர்கள். நாம் இவ்வுலகில் சாத்தான்கொண்டு வரும் பாடுகளையும் உபத்திரவங்களையும் சகித்துக் கொண்டிருப்பதன் நோக்கம் ஒரு சிலரையாவது பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதுதான். நாம் இந்த உலகில் சிலரை நித்திய ஆக்கினையிலிருந்து இரட்சிப்பதன் மூலமாக கனி கொடுக்க முடியும்.

இயேசு இவ்வுலகத்திலிருந்து கடந்து செல்வதற்கு முன்பாக, தம்மை

பின்பற்றுபவர்களிடம் இவ்விதமாய் இறுதி வார்த்தைகளைச் சொன்னார். பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் [மாற்கு 16:16]. சீஷர்கள் சுவிசேஷத்தை அறிவித்ததன் விளைவாக அநேகர் கீழ்படிந்தார்கள். ஆனால், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று என்று நாம் பார்க்கிறோம் இருந்தபோதிலும், சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து பிரசங்கித்தார்கள் [அப் 8:4] என்றும் வாசிக்கிறோம். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் அர்ப்பணிப்பின் காரணமாக ஒரு தலைமுறை காலகட்டத்திலேயே பவுலால் தேவ ஆவினால் ஏவப்பட்டு இவ்விதமாய் எழுத முடிந்திருக்கிறது [கொலோசெயர் 1:5,6].

இயேசு பிரதான கட்டளையைக் கொடுத்து 2000 ஆண்டுகள் ஆன பின்பு கூட, இயேசு கிறிஸ்தவர்களுக்கு கொடுத்த கட்டளையோ, அல்லது இவ்வுலகத்திலே அவர்களுக்காக விடப்பட்டிருக்கிற வேலையோ மாறவே இல்லை. ஆனால், மக்கள் தொகை பெருகிவிட்டது. எனவே, குறைந்த அளவு கிறிஸ்தவர்களால் எப்படி உலகின் 700 கோடி மக்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடியும்?

மனித முயற்சிகளால் இந்த சுவிசேஷப் பணி சாத்தியமே இல்லை. ஆனால், இயேசு இவ்விதமாய் வாக்குத்தத்தம் செய்தார்: நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். [மத்தேயு 28:20]. யோவான் 14:18 ல் இயேசு இவ்விதமாய் சொன்னார். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன் [யோவான் 14:18]. இங்கு செய்தி என்ன? இயேசு நம் கரங்களில் ஒப்புவித்திருக்கின்ற பணி அவருடைய பணியாயிருக்கிறது. அவருடைய பணியை நாம் செய்யும்போது, பாதையின் ஒவ்வொரு அடியிலும் அவர் நம்மோடு இருப்பார்.

இந்த உன்னதமான பணி மனித முயற்சியினால் மாத்திரம் செய்யப்பட வேண்டியதாயிருந்தால் அது அசாத்தியமாகும். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். [மத்தேயு 28:20].

நடைமுறை மொழியில், அவருடைய உன்னதமான பணியை உலகெங்கும் எடுத்துச் செல்வதன் பொருள் என்ன? நம் வரலாற்றை சற்று திரும்பிப் பார்த்தால், ஒவ்வொரு காலகட்டத்திலும் சபை உலகெங்கும் சுவிசேஷத்தை பரப்ப சில கருவிகளை தந்திருக்கிறார். தேவன் தம்முடைய பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். அவர் சுவிசேஷத்தைப் பரப்ப நமது கரங்களில் கருவிகளை தந்திருக்கிறார். ஆனால், அந்தக் கருவிகளை நாம் பயன்படுத்தலாமா அல்லது பயன்படுத்த வேண்டாமா என்பதை பற்றிய தீர்மானம் எடுப்பது நம்முடைய பொறுப்பாய் இருக்கிறது.

இன்றைய நாட்களில் உலகின் மிகப்பெரிய மக்கள் தொகைக்கு ஊழியத்தை எடுத்துச் செல்ல, செயல்படுகின்ற, மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கிறிஸ்தவர்கள் அவசியப்படுகிறார்கள். அத்தகைய கிறிஸ்தவர்கள் நம் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். உலகெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல, கிறிஸ்தவர்கள் உலகெங்கும் பயணிக்க வேண்டியதாய் இருக்கிறது. நமக்கு அந்த சுதந்திரம் இருக்கிறது.

தேவன் நமக்கு உலகெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தேவையான கருவிகளைத் தந்திருக்கிறார். ஆனால், உலகில் பெருகி வரும் மக்கள் தொகையை கணக்கில் கொண்டால், முதல் நூற்றாண்டு கருவிகளைக் கொண்டு நம்மால் அதிகமான ஆத்துமாக்களை சந்திக்க முடியாது. எனவே, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களிடம் இல்லாத கருவிகள் நம்மிடம் என்னவெல்லாம் இருக்கின்றன?

இன்று வேதாகமம் கிட்டத்தட்ட உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் அச்சிடப்பட்டு பலருடைய கரங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அச்சிடப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் ஏற்கனவே புழக்கத்தில் இருக்கிறபடியால், நாம் சுவிசேஷத்தை ஜனங்களிடத்தில் எடுத்துச் செல்ல நமக்கு முன் ஒரு பாதை ஆயத்தமாய் இருக்கிறது.

தபால் துறை உலகெங்கிலும் நாம் வேதாகம பாடங்களை அனுப்பப் பேருதவியாக உள்ளது.

வானொலி மூலமாகவும் நாம் சுவிசேஷத்தை உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு கொண்டு செல்ல முடியும்.

அச்சு இயந்திரங்கள், கணிணிகள் மற்றும் நகல்கள் எடுக்கும் இயந்திரங்கள் மூலமாக செய்திகளை நகலெடுத்து நாம் அனைவருக்கும் விநியோகிக்க முடியும்.

செயற்கைக்கோள்கள் மூலமாக தொலைக்காட்சி உதவியுடன் நாம்

சுவிசேஷத்தை உலகமெங்கும் எடுத்துச் செல்ல முடியும்.

இன்றைய நாட்களில் உலகெங்கும் அலைபேசி சேவைகள் மிக மலிவாகக் கிடைக்கிறபடியால் அவைகளைப் பயன்படுத்தி நாம் சுவிசேஷத்தை பிரசிங்க முடியும்.

இன்றைய நாட்களில் உலகில் உள்ள தொலைதூர இடங்களில் கூட இணைய சேவைகள் கிடைக்கின்றன. பல சபைகள் தங்கள் இணையதளங்களில் ஆயிரக்கணக்கான வேதாகம பாடங்களையும், செய்திகளையும் சேமித்து வைத்திருக்கின்றன. எனவே, இணையத்தின் மூலமாகவும் தேவச் செய்தியை நாம் உலகெங்கும் எடுத்துச் செல்ல முடியும்.

Facebook, Twitter, YouTube, Instagram, zoom போன்ற சமூக ஊடகங்கள் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் விதத்திற்கு வலு சேர்க்கின்றன. ஒவ்வொரு நாளும் புதிய புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவைகளெல்லாம் உலகப் பிரகாரமான பயன்பாட்டிற்காக இருந்தாலும் கூட, உண்மையில், உலகம் முழுவதும் சர்வ சிருஷ்டிக்கும் நாம் சுவிசேஷத்தை சபை எடுத்துச் செல்ல தேவன் அருளிய சாதனங்களாகும். நாம் மேற்ச்சொல்லப்பட்ட கருவிகளை எல்லாம் எடுத்து பயன்படுத்துவோமா?

நாம் சபையாக, தனிப்பட்ட கிறிஸ்தவர்களாக, நம்மிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற காரியங்களுக்கு என்ன செய்வோம்? ✞

---

## எதைத் தெரிந்து கொள்ளுகிறீர்கள்?

- *தேவனையா அல்லது அந்நிய தேவர்களையா?* *(யோவான் 24:1415)*
- *கிறிஸ்துவையா அல்லது பேலியாளையா?(கொரிந்தியர் 6:15)*
- *ஜீவனையா அல்லது மரணத்தையா? (உபாகமம் 30:1519)*
- *கிறிஸ்துவின் சபையையா அல்லது மார்க்கப்பிரிவினையையா?* *(மத்தேயு 16:18)*
- *தேவனுடைய வார்த்தையையா அல்லது மனித பாரம்பரியத்தையா?* *(மத்தேயு 16:8)*
- *பரலோகத்தையா அல்லது நரகத்தையா? (வெளி 21:14,8)*



# நீங்கள் ஆவிக்குரியப் பிரகாரமாக குருடர்களாக இருக்கிறீர்களா?

## Are you spiritually Blind?

*Jerry Bates*

**ஆ**விக்குரிய பிரகாரமாக குருடராக இருப்பது என்பது ஒரு நித்திய சோக சம்பவமாகும். இக்கட்டுரையை வாசிக்கும் பெரும்பாலானோர் தாங்கள் ஆவிக்குரியப் பிரகாரமாக குருடர்களாக இல்லை என்று உடனே சொல்வார்கள் என்று நிச்சயமாய் எண்ணுகிறேன். இது உண்மையாக இருந்தாலும் கூட, இந்த வாக்கியத்தை நாம் உறுதி செய்ய துரிதப்பட வேண்டாம்.

நாம் ஒரு காலகட்டத்தில் ஆவிக்குரிய குருட்டாட்டத்தில் இருந்தோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய ஜீவியங்களை இயேசு கிறிஸ்துவுக்கு நாம் சமர்ப்பிப்பதற்கு முன்பாக நாம் எல்லோருமே பாவத்தில் இழந்து போயிருந்தோம். எபேசியர் 5:8 ல் முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள் என்று சொல்கிறார். வேத வாக்கியங்கள் அந்தகாரத்தை பாவத்தோடு தான் தொடர்புபடுத்துகின்றன. சரீரப்பிரகாரமாக நாம் அந்தகாரத்தில் நடக்கும் போது வழியில் இருக்கும் பொருள்களைஅல்லது தடைகளை நம்மால் பார்க்க முடியாதபடியால் அதன் விளைவாக நாம் குருடர்களாகி விடுகிறோம். அதே விதமாக நாம் பாவத்தில் நடக்கும் போது அந்தகாரத்தில் இருக்கிறபடியால் ஆவிக்குரிய பிரகாரமாக குருடர்களாகி விடுகிறோம். ஒட்டுமொத்த மனித இனமும் இறுதியாக தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதை தெரிந்து கொண்டு ஆவிக்குரிய பிரகாரமாக குருடாகி விடுகிறது. பவுல் இந்த ஆவிக்குரிய உண்மையை ரோமர் 3:23யை எழுதும்போது உறுதி செய்கிறார். **எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி** என்று, (ரோமர் 3:23). ஆம், ஆவிக்குரிய பிரகாரமாக குருடர்களாக இருப்பது என்பது ஒரு பரிதாபகரமான நிலைதான். இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து இத்தகைய நிலைமையிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாகத்தான் இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எபேசியர் 5:8 ன் பாதி பகுதி நம்மால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய மீதி பகுதியில் பவுல். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்று குறிப்பிடுகிறார். நாம் எல்லோரும் ஒரு காலகட்டத்தில் அந்தகாரத்தில் இருந்தோம் அதே நிலையில் இப்போது நாம் தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை. உலகத்தின் ஒளியாய் இருக்கிற இயேசு கிறிஸ்துவை நாம் பின்பற்றுவதன் மூலமாக நாம் உலகத்தின் ஒளியாக

மாற முடியும் [யோவான்9:5] இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகளை சொல்லிவிட்டு அதை நிரூபிப்பதற்காக ஒரு பிறவிக்குருடனை பார்வையடையச் செய்கிறார். இயேசு கிறிஸ்து நம்மை அந்த காரப்பிடியிலிருந்து விடுவிக்கும் படியாகத்தான் இவ்வுலகத்திற்கு வந்தார் இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தது குறித்து பவுல் இவ்விதமாய்ச் சொல்கிறார் 'அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிட த்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். [அப்போஸ்தலர் 26:18]. நமக்கு பார்வையை மாத்திரமே தர முடியும் ஆனால், அதற்கு நாம் பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானத்தில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் [மாற்கு 16:16]. நாம் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறவில்லை என்றால் ஆவிக்குரியப் பிரகாரமாக அந்தகாரத்திலேயே இருப்போம்.

வெளிப்படுத்தின விசேஷம்3:14-22 வசனங்களில் லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில், அதிலும் குறிப்பாக 17 ஆம் வசனத்தில் அங்கே இருந்த கிறிஸ்தவர்கள் தாங்கள் தரித்திரர்களாகவும், பரிதபிக்கப்படத்தக்கவர்களாகவும், குருடர்களாகவும் இருந்ததை அறியாதிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். வெளிப்படையாகவே அந்த கிறிஸ்தவர்கள் சரீரப் பிரகாரமாக குருடர்களாக இருக்கவில்லை. அது மாத்திரமல்ல, அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்காமலும், துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்ததினாலும் ஆவிக்குரிய பிரகாரமாக குருடர்களாக இருக்கவில்லை. அவர்கள் அனலும் இல்லாமல் குளிரும் இல்லாமல் இருந்தபடியினால் தான் ஆவிக்குரிய குருட்டாட்டத்தில் தள்ளப்பட்டார்கள் [3:16]. துரதிஷ்டவசமாக, இன்றைய நாட்களிலும் அநேக கிறிஸ்தவர்கள் அதே நிலைமையில் இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நாம் ஏன் சிலர் ஆவிக்குரிய பிரகாரமாக குருடர்களாய் இருக்க தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆச்சரியப்படலாம். அதற்கு அநேக காரணங்கள் உண்டு. இருந்தபோதிலும் நாம் சுருக்கமாக மூன்று காரணங்களைப் பார்க்கலாம்.

முதலாவது, சிலர் பயத்தினாலே ஆவிக்குரியப் பிரகாரமாக குருடர்களாய் இருப்பதை தெரிந்து கொள்கிறார்கள். யூதர்கள் அந்தப் பிறவிக் குருடனுடைய பெற்றோரிடம் இவன் எப்படி பார்வையடைந்தான் என்று கேட்டார்கள் [யோவான்9:19] தங்கள் குமாரனுக்கு யார் பார்வை கொடுத்தார் என்பது தெரியும். ஆனாலும் கூட, அவர்கள் யூதர்களுக்கு பயந்தபடியால் அதை தெரிவிக்க வில்லை [9:22]

மதத்தலைவர்கள் என்ன செய்வார்கள் என்பதை அறிந்திருந்தபடியால் அவர்கள் தங்கள் குமாரனுக்கு பார்வை கொடுத்தது

இயேசு தான் என்று வெளிப்படையாக அறிவிக்கப் பயந்தார்கள். எனவே அந்தப் பிறவிக் குருடனுடைய பெற்றோர் பயத்தின் காரணமாக ஆவிக்குரியப்பிரகாரமாக குருடர்களாய் இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். அதேபோல் இன்றைய நாட்களிலும் இயேசுவைப் பற்றிய சத்தியத்தைப் பலர் விசுவாசிக்கிறார்கள். ஆனால், மற்றவர்கள் தங்களைப் பற்றியும் தங்கள் விசுவாசத்தை பற்றியும் என்ன நினைப்பார்கள் என்று பயந்து விடுகிறார்கள். எனவே, அவர்கள் சத்தியத்திற்காக எதையும் செய்வதில்லை. அவர்களுடைய விசுவாசம் செத்ததாய் இருக்கிறது அல்லது மதிப்பற்றதாய் இருக்கிறது. யாக்கோபு 2:26. அவர்கள் ஆவிக்குரிய குருட்டாடத்திலேயே இருந்து விடுகிறார்கள்.

இரண்டாவது, தங்கள் மதத் தலைவர்களுக்கு விசுவாசமாய் இருக்க வேண்டும் என்பதற்காக குருட்டாட்டத்திலேயே இருந்து விடுவதை தெரிந்து கொள்கிறார்கள். இந்தப் பிறவிக் குருடன் சுகமான பிறகு மொத்த வியாதியஸ்தரும், குருடர்களும் திரளாக இயேசுவிடத்தில் கொண்டு வரப்பட்டிருப்பார்கள் என்று நாம் நினைக்கலாம். ஆனால், அப்படி வேதாகமத்தில் ஒரு வசனத்தில் கூட வாசிக்க முடிவதில்லை. அவருக்கு மாறாக அந்தக் குருடனின் நண்பர்கள் மற்றும் அயலகத்தார் அவனை பரிசேயரிடத்தில் தான் கொண்டு வந்தார்கள் (யோவான் 9:8,13). அவர்கள் அந்தப் பிறவிக் குருடனுக்கு பார்வை கிடைத்ததை குறித்து மகிழ்ச்சி அடையாமல் (இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக இப்படி ஒரு சம்பவம் நடந்தது இல்லை) இயேசு அந்த பிறவிக் குருடனை பார்வையடைய செய்தது ஓய்வு நாளாய் இருந்தபடியால் அதைக் குறித்து விமர்சனம்தான் செய்தார்கள். அதன் விளைவாக, இந்த ஜனங்கள் பார்வையடைந்தவனை தங்கள் மதத்தலைவரிடத்தில் கொண்டு வந்து இந்த பிரச்சனையை தீர்த்து வைக்கும்படியாக கேட்டுக் கொண்டார்கள். இந்த மதத் தலைவர்களிடம் அதிகாரம் இருந்தது. அது மட்டுமில்லாமல் அதன் காரணமாக இவர்களுக்கு எல்லா பிரச்சனைகளுக்கும் விடை தெரியும் என்னும் எண்ணம் மக்கள் மத்தியில் இருந்தது. இந்த மதத் தலைவர்கள் ஒன்றை நம்புவார்கள் அதேபோல் இவர்கள் ஒன்றை அங்கீகரித்தால்தான் இந்த ஜனங்களும் ஒன்றை அங்கீகரிப்பார்கள் என்று தோன்றுகிறது. இன்றைய நாட்களிலும் கூட பெரும்பாலான மக்கள் இவ்விதமான சூழ்நிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதாவது பெரும்பாலான மக்கள் ஏதோ ஒரு மதத் தலைவரை பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள், தலைவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி தான் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்து கொள்கிறார்கள். இவ்விதமான வாழ்க்கை முறை எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை இயேசு கிறிஸ்து சுட்டிக்காட்டுகிறார். அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள், குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்' (மத்தேயு 15:14). நாம் மனுஷனுடைய உபதேசங்களை அல்ல வேதாகமத்தில் வெளிப்படுத்தப்

பட்டடிருக்கிற உண்மையான உபதேசங்களைப் பின்பற்றுகிறோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் (மத்தேயு 15:7–9).

மூன்றாவது, பெரும்பாலான ஜனங்கள் பெருமையினால் குருடர்களாக இருக்கிறார்கள். யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் காணப்படும் மதத் தலைவர்கள் இவ்விதமான மோசமான நிலைக்கு மிகச் சிறந்த உதாரணங்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் தெய்வீக தன்மையை உறுதிப்படுத்தும் அற்புத அடையாளங்களை அவர்கள் நேரில் கண்டார்கள். கண்ட அற்புதத்தை மறுக்க முடியாது. ஆனால், அதே நேரத்தில் அதை அவர்களால் ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. தங்களுக்குப் பல காரியங்களில் விசாலமான பார்வை இருப்பதாக சொல்லிக்கொண்ட அவர்கள்தான் உண்மையில் குருடர்களாக இருந்தார்கள். வாழ்க்கையில் தங்கள், பெருமையின் காரணமாக அந்தப் பிறவிக்குருடனால் சொல்லப்பட்ட எளிமையான சத்தியத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்தார்கள் (யோவான் 9:30–34) மேலும், அவர்கள் இந்தப் பிறவி குருடனை பரிகாசம் செய்து ஜெப ஆலயத்திற்கு புறம்பாக்கினார்கள். இந்தப் பிறவி குருடனால் ஆவிக்குரிய காரியங்களை போதிக்க முடியாது என்று எண்ணினார்கள்.

அதைப்போல் இன்றைய நாட்களில் பெரும்பாலானோர் வேகமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பலர் தங்கள் கல்வியை குறித்தும், சமுதாயத்தைக் குறித்தும் பெருமை பாராட்டி வேதாகம உபதேசங்களை பரிசீலித்துப் பார்க்க மறுக்கிறார்கள். சபையிலும் கூட சிலர் குறைவாக படித்தவர்களை தரக்குறைவாக பார்ப்பதையும், அவர்களுடைய ஆவிக்குரிய கருத்துக்களை ஒரு பொருட்டாக எண்ணாமல் இருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. அவர்கள் இருக்கும் நிலையில் திருப்தி அடைந்து, வேதாகம உபதேசங்களைப் பரிசீலித்து பார்க்க கூட மறுக்கிறார்கள். அவர்கள் யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் இயேசுவால் விவரிக்கப்பட்டிருக்கும் மதத் தலைவர்களை போல் இருக்கிறார்கள்‘ இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது. நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலை நிற்கிறது என்றார் (யோவான் 9:41). இவ்விதமான ஜனங்களின் தர்ம சங்கடமான நிலையை ஏசாயா படம் பிடித்து காட்டுகிறார். தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ! என்று (ஏசாயா 5:21).

யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் இந்த அற்புதம் ஆவிக்குரிய குருட்டாட்டத்தின் அபாயத்தை நமக்கு நினைவுப் படுத்துகிறது. ஒருவர் தான் குருடராயிருந்து கொண்டு நான் காண்கிறேன் என்று சொல்வது எளிதானது. ஒருவர் தான் சரீரப் பிரகாரமாக குருடராயிருந்தால் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. உண்மையில், ஒருவர் ஆவிக்குரியப்பிரகாரமாக குருடராக இருந்தால் தான் வெட்கப்பட வேண்டும். நாம் எப்போதுமே நம் வாழ்க்கை குறித்து ஆழமாக சிந்தித்து ஆவிக்குரியப்பிரகாரமாக நம்மால் உண்மையாகவே பார்க்க முடியும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.



# கிறிஸ்தவத்தின் முரண்கள் : தனியாக, இருந்த போதிலும் தனியாக இல்லாமல்

## Paradoxes of Christianity: Alone, yet Not alone

*Shane Fisher*

**நா**ம் தலைப்பில் காணும் வாக்கியம் முரண்பட்டது போல தோன்றினாலும் இது ஓர் உண்மையான கூற்றாகும். பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் முரண்பாடுள்ள வாக்கியங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இக்கட்டுரையில் நாம் தனியாக இருந்த போதிலும் தனியாக இல்லாமல் என்று முரண்பட்டது போல தோன்றும் இவ்வாக்கியத்தைப் பற்றி பார்ப்போம்.

### இருக்கின்ற பிரச்சனை: ஆவிக்குரிய தனிமை

தேவன் நம்மை சமூக வாசிகளாகத்தான் உண்டாக்கியிருக்கிறார். மனித உறவுகளில் சமூகப் பங்கு நிச்சயமாக இருக்கிறது. இவ்வுலகில் நாம் நண்பர்களிடம் நட்புக் கொள்கிறோம் (நீதிமொழிகள் 17:17; 18:24). சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் தேவன் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று சொன்னார். எனவே தான், தேவன் மனிதனுக்கு ஏற்றத் துணையை உண்டாக்கினார் (ஆதியாகமம் 2:18–24). விவாகத்தில் கணவனும் மனைவியும் நல்ல நண்பர்களாய் இருக்க வேண்டும். இந்த உறவு அப்படியே கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உண்டான உறவைப் படம் பிடித்துக் காட்டுகிறது( எபேசியர் 5:22,23).

காரியங்கள் இப்படியாயிருக்க சமூகத் தனிமை என்பது மிகவும் கொடுமையானது. ஆனால், அதைவிட கொடுமையானது ஆவிக்குரிய தனிமையாகும். இந்த ஆவிக்குரிய தனிமை என்பது தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டிய ஒவ்வொரு நபரும் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்த பிறகு தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வதை தெரிந்து கொள்ளும்போது ஏற்படுகிறது. (உபாகமம் 1:39; ரோமர் 7:7–13) 1 யோவான் 3:4). மனிதன் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யும்போது அவன் தேவனுடைய உறவிலிருந்து பிரிந்து விடுகிறான் (ஏசாயா 59:1,2).

இந்தப் பிரிவு ஏதேன் தோட்டத்திலேயே ஏற்பட்டுவிட்டது. ஆதாமும், ஏவாளும் தேவனோடு விசேஷித்த உறவு வைத்திருந்தார்கள். ஏவாள் சர்ப்பத்தால் சோதிக்கப்பட்டபோது, தடை செய்யப்பட்ட கனியைப் புசித்து ஏவாளும், ஆதாமும் பாவத்தில் விழுந்தார்கள் (ஆதியாகமம் 3:1–6). அந்தப் பாவத்திற்கு முன்பு ஆதாமும் ஏவாளும் தங்கள் சிருஷ்டிகரோடு அற்புதமான உறவு வைத்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது. பிற்பாடு அவர்களுடைய பாவம் அவர்களின் ஆவிக்குரிய தனிமைக்குப்



காரணமாகிவிட்டது. அவர்கள் தேவனிடத்திலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டார்கள். இந்த ஆவிக்குரியத் தன்மை போகப்போக மிக மோசமாகிவிட்டது. ஏனென்றால், ஆதாம் ஏவாளுடைய குமாரனாகிய காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலைச் செய்து விட்டான். வேதவாக்கியம் இந்த காயீனைப்பற்றி இவ்விதமாய் சொல்கிறது அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான் [ஆதியாகமம் 4:16]. இந்தக் காயீன் தேவன் இல்லாமல் ஆவிக்குரிய தனிமையில் இருந்தான். தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டிய ஒவ்வொரு மனிதனும் அல்லது மனுஷியும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய தெரிந்து கொள்வதன் மூலமாக ஆதாம் ஏவாள் மற்றும் காயீனுடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறார்கள். நவீன உலகிலும் கூட, பாவம் என்பது என்றும் இருக்கின்ற ஒரு பிரச்சனையாக இருக்கிறது.

பிரசித்திப் பெற்ற இயேசு கிறிஸ்துவின் உவமையாகிய கெட்ட குமாரனுடைய சம்பவம் பாவத்தின் தன்மையை விரிவாக விளக்குகிறது [லூக்கா 15:11-31]. ஒருவர் இந்த உவமையை ஜாக்கிரதையாக வாசிக்கும் போது, இழந்து போன இரண்டு குமாரர்களைப் பற்றி வாசிக்க முடியும். வீட்டிலிருந்து வெளியேறின முதல் குமாரன், தான் ஆவிக்குரிய தனிமையாய் இருந்ததை உணர்ந்தான், அதனால்தான் அவன் தன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பி வரத் தீர்மானித்தான். அந்த கெட்ட குமாரன் திரும்பி வந்தபோது, அவனுடைய தகப்பனும், அவனுடைய மூத்த சகோதரனும் [மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும் கூட]அவனை வீட்டிற்கு வரவேற்றார்கள். ஆனால், இந்த உவமையின் முடிவில், மூத்த சகோதரன் தான் தகப்பனுடைய வீட்டிற்கு வெளியே நின்றான். அவன் தேவனிடத்திற்கு திரும்ப வேண்டிய பரிசேயர்களை அடையாளப்படுத்தினான்.

மனிதனுடைய இருதயத்தில் ஓர் வெற்றிடம் இருக்கிறது, அவ்வெற்றிடத்தை தேவனால் மாத்திரமே நிரப்ப முடியும். தேவனுக்கு முன்பாக நம்முடைய ஆவிக்குரிய திவாலான நிலையை உணர்ந்து, அவர் நமக்கு மிகவும் அவசியம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் [மத்தேயு 5:8]. தேவன் தம்முடைய சாயலில் உண்டாக்கப்பட்ட மனித இனத்தை மீட்கும் திட்டத்தை, உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே தீட்டிவிட்டார். கடைசியாக நாம் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கும், நாம் தனியே விடப்படாதபடிக்கும், நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படிக்கு தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பத் தீர்மானித்தார் [1 பேதுரு 1:20; எபேசியர்1:3-14]. நாம் தேவனோடு சரியான

உறவு வைத்துக் கொண்டால், தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலமாக, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம் பாவங்களை கழுவி சுத்திகரிக்கும். (அப்போஸ்தலர் 22:16; ரோமர் 6:3-4; கொலோசெயர் 2:11-12).

## தனியாக, இருந்தபோதிலும் தனியாக இல்லாமல்

நாம் கிறிஸ்தவர்களான பிறகு கூட, சில சமயங்களில் நாம் தனியாக இருப்பது போன்ற உணர்வு உண்டாகும். நாம் சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்கு கீழ்படிவதினால் நம் வாழ்க்கை எப்போதும் சௌகரியமாகவும், சுகமாகவும் இருக்கும் என்று பொருள்படாது. உண்மையைச் சொல்லப் போனால், நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதினால் சில வேளைகளில் வாழ்க்கை மிகவும் கடினமான ஒன்றாக மாறி விடுகிறது. நமக்கு பலமான விசுவாசம் இருந்தால், நாம் தனியாக இல்லை என்பதை உணர்ந்து கொள்வோம்.

யோசேப்பைப் பற்றி எண்ணிப் பாருங்கள் (ஆதியாகமம் 37-50). யோசேப்பு தன் சகோதரர்களாலே அந்நிய தேசத்தில் அடிமையாக விற்கப்பட்டார். அங்கே போத்திபாரின் மனைவி யோசேப்பை தன் வலையில் சிக்க வைக்க முயற்சித்தும், அதற்கு யோசேப்பு சம்மதியாதபடியால் அவன் மீது தவறான குற்றச்சாட்டுகளை வைத்தாள். அதன் காரணமாக யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்டார். அத்தகைய சூழ்நிலையில் யோசேப்பு தான் கைவிடப்பட்டதாகவும், தனியாக விடப்பட்டதாகவும் தான் உணர்ந்திருப்பார். இருந்த போதிலும், எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் யோசேப்போடு இருந்தார். இதை பிற்பாடு ஸ்தேவான் விளக்குகிறார் (அப்போஸ்தலர் 7:9,10). ஆதியாகமம்39:1-2;21).

தனியாக, இருந்தபோதிலும் தனியாக இல்லாமல் என்பது முரண்பட்டது போல தோன்றினாலும் உண்மைகளை உள்ளடக்கிய இந்த வாக்கியத்தை இன்னும் சில உதாரணங்களுடன் பார்ப்போம்.

முரண்பட்டது போல தோன்றும் மேற்சொல்லப்பட்ட வாக்கியத்தை நம் அன்றாட வாழ்வோடு பொருத்திப் பார்ப்போம். மத்தேயு 14:28-31 வசனங்களில் கலிலேயக் கடலில் பலத்த காற்று வீசின காரணத்தினால் சீஷர்கள் தாங்கள் கடலுக்குள் மூழ்கிப் போய் விடுவதாக எண்ணினார்கள், பலத்த காற்று வீசினபோது இயேசு கிறிஸ்து உறங்கிக் கொண்டிருந்தார். சீஷர்கள் அவரை எழுப்பி கலக்கமும், கவலையும் நிறைந்த கேள்வி ஒன்றை கேட்டார்கள். சீஷர்கள் தாங்கள் தனியாக இருந்ததாக உணர்ந்தார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் தனியாக இல்லை, ஏனென்றால், அப்படகில் இயேசுவும் அவர்களோடு இருந்தார். இன்று நம் வாழ்வில் பெரும் புயல் வீசும் வேளையிலும் கூட, இயேசு நம்மோடுதான் இருக்கிறார். நாம் அதைக் குறித்துப் பயப்படவோ, சந்தேகப்படவோ வேண்டாம் அவர் நமக்கு வழிகாட்டி, இப்பூமிக்கு அப்பால் உள்ள இன்பக்

கானானின் கரையை சமாதானமாக அடைய நமக்கு எல்லா விதத்திலும் உதவி செய்வார்.

மத்தேயு 6:25–34 வசனங்களில் இயேசு கிறிஸ்து நாம் கவலைப்படக் கூடாது என்று சில கட்டளைகளை கொடுத்திருக்கிறார். உண்மையில் அவர் அதை மூன்று முறை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்! அப்படி இருக்கும்போது கவலை நம் ஜீவியத்தை ஆட்கொள்ள நாம் அனுமதிக்கும்போது பாவம் செய்கிறோம். சிருஷ்டிகராகிய பரமப்பிதா பறவைகளுக்குக் கூட பிழைப்பூட்டுகிறார் என்று இயேசு சொன்னார்.

நீங்கள் பாலியல் ரீதியான பாவங்கள் அல்லது மது போதை போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட சிரமப்படுகிறீர்களா? அல்லது ஆபாச படங்களை காண அதீத ஆசை உள்ளதா? யோசேப்பு எப்படிப்பட்ட சவால்களை சந்தித்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். யோசேப்பு தான் அத்தகைய ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபட்டால் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வார் என்பதை உணர்ந்து கொண்டார். அந்த நாளிலே ஓட்டம் பிடித்தது யோசேப்பு மாத்திரமல்ல. யோசேப்பு பிசாசுக்கு எதிர்த்து நின்றபடியால் பிசாசும் ஓட்டம் பிடித்தான். யாக்கோபு 4:7,8 வசனங்கள் இவ்விதமாய்ச் சொல்கிறது. ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். (யாக்கோபு 4:7,8), நாம் சோதனைக்கு எதிர்த்து நின்றாலே போதும், தேவன் நமக்கு தப்பிக் கொள்ளும்படியான போக்கை உண்டாக்குவார் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

நீங்கள் ஆவிக்குரிய தனிமையை உணர்கிறீர்களா? நீங்கள் பரிசுத்தம் நீதியுமுள்ள தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து விட்டோம் எனும் குற்ற உணர்வுடன் இருக்கிறீர்களா? உங்களுக்கு நீங்களே தோண்டிய ஆவிக்குரிய பள்ளத்தை உங்களால் காண முடிகிறதா? அந்த பள்ளத்திற்கு மேல் இயேசு ஒரு பாலத்தைக் கட்டி அதன் வழியாய் நடந்து மறுபடியும் பிறப்பதினால் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து சிருஷ்டிகரிடம் திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார் (2 கொரிந்தியர் 5:17–20; 2 தெசலோனிக்கேயர் 1:7–9). அப்படிச் செய்யும்போது நீங்கள் தேவனுடைய குடும்பமாகிய சபையிலே சேர்க்கப்படுவீர்கள். சபையிலே நாம் தனியாக இல்லை, அங்கே நாம் ஒரு கூட்டமாக இருக்கிறோம். அங்கே நாம் பரலோக பயணத்திற்காக ஒருவருக்கொருவர் உதவ முடியும்,உற்சாகப்படுத்த முடியும்.


✝

# தீர்க்கதரிசியின் மதிகேடு

## The Madness of the Prophet

*B. Arjunan*

**தீ**ர்க்கதரிசிகளின் மூலம் நம்முடைய பிதாவாகிய தேவன் மக்களோடு பேசி வந்தார். இந்த தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்று அதை அப்படியே ஜனங்களுக்கு சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். அதில் ஒரு சில தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல் பணத்தின்மீது ஆசை கொண்டு கர்த்தருடைய வார்த்தைக்குச் விரோதமாக செயல்பட்டனர். அவர்களில் குறிப்பாக பிலேயாம் என்ற தீர்க்கதரிசியும் ஒருவன். இவனைக்குறித்து பேதுரு நமது நீருபத்தில் குறிப்பிடும்போது: **செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள்: அவன் அநீதத்தின் கூலியை விரும்பி** என எழுதியிருக்கிறான் (2பேது. 2:15).



இவ்விதமாக அநேக போதகர்கள் அநீதத்தின் கூலியை விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பிலேயாமின் மதியீனம் ஒரு எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டுள்ளது. **இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி. கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்** (யூதா11). காயீன், ஆதாம் ஏவாளுக் குப்பிறந்த முதல் மகன். ஆனால், அவனோ முதல் கொலையாளியானான். தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலைசெய்து போட்டான்.

இன்றைக்கு அநேகர் இவனுடைய வழியைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அதைப்போல பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடியதைப்போல கூலிக்காக எதையும் செய்யும் படியாக தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். மேலும் கோரா, தாத்தான் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்த்து நின்றதுபோல தேவனுடைய மனிதர்களுக்கு விரோதமாக பேசவும் அவர்களுக்கு எதிர்த்துநிற்கவும் சிலர் துணிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஐயோ! என வேதம் சொல்லுகிறது.

**பிலேயாமைக்குறித்து மேலும் பேதுரு சொல்லும்போது: 'தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான்: பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது'** (2பேது. 2:16). ஒரு தீர்க்கதரிசியானவன் தேவனுடைய வார்த்தைகளைப்பேசுகிறவன். அவன் தேவனுக்கு விரோதமாக போகும்போது வேறொரு தீர்க்கதரிசி அவனுக்கு உணர்த்தவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்லாதபடியால் தேவன் அவன் ஏறிப்போகும் கழுதையின் வாயை திறந்தார். அவனுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான். பேசாத மிருகத்தின் வாயைத்திறந்து பேசும்படியாகவும் அவனுடைய மதிகேட்டைத்தடுக்கும்படியாகவும் கழுதையின் வாயை கர்த்தர் திறந்தார். என்னநடந்தது? **கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு. வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று; கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான்** (எண்.22:23). கழுதை விலகாமல் போயிருக்குமானால் அவன் தேவதூதனால் வெட்டப்பட்டிருப்பான். ஆனால், கழுதை அவனை காப்பாற்றியது என்றே சொல்லவேண்டும். ஏனெனில், அவனுக்கு அது விசுவாசமாயிருந்தது. மீண்டும் அவன் பயணிக்கும்போது; **கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, பிலேயாமின் கீழ்ப் படுத்துக்கொண்டது; பிலேயாம் கோபம் மூண்டவனாகி, கழுதையைத் தடியினால் அடித்தான். உடனே கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்; அது பிலேயாமைப் பார்த்து, நீர் என்னை இப்பொழுதும் மூன்றுதரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது** (எண்.22:27,28). இங்கே ஒரு தீர்க்கதரிசியின் மதிகேட்டை தடுக்க கழுதையின் வாயை கர்த்தர் திறந்தார் எனக் காண்கிறோம்.

இந்தப் பிலேயாமைப்போன்றவர்களுக்கு என்ன வைக்கப் பட்டிருக்கிறது? இவ்வுலகத்திலே தேவனுடைய சித்தத்தின்படி வாழ்ந்து மரிப்பவர்களுக்கு வாடாத ஜீவகீரிடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பிலேயாமைப்போன்றவர்களுக்கு காரிருளே வைக்கப்பட்டிருக்கிறதாக பேதுரு சொல்லுகிறார். **இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது** என்கிறான் [2பேது. 2:17], தண்ணீரில்லாத கிணறுகள் தேவையற்ற ஒன்று. அதைப்போல அநேகர் தண்ணீர் நிற்காக தொட்டிகளை தங்களுக்குக் கட்டிக்கொண்டு வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். இவர்களால் ஒருவருக்கும் பிரயோஜனமில்லை. இவர்கள் தண்ணீரற்ற மேகங்களைப் போல இருக்கிறார்கள். இங்கும் அங்கும் நிலையில்லாமல் வாழக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அநேகரை நாம் உலகத்தில் பார்க்கிறோம். எதிலும் திருப்தியில்லாதவர்கள் என்றே இப்படிப்பட்டவர்களைக்குறித்து சொல்லவேண்டும். மேகங்கள் எப்படி அங்குமிங்கும் பறந்துபோகிறதோ, அதைப்போல இவர்களும் நிலையற்றவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் காரிருளை வைத்துவைத்திருக்கிறார். அதில் அவர்கள் பங்கடைவதினால் அவர்களுடைய நித்திய வாழ்க்கை இருளாயிருக்கும். நித்தியமானவரை ஆராதிக்கிற நீங்கள் எப்படிப்பட்டவர் களாயிருக்கிறீர்கள்? அவர் வாக்குமாறாதவர். ஆனபடியால் நீங்களும் உங்களுடைய ஜீவியத்தில் வாக்குமாறாதவர்களாயிருங்கள். தேவன் ஒரு முறை சொல்லியவற்றை மாற்றுகிறவரல்ல. இதை அறியாத பிலேயாமைப்போன்ற தீர்க்கதரிசிகள் அறியவில்லை. இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற நீங்கள் முதலாவது கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் அறிந்துகொள்ளுங்கள். மேலும், அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள்.

**மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்** என நீதிமொழிகள் புத்தகத்தை எழுதின சாலொமோனுடைய நீதிமொழிகள் 16:25-ல் படிக்கிறோம். ஆம், மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி அவனுடைய பார்வைக்கு நல்ல வழியாகத் தோன்றும். ஆனால், அதனுடைய முடிவோ மரணவழியாக இருக்கிறது. இன்றைக்கு அநேகர் கண்போன போக்கிலே போய்க் கொண்டு அது சிறப்பான வழி என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

முடிவிலே அவர்கள் ஏமாற்றப்படுவார்கள். அப்பொழுது அவர்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்ப்போய்விடும். அன்பான நண்பரே, வாசகரே சற்றே உன் வழிகளை ஆராய்ந்துபார். நம்மை நேசிக்கிற தேவன் ஒரே ஒரு வழியே ஏற்படுத்தியிருக்கிறார். அது ஜீவ வழியாக இருக்கிறது. மரணத்திற்கு நம்மை விடுவிக்கும் வழியாக இருக்கிறது, அதைத் தெரிந்துகொள். நீ மாம்சத்திலே இருந்துகொண்டு எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லாதே: **உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று** தூதனுக்கு முன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்? (பிர. 5:6).

**ஒரு தீர்க்கதரிசியானவன் எப்படியிருக்கவேண்டும்?**

**ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக்காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்** என மிகத் தெளிவாக மல்கியா 2:7–ல் காண்கிறோம். இப்படியிருக்கவேண்டிய ஒரு தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தைகளை மீறி நடக்கலாமா? உலக காரியங்களில் சிக்குண்டு பண ஆசைக்கு அடிபணிந்துபோகலாமா? அவனுடைய உதடுகள் அறிவைக்காக்கவேண்டுமல்லவா. அவனுடைய வாயிலே ஜனங்கள் வேதத்தை தேடுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே,

இன்று அநேகர் கர்த்தர் சொல்லாத காரியங்களை சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களா? அன்பானவர்களே, அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை சொல்லுகிறார்களா என்பதை நீங்கள் வேதவசனத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அப்படி சொல்லாதவர்கள் மதிகெட்ட தீர்க்கதரிசியாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நம்பி மோசம்போகாதிருங்கள். நீங்கள் ஒரு ஆசாரியனாக அதாவது தேவனுடைய ஊழியனாக இருப்பாயானால் உன்னுடைய வாயிலே தேவனுடைய வார்த்தைகளை மட்டும் வை அதனோடே ஒன்றையும் கூட்டாதே குறைக்கவும் செய்யாதே. கூட்டினால் உன்னோடு வாதைகளை தேவன் கூட்டுவார் என்பதை அறி, உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

✝

# சோர்ந்துபோக வேண்டாம்

## Don`t Get Fatigued

*P.c. Philemon Rajah*

எபிரெயர் 12:3 **ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய், உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.** பைபிள் நம்மை சோர்ந்துபோகாதிருங்கள், சோர்வடைய வேண்டாம் என நிறைய முறை ஊக்கப்படுத்துகின்றது. ஏனெனில், சோர்வு என்பது, கர்த்தருடைய பிள்ளைகளை தளர்ந்துபோக செய்கின்ற ஒரு மிகப்பெரிய கொடிய நோயாக இருக்கின்றது. ஆயினும் நம் வாழ்வில் ஏதோ ஒரு சோர்வை வைத்துக்கொண்டே வாழ்கின்றோம்.

நம் வாழ்வில் அன்றாடம் சந்திக்கின்ற சவால்கள் நமக்கு சோர்வை உண்டாக்குகின்றன. உதாரணமாக, வாழ்வை குறித்து, என்ன இது மகிழ்வற்ற வாழ்க்கை? என்றோ, என்ன ஒரு பயங்கரமான தேவபயமற்ற உலகம்? என இந்த உலகத்தினை குறித்தோ, என்ன ஒரு நன்றியற்ற மோசமான மனிதர்கள்? என மானுடத்தினை குறித்தோ, அல்லது துன்பம், பாவம், துரோகம், எதிர்காலம் என ஏதாவது ஒன்றை குறித்தோ, நாம் ஏதேனும் ஒருவகையில் சோர்வடைந்துள்ளோம் அல்லது சோர்வடைகின்றோம். எசேக்கியேல் 33:30 **மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி; எங்கள் துரோகங்களும் எங்கள் பாவங்களும் எங்கள் மேல் இருக்கிறது. நாங்கள் சோர்ந்துபோகிறோம். நாங்கள் பிழைப்பது எப்படியென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.**

நம்மை சோர்வடைய செய்ய இங்கே நிறைய காரணிகள் உண்டு என்பது கூட நம்மை சோர்வடைய செய்யலாம். ஆயினும், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நீதிமொழி 24:10 **ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது.** நம் வாழ்வில் எதிர்பாரா ஆபத்துக்கள் நேரிடும்போது சோர்ந்துபோகக் கூடாது. எபிரெயர் 12:5 **அன்றியும்; என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே.** நாம் வழிதவறி செல்லும்போது, கர்த்தர் நம்மை சிட்சித்து திருத்தும்போது சோர்ந்துப்போகக் கூடாது. கலாத்தியர் 6:9 **நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து**

**போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.** நன்மை செய்கின்ற காரியங்களில் சோர்ந்துப்போகக் கூடாது. எபேசியர் 3:13 **ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அனுபவிக்கின்ற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே.** மற்ற கர்த்தருடைய பிள்ளைகள் வாழ்வில் அல்லது கிறிஸ்தவத்திற்கு எதிரான மற்றவர்கள் செய்கின்ற செயல்களினாலும் சோர்ந்துபோக வேண்டாம், என பைபிள் சொல்வதனை மனதில்கொள்வோம்.

ஒன்றை மனதில் வைப்போம் சோர்வு என்பது (Let's keep one thing in mind: fatigue is the enemy's weapon), மேலும் சோர்வு என்பது மனமடிவை உண்டாக்கும் (Fatigue can cause depression), சோர்வு என்பது நம்மை இயல்பாக இருக்கவிடாது (Fatigue keeps us from being normal). ஆகையால், நாம் சோர்வினை மேற்கொள்ள வேண்டும் மாறாக சோர்வு நம்மை மேற்கொள்ள அனுமதிக்க கூடாது. பெனின்னாள் சோர்வினை உண்டாக்கிய போது, அன்னாள் பாரத்துடன் கர்த்தரை நோக்கி ஜெபித்தாள். கர்த்தர் அவள் விண்ணப்பத்திற்கு பதிலளித்து அவளை ஆசீர்வதித்தார் [1சாமுவேல் 1,2ம் அதிகாரங்கள்].

நாம், சோர்வுகளை எவ்வாறு எதிர்கொள்கிறோம்? சோர்வுகள் ஏற்படும் பொழுது, நாம் என்ன செய்கின்றோம்? என்பதனை நிதானித்து பார்ப்போம். மேலும், நாம் ஏன் சோர்ந்து போகக் கூடாது? என்பதற்கும் பைபிள் பதில் அளிக்கின்றது.

**1. நம் மீட்பர் உயிரோடிருக்கின்றார்**

யோபு 19:25-27 என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது.

எல்லாவற்றையும் இழந்த நிலையில் யோபு **என் மீட்பர் உயிரோடிருக்கிறார்** என சொல்கின்றார். அவர் சாகவும் இல்லை, அவருக்கு சாவும் இல்லை. அதனால், எதை நான் இழந்தால் என்ன? என் மீட்பர் இன்னும் இருக்கின்றார் என நம்பிக்கையின் வார்த்தையை அங்கே பேசுகின்றார். நம் வாழ்வில் இழப்புகளை சந்திக்கின்ற போது, நம்மால் இவ்வாறு கூறமுடியுமா? அவ்வாறு சொல்ல விசுவாசமும் தைரியமும் உள்ளவர்களாக இருக்கின்றோமா?

**2. நம் மீட்பர் நம்மோடிருக்கின்றார்**

மத்தேயு 28:20 'நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ. உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

உலகத்தின் முடிவு பரியந்தம் எல்லா நாட்களிலும் நம் மீட்பர் நம்மோடிருக்கின்றேன் என வாக்களித்துள்ளார். அவர் நம்மோடு இருக்கின்றபடியினால், நாம் சோர்ந்துபோக வேண்டிய அவசியமில்லை. அவர் நிச்சயமாக நம்மை திக்கற்றவர்களாக விடமாட்டார் யோவான் 14:18 **நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்,** மேலும் அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை [எபி 13:15].

**3. நம் மீட்பர் நமக்காக இருக்கின்றார்**

1 யோவான் 2:1,2 'என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்.

நம் மீட்பர் எனக்காக இருக்கின்றபடியினால் நான் சோர்ந்துபோகவேண்டிய அவசியமில்லை. ஆம் அவர் நமக்காக தான் இருக்கின்றார். நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றார் [1யோவான் 2:1.2]. நமக்காக மரித்து, உயிரோடு எழுந்தவர், நமக்காக வேண்டுதலும் செய்கின்றார். ரோமர் 8:34 **ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.**

**4. நம் மீட்பர் நம்மை அறிந்திருக்கின்றார்.**

யோவான் 10:14,15 'நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.

என் மீட்பர் என்னை அறிந்திருக்கின்றார். கிறிஸ்துவிற்கும் சபைக்குமான உறவு மணவாளன் மணவாட்டி என்பதாக பைபிள் சொல்வதை நாம் அறிவோம். மணவாளனாகிய கிறிஸ்து என்னைப் பற்றி முழுமையாக அறிந்திருக்கின்றார் என்பது எவ்வளவு மேன்மையான காரியம்.

என் மீட்பர் என்னை அறிந்திருக்கின்றார் என்பது. அவர் நமது தேவைகளை அறிந்திருக்கின்றார் (மத்தேயு 6:8). அவர் நமது கண்ணீரையும், விண்ணப்பத்தினையும் அறிந்திருக்கின்றார் (2 ராஜா 20:5). நமக்கு இருக்கின்ற வலிகள், ஏற்பட்டுள்ள துன்பம், பெற வேண்டிய மகிழ்ச்சி எல்லாம் அவர் அறிந்திருக்கின்றார் (வெளி 7:17, 21:4). எல்லாவற்றையும் அவர் சரி செய்வார் (மாற்கு 9:24). நாம் நம்பிக்கையோடு இருந்தால் போதும். ஆகையால் நாம் சோர்ந்து போகக் கூடாது.

### 5. நம் மீட்பர் நீதியுமும் நியாயம் செய்வார்

ஏசா 11:3,4 'கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.

நம் மீட்பராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து, நீதியுள்ள கர்த்தராக இருக்கின்றார், அவர் நீதியும் நியாயமும் செய்கின்ற கர்த்தராக இருக்கின்றார் என்பதினால் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. நம்மை சுற்றி நடப்பதெல்லாம் கெட்டதாக தென்பட்டாலும், நம்மை சுற்றி இருப்பவர்கள் எல்லாம் கெட்டவர்களாக தோன்றினாலும் பயங்கொள்ள வேண்டாம். நம் மீட்பர் நீதியுள்ளவர் மற்றும் நல்லவர், அவர் நிச்சயம் நம்மை பாதுகாப்பார். சங்கீதம் 12:5 'ஏழைகள் பாழாக்கப்பட்டதினிமித்தம், எளியவர்கள் விடும் பெருமூச்சியினிமித்தம், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

### 6. நம் மீட்பர் எல்லாவற்றையும் ஆளுகின்றார்

1 தீமோ 6:15,16 'அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனம் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக, ஆமென்.

நம் மீட்பராகிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து, சகல அதிகாரமுடையவராய் [மத்தேயு 28:18] இருந்து, ஏகசக்கராதிபதியாக அண்டசராசரங்கள் எல்லாவற்றையும், அவற்றில் இருக்கின்ற பறவைகள், மிருகங்கள் மட்டுமல்ல கண்களுக்கு புலப்படாத நுண்ணுயிரிகள் மற்றும் மானுடர்கள் எல்லாரையும் ஆளுகின்றார். கடலுக்கு அரசன், தேனிக்கு அரசன், காட்டுக்கு அரசன், நாட்டுக்கு அரசன் என ஏகப்பட்ட அரசர்கள் இருக்கலாம், நம் ஆண்டவர் இயேசு, அந்த அரசர்களுக்கெல்லாம் அரசராக இருந்து எல்லாவற்றையும் ஆளுகின்றார் [1 15:25].

எல்லாம் அவருடைய கரத்திற்குள்தான் இருக்கின்றது. அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும் சங்கீதம் 33:8,9 'பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.' காலங்களும் அவருடைய கரத்தில் தான் இருக்கின்றது, எல்லாவற்றையும் ஆளவும் மாற்றவும் வல்லமையுள்ளவர் நம் மீட்பராக இருக்கின்றபடியினால், நாம் சோர்ந்துபோகக் கூடாது.

✞

---

**நம் வாழ்வில் அன்றாடம் சந்திக்கின்ற சவால்கள் நமக்கு சோர்வை உண்டாக்குகின்றன. உதாரணமாக, வாழ்வைக் குறித்து, என்ன இது மகிழ்வற்ற வாழ்க்கை? என்றோ, என்ன ஒரு பயங்கரமான தேவபயமற்ற உலகம்? என இந்த உலகத்தைக் குறித்தோ, என்ன ஒரு நன்றியற்ற மோசமான மனிதர்கள்? என மானுடம் குறித்தோ அல்லது துன்பம், பாவம், துரோகம், எதிர்காலம் என ஏதாவது ஒன்றை குறித்தோ, நாம் ஏதேனும் ஒருவகையில் சோர்வடைந்துள்ளோம் அல்லது சோர்வடைகின்றோம்.**

# தேவன் அநீதியுள்ளவரல்லவே!

## God Is Not Unjust

*Benny Martin*

**ப**ல வேளைகளில் தேவனுடைய பண்புகளைப் பார்த்து நாம் பரவசமடைகிறோம், அவர் அன்பானவர், இரக்கமுள்ளவர், தயவுள்ளவர், நீடிய பொறுமையுள்ளவர் என பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். அவைகளுள் பலரை வெகுவாக கவர்ந்த பண்பு அவர் நீதியுள்ளவர் என்பதாகும். அநீதி நிறைந்த இவ்வுலகில் பாதிபேர் அநீதிக்கு துணைப் போகிறதையும், மீதிபேர் சுயநலவாதிகளாகவும் இருப்பதையும் நாம் காணமுடியும். நீதியரசர்கள் என்று மக்களால் மதிக்கப்படுகிறவர்கள் கூட மதிகெட்டுத் தீர்ப்பு வழங்குவதை, தீர்க்கமாய் நாம் காணமுடியும். அப்படிப் பட்ட நேரங்களில் நீதி நீர்த்துப்போய் விட்டதோ? அநீதிதான் நீளுமோ? எனும் பயம் பலரை பற்றிக் கொள்கிறது. ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்கு உள்ளபடியே அதைப்பற்றி கவலை எள்ளளவும் இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் நம் தேவன் அநீதியுள்ள வரல்லவே, இப்பாழாய்ப்போன பாரில் இது நமக்கு ஆறுதலையும், தேறுதலையும் நிச்சயமாகத் தருகிறது.

தேவன் அநீதியுள்ளவரல்லவே என்னும் சொற்றொடர் சொற்ப எழுத்துக்களைக் கொண்டிருந்தாலும் கூட ஆழமான அர்த்தங்களை தன்னகத்தேக் கொண்டுள்ளது. இச்சொற்றொடர் எபிரெயர் 6:10 ல் இடம் பெற்றுள்ளது. எபிரெயர் 6:10ல் தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் உற்சாகமூட்டும் வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறார் **ஏனென்றால் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.** அருமையானவர்களே! இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள் உற்சாகமிழந்து சோர்வாகக் காணப்பட்டார்கள். முன்பு இதே அதிகாரத்தில் இந்நிருப்பத்தின் ஆசிரியர் விழுந்து போவதின் ஆபத்தை குறித்து தத்ரூபமாக எழுதியிருக்கிறார். பின்பு ஒன்பதாம் வசனத்தில் அவர்கள் உண்மையாக தொடர்ந்து வாழ்வார்கள் என்று தன்னுடைய நம்பிக்கையை வெளிப்படுத்தி இந்த உற்சாக மூட்டும் வார்த்தைகளை அவர் எழுதினார். இவ்வார்தைகள் நம்மையும் உண்மை யாக உற்சாக மூட்ட வேண்டும். ஏனென்றால், அவைகள் தேவனுடைய உண்மைத்தன்மையை நமக்கு நினைப்பூட்டுகின்றன. இவ்வார்த்தை களை நாம் சுருக்கமாக சிந்தித்துப் பார்ப்போம்.

### தேவன் அநீதியுள்ளவரல்ல என்று நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும்

இன்றைய நாட்களில் அநீதி இவ்வுலகில் முன்னெப்போதுமில்லாததை விட பெருகியிருக்கிறது. அநியாயமும், அக்கிரமமும் எங்கும் தங்குதடையின்றி அரங்கேறிவருகிறது. இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தின் மக்கள் கடவுள் எப்படி இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்? என்று புலம்புகிறார்கள். ஆனால், தேவன் எல்லோரையும் ஒருநாள் பிடிப்பார், எல்லோரையும் மிகச்சரியாக நியாயம் விசாரிப்பார், நீதி செய்வார் என்பதை அறியா திருக்கிறார்கள். தேவன் தம்முடைய மனதை மாற்றுவதில்லை, அல்லது தம்முடைய வாக்குதத்தங்களை ரத்து செய்வதுமில்லை தேவன் மனிதனிடமிருந்து மாறுபட்டவராய் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். மனிதன் தன் மனதை மூன்று காரணங்களுக்காக மாற்றுகிறான். மனிதனால் வருங்காலத்தை முன்னறிவிக்க முடியாத காரணத்தால் சில சமயங்களில் நாம் புதிய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தாயிருக்கிறது. ஆனால், தேவன் எதற்காகவும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை சில வேளையில் நம்முடைய திட்டங்கள் நம்மைவிட வலிமை வாய்ந்த ஏதோ ஒன்றால் அல்லது யாரோ ஒருவரால் தடை செய்யப்படுகிறது. ஆனால், தேவனை விட வலிமை வாய்ந்த சக்தி இவ்வுலகில் எதுவுமில்லை. எனவே, இது தேவனுக்குப் பொருந்தாது. மூன்றாவது மனிதன் தன்னுடைய பொருளாசையினால் அதிக லாபத்திற்கு ஆசைப்பட்டு தன் மனதை மாற்றுகிறான். இதுவும் தேவனுக்குப் பொருந்தாது, அதனால் தான் மோசே எண்ணாகமம் 23:19ல் தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்லுகிறார் பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல அவர் சொல்லியும் செல்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றா திருப்பாரா? மேலும், சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார். **என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதையும் மாற்றாமலும் இருப்பேன் (சங்கீதம் 89:34). தேவன் நாம் அவரை முழுமையாக நம்புகிறோம் என்பதை தாம் அறிய விரும்புகிறார்** (எபிரெயர் 6 : 13–18).

### மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே

இவ்வாக்கியம் காரியங்களை அலட்சியப்படுத்துவது என்னும் பொருளைக் கொண்டுள்ளது. மனிதனுக்கு மறதி என்பது இயல்பாகவே இருக்கிறபடியால் அவனுக்கு சில காரியங்களை நினைப்பூட்டுவது அவ்வப்போது அவசியமாகிறது. மனிதன் மறப்பது மட்டுமல்ல தான் செய்ய வேண்டியது என அறிந்த காரியங்களையும் செய்யாமல் அலட்சியமாயிருக்கிறான். இக்கருத்தை நாம் எபிரெயர் புஸ்தகத்திலும் காணமுடியும். இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சிப்பைக் குறித்து

கவலையில்லாமல் இருந்தமைக்காக எச்சரிக்கப்பட்டார்கள் (எபிரெயர் 2:3) அவர்களுடைய அலட்சியப் போக்கினால் அவர்கள் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை(5:12). அவர்கள் அந்நியரை உபசரிப்பதில் அலட்சியம் காட்டக்கூடாது என்றும் உற்சாகபடுத்தப்பட்டனர் (13:2) இருந்தபோதிலும், தேவன் ஒருபோதும் ஒன்றையும் மறப்பதில்லை. தேவன் அன்பின் சிறிய செயல்பாடுகளைக் கூட கணக்கில் வைத்துக் கொள்கிறார் எதையுமே அவர் மறப்பதில்லை. உதாரணமாக, அவருடைய நாமத்தில் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட அதையும் தேவன் கணக்கில் வைத்துக்கொள்கிறார் (மத்தேயு 10:42). அது மாத்திரமல்ல, தேவன் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் அலட்சியம் செய்வதே இல்லை. இந்த உண்மை ஏசாயாவால் அவர் தேவனை ஒரு தாயோடு ஒப்பிடும்போது வலியுறுத்தப்படுகிறது. ஸ்திரீ யானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை(ஏசாயா 49:15).

அதேநேரத்தில் தேவன் சில காரியங்களை மறக்கவும் செய்கிறார். உதாரணமாக, தேவன் நம் கடந்த கால பாவங்களை மறந்துவிடுகிறார். **நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன் உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன் (ஏசாயா 43:2). எபிரெயர் 2:12 ல்** இதன் ஆசிரியர் எரேமியா 31:34-யை மேற்கோள் காட்டுகிறார். அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே, தேவன் பாவங்களை மன்னிக்கும் போது அந்த பாவங்கள் காணாமல் போய் விடுகின்றன. இது பெரும்பாலும் மனித பழக்க வழக்கங்களிலிருந்து மாறுபடுகிறது. ஷேக்ஸ்பியர் ஒருமுறை இவ்விதமாக எழுதினார். மனிதர்கள் செய்யும் தீமை அவர்களுக்குப் பிறகும் வாழ்கிறது. ஆனால், நன்மை மனிதர்களுடைய எலும்புகளோடு பெரும்பாலும் பின்னிப் பிணையப்பட்டிருக்கிறது தேவன் நம்முடைய நற்கிரியைகளை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்கிறார். ஆனால், நம் பாவங்களை மறந்துவிடுகிறார். என்ன ஓர் ஆசீர்வாதம் இது!

**நம் அன்பின் பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே**

இது கைமாறு கருதாமல் அன்பின் நிமித்தமாகச் செய்யப்படும் கிரியைகளாகும். இது கிறிஸ்துவுக்காக காட்டப்படும் அன்பாயிருந் தாலும் கூட கிரியைகள் தேவையிலிருக்கும் சக கிறிஸ்தவர்களுக்கு செய்யப்படுகிறது. ஒருவர் சகப் பரிசுத்தவானை விசாரிக்கிறவராக யிருந்தால் அவர் கிறிஸ்துவை விசாரிக்கிறவராயிருக்கிறார் (மத்தேயு 25:40). இங்கே கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படு கிறார்கள். ஒருவர் பரிசுத்தவானாக மாறுவதற்கு சாக வேண்டியதில்லை இன்னும் சொல்லப் போனால் பரிசுத்தவான் என்னும் பதம் அதீதபக்தியுடைய ஆவிக்குரிய நபரையும் குறிக்காது. எல்லா கிறிஸ்தவர் களும் பரிசுத்தவான்களாயிருக்கிறார்கள், அதாவது தேவனுடைய சேவைக்காக பரிசுத்தமாக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்

பட்டிருக்கிறார்கள். இந்த கிறிஸ்தவர்கள் கடந்த காலங்களில் அன்பின் பிரயாசங்களை வெளிபடுத்திக்கொண்டிருந்தார்கள், அவர்களுக்கு உற்சாக மூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது, அவர்களுடைய பிரயாசம் விருதாவாகவில்லை என்பதை நினைப்பூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது.

சக கிறிஸ்தவர்களிடத்தில் அவர்கள் காட்டிய அன்பை தேவன் எப்போதுமே நினைவில் வைத்துக் கொள்வார். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும் படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது [II நாளாகமம் 16:9]. கொர்நேலியு தான் இரட்சிக்கப் படாத நிலையிலும் தேவனைப் பிரியப்படுத்த அவர் கொண்டிருந்த ஆசையை தேவன் கவனித்தார், அப்படியிருக்கும்போது அவருடைய பிள்ளைகள் எடுக்கும் முயற்சியை தேவன் எந்த அளவு கவனிப்பார்? இவ்வார்த்தைகள் நம்மையும் கூட உற்சாகப்படுத்த வேண்டும். நாம் கர்த்தருக்காகப்படுகிற பிரயாசங்களுக்கு பலன் இன்னும் கிடைக்க வில்லையே என்று நாம் சில வேளைகளில் சோர்வடைவது உண்டு. நம் பிரயாசங்களை யாராவது கவனிக்கிறார்களா என்று பல வேளைகளில் நாம் நினைப்பதுண்டு. மனிதன் நினைக்காமல் இருக்கலாம். ஆனால், தேவன் எல்லாவற்றையும் கண்டு, நம்மை விசாரிக்கிறார் என்று நாம் நிச்சய படுத்திக்கொள்ளலாம்.

✞

---

இன்றைய நாட்களில் அநீதி இவ்வுலகில் முன்னெப்போது மில்லாததை விட பெருகியிருக்கிறது. அநியாயமும், அக்கிரமமும் எங்கும் தங்குதடையின்றி அரங்கேறிவருகிறது. இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தின் மக்கள் கடவுள் எப்படி இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்? என்று புலம்புகிறார்கள். ஆனால், தேவன் எல்லோரையும் ஒருநாள் பிடிப்பார், எல்லோரையும் மிகச்சரியாக நியாயம் விசாரிப்பார், நீதி செய்வார் என்பதை அறியாதிருக்கிறார்கள். தேவன் தம்முடைய மனதை மாற்றுவதில்லை, அல்லது தம்முடைய வாக்குதத்தங்களை ரத்து செய்வதுமில்லை தேவன் மனிதனிடமிருந்து மாறுபட்டவராய் எப்போ துமே தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்.

# ஏன் தேவனே?

## Why God?

*Jared green*

**நீ**ங்கள் எப்போதாவது தேவனுடைய நோக்கங்களையும், கிரியைகளையும் கேள்விகேட்டிருந்தால் நீங்கள் மட்டும் அப்படி கேட்கவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். ஆபகூக் புத்தகம் தேவனுக்கும் அவருடைய தீர்க்கதரிசியாகிய ஆபகூக்குக்கும் இடையே நடந்த உரையாடலை படம் பிடித்துக் காட்டுகிறது. இதன் வரலாற்றுப் பின்னணியை நாம் சற்று உற்றுப்பார்த்தால், தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்களாகிய யூதா பாவத்தில் சிக்கிக் கொண்டார்கள். கி.மு. 620 ல் யோசியா ராஜாவின் அரசாட்சியில் யூதா தேசம் பல ஆவிக்குரிய சீர்திருத்தங்களுக்கு உட்பட்டது. அதன் விளைவாக யூதா தேவனிடத்தில் திரும்பியது. ஆபகூக் தேவனிடம் இரண்டு முறை கேள்வி கேட்டார். முதலாவது, இந்த தீர்க்கதரிசி தேவனை கடுமையான துன்மார்க்கத்தின் மத்தியில் செயல்பட முடியாதவராக கண்டார். அது மாத்திரமில்லாமல் அத்தனை கொடுமையான பாவங்களும் தண்டனை பெறாமல் தப்பிப் போனதை குறித்து தேவனை கேள்வி கேட்டார். இரண்டாவது, ஆபகூக் தேவனால் எப்படி மிக மோசமான ஜனங்களை அதாவது, பாபிலோனியாரை கொண்டு சற்று குறைவாக மோசமான ஜனங்களாகிய யூதா ஜனங்களை தண்டிக்க முடிந்தது என்பதைக் குறித்து அவர் தேவனை கேள்வி கேட்டார். தேவன் ஆபகூக்குக்கு பதில் அளித்தவைகளிலிருந்து நாம் இரண்டு காரியங்களைப் பார்க்கிறோம். அவைகளை நம் இருதயத்தில் வைத்துக் கொண்டு, தேவனை நோக்கி ஏன் என்று கேள்வி கேட்கும் போதெல்லாம் நினைத்துக் கொள்ள வேண்டும்.

முதலாவது, தம்முடைய கிரியைகளை ஒருபோதும் நிறுத்தாத தேவனைத்தான் நாம் சேவித்துக் கொண்டிருக்கிறோம். ஆபகூக்கின் முதலாவது கேள்விக்கு தேவன் இவ்விதமாய் பதில் அளிக்கிறார். நீங்கள் புறஜாதிகளை நோக்கிப்பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள். விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன் (ஆபகூக் 1:5). இவ்வுலகத்திற்குரிய சரீரத்தில் தேவனுடைய ஆச்சரியமூட்டும் கிரியைகளை நம்மால் ஒருபோதும் புரிந்து கொள்ளவே முடியாது. பின்வரும் வசனங்களில் தேவன் ஆபகூக்கிடம் தாம் அநியாயத்தையும், பாவத்தையும் கண்டு கொள்ளாமல் இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறார். அதேபோல் இன்றைய நாட்களிலும் கூட தேவன், இந்த உலகத்தில் அரங்கேறும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் கண்டு கொள்ளாமல் இல்லை.. தேவன் எல்லா விதத்திலும்

நியாயமாகத்தான் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார், நமக்குத் தான் அது புரிவதில்லை.

இரண்டாவது, கடினமான காலகட்டங்களிலும் கூட தேவனிடத்தில் உண்மையாயிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆபகூக்கின் இரண்டாவது கேள்விக்கு பிறகு கூட தேவன் அவரைப் பார்த்து தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று சொன்னார் (2:4). இந்த வாக்கியத்தை பற்றி இரண்டு காரியங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவது உண்மையுள்ள ஜீவியம் தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது. கடினமான காலகட்டங்களிலும் தேவனுக்கு உண்மையாய் இருப்பவர்கள் பிழைப்பார்கள் அல்லது வாழ்வார்கள் என்பது ஆபகூக்குக்கு தேவனுடைய செய்தியாய் இருக்கிறது. தேவனுக்கு உண்மையாய் இருப்பவர்கள் அவராலே ஆசீர்வதிக்கப்படுவார்கள். இரண்டாவது, உண்மையாயிருப்பது என்பது ஒருமுறை செய்யப்படும் செயலல்ல, அது வாழ்க்கை முறையாகும். தேவனால் நீதிமானாக அறிவிக்கப்படும் ஒரு உண்மையுள்ள விசுவாசி, விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பதை தன் வாழ்க்கை முறையாகக் கொண்டிருப்பார்.

இவ்வுலகத்தில் நிச்சயமற்ற சூழ்நிலைகளிலும் கூட, தேவனை பின்பற்றுகிறவர்களாகிய நாம் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். **விசுவாசத்தினால் நாம் வாழ்வதினாலும்**, தேவன் இவ்வுலகில் கிரியைகள் செய்வதை நிறுத்துவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்வதினாலும் அப்படிச் செய்ய முடியும். இது எனக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் கொண்டு வருகிறது உங்களுக்கும் அது அப்படியே ஆக வேண்டும் என்பது என்னுடைய ஜெபமாய் இருக்கிறது. தேவன் உங்களை நேசிக்கிறார்.

✝

## கற்பலகை

*நீங்கள் ஒரு கல்லை வணங்குவீர்களா அல்லது தொழுது கொள்வீர்களா? இக்கேள்விக்கு இன்று பெரும்பாலான ஜனங்கள் நிச்சயமாக இல்லை என்று தான் பதிலளிப்பார்கள். இருந்தபோதிலும், நீங்களும் நானும் அப்படி செய்வதுண்டு. இன்னும் சொல்லப் போனால் ஒட்டுமொத்த தேசங்களும் அந்த கல்லுக்கு முன்பாக முழங்கால் படியிடுகின்றன. ஆனாலும், கூட நாம் உறுதியாக நாங்கள் அப்படி செய்ய மாட்டோம் என்று சொல்வோம். ஒரு நாள் கற்பலகையில் எழுதப்பட்ட 10 கற்பனைகளை பற்றி ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அதே கற்பலகை இன்று எங்கே இருக்கும் என்று சொல்லி ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தேன். உண்மையாகவே அந்த கற்பலகைகள் இன்று எங்காவது இருந்தால், தேவன்தாமே தம் கைகளால் அந்த கற்பலகையில் எழுதினபடியால் நாம் அதை வணங்குவோம். நாம் அதை ஆச்சரியம் கலந்த மரியாதையுடன் பார்ப்போம். ஆனால், அந்தக் கற்பலகைகளில் எழுதப்பட்ட கற்பனைகள் நமக்கு ஆச்சரியம் கலந்த மரியாதையை உண்டாக்குவதில்லை. ஏன் அப்படி இல்லை?*



# ஓர் நித்திய உத்திரவாதம்

## An Eternal warranty

*Robert Johnson*

**பெ**ரும்பாலான ஜனங்கள் அதிக மதிப்புள்ள பொருட்களை வாங்கும் போது, அதன் உத்தரவாதத்தை அறிய விரும்புவார்கள். அப்பொருள் நீடித்த நாட்கள் உழைக்குமா? அப்பொருள் பழுதானால் அந்த நிறுவனத்தின் பதில் என்னவாயிருக்கும்? பொருள் பழுதடைந்தால் அதை அவர்கள் சரி செய்து தருவார்களா? போன்ற கேள்விகள் வாடிக்கையாளர்களின் மனதில் தோன்றும். சில வருடங்களுக்கு முன்பாக, அரசாங்கம் வாழ்நாள் உத்தரவாதம் என்னும் வாசகத்திற்கு பதிலாக வரையறுக்கப்பட்ட வாழ்நாள் உத்தரவாதம் என்னும் வாசகத்தை பயன்படுத்தும்படி நிறுவனங்களுக்கு ஆணையிட்டது. இப்போதைய வாசகம் பழைய வாசகத்தைப் போல கவர்ச்சிகரமாக இல்லை. அது மட்டுமல்ல, ஒரு பொருளை தயாரிக்கும் நிறுவனம் மூடப்படும் சூழ்நிலையில் அந்த நிறுவனம் அளித்த உத்தரவாதம் காலாவதியாகி விடுகிறது.

இது என் அப்பா சில வருடங்களுக்கு முன் என்னிடம் ஏதோ ஒன்று சொன்னதை நினைவுபடுத்துகிறது. வாக்குறுதி என்பது அதை யார் செய்கிறார்களோ அவரைப்போல் சிறந்ததாய் இருக்கிறது. உத்தரவாதங்கள் எல்லாம் நிறுவனங்கள் அவைகளை எந்த அளவு கனப்படுத்துகிறதோ அல்லது எப்போது வரை செயல்படுகிறதோ அதுவரைத்தான் பொருந்தும். அதேபோல் ஒரு நபருடைய வாக்கும் கூட அந்த நபர் எந்த அளவு நேர்மையாக இருக்கிறாரோ அந்த அளவு தான் அதுவும் நேர்மையாக இருக்கும். வாக்குறுதிகளை அள்ளி வீசுவது சுலபமானது தான். ஆனால், அவைகளை நிறைவேற்றுவது தான் கடினமாகும். பல வேளைகளில் வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு அதற்குப் பிறகு சாக்குப் போக்குகளை சொல்வார்கள் அல்லது வாக்குறுதிகளை அள்ளி வீசினவரே காணாமல் போய்விடுவார்.

தேவன் தமது வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பது நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது அல்லவா? அவர் நமக்கு என்ன வாக்குதத்தங்களை செய்திருக்கிறார்? அந்த வாக்குத்தத்தங்களை பேதுரு நமக்கு நினைப்பூட்டுகிறார். தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப்

பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 1:3,4). தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளை ஒருவர் எண்ணிப் பார்த்தாலே அது அவருடைய இருதயத்தை மகிழ்விக்கும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சகல நாட்களிலும் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத்தேயு 28:20). மேலும், அவர் நமக்கு நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (1 யோவான் 2:25). கர்த்தர் உண்மை உள்ளவராயிருந்து, நம்மை ஸ்திரப்படுத்தி எல்லா தீமையிலிருந்தும் நம்மை விலக்கிக் காத்துக் கொள்வார் (2 தெசலோனிக்கேயர் 3:3). மேலும், தேவன் நம் திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படும்படி நம்மை அனுமதிக்க மாட்டார் என்று அவர் வாக்குரைத்திருக்கிறார் (1 கொரி. 10:13). பரலோகத்தோடு ஒப்பிடும்போது இப்பூமியில் நாம் படும் பாடுகள் எல்லாம் ஒன்றுமே இல்லை என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (ரோமர் 8:18). இப்படி நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை எத்தனை குறிப்பிட முடியும்? தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை எல்லாம் நிறைவேற்ற உண்மையுள்ளவராயிருக்கிறார்.

கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க இது எத்தகைய நம்பிக்கையை நமக்கு தரும்! தேவன் தாம் சொன்னவைகளை எல்லாம் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால், நம்மால் முடிந்தவரை சிறந்தவைகளை அவருக்காகச்செய்ய நாம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இப்படி தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அவருடைய அன்பின் வெளிப்பாடாக இருக்கிறபடியால், நம்மையே நாம் தேவனுக்கு ஒப்புக் கொடுப்பதன் மூலமாக அந்த அன்பை நாம் திருப்பிக் கொடுக்க வேண்டும் (1 யோவான் 4:19). கிறிஸ்து இந்த உலகத்தை ஜெயித்தபடியால் நாம் உற்சாகமடைந்து அவருடைய வெற்றியை பகிர்ந்து கொள்கிறோம் (யோவான் 16:33; 1 கொரிந்தியர் 15:57).

உலகப்பிரகாரமாக அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படலாம், நிறைவேற்றப்படாமலும் இருக்கலாம். ஆனால், தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் ஒரு போதும் சந்தேகப்படவே கூடாது. தேவனுடைய அன்பிலும், அவருடைய நம்பிக்கையிலும், அவருடைய இரட்சிப்பிலும் நாம் களிகூர வேண்டும். இவைகளில் ஒன்று கூட தவறிப் போவதில்லை. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது (சங்கீதம் 136:1).

✞

# தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார், எப்போதும் கட்டுப்பாட்டில் இருக்கிறார்

## God is in control, Always in Control

*Terry wheeler*




**தே**வனால் சமாளிக்க முடியாத காரியம் ஏதாவது இருக்கிறதா? அல்லது அவரை மிரட்டித், தோற்கடிக்கும் சக்தி உலகில் உள்ளதா? இதற்கான பதில் நிச்சயமாகவே இல்லை என்பதுதான். நாம் நமது கட்டுப்பாட்டை மீறி காயப்படுத்தப்படும் போது அல்லது சூழ்நிலைகளால் அமிழ்த்தப்படும்போது, தேவனுடைய கட்டுப்பாட்டையும் மீறி சில காரியங்கள் நடக்கத்தான் செய்கிறது என்று எண்ணத்தோன்றும். ஆனால் இந்த எண்ணம் ஒரு தவறான எண்ணமாகும்.

தேவன் மிருகங்களை போஷிக்கிறார், புல்களையும், பூக்களையும் போஷிக்கிறார், அவர் வானங்களை இயக்குகிறார். தேவன் தாம் சிருஷ்டித்தவைகளுக்கு என்னென்ன தேவையோ அவைகளை எப்போதும் வழங்கி வருகிறார். அவர் உறங்குவதும் இல்லை, சோர்வடைவதும் இல்லை. தேவனை யாரும் பலவீனப்படுத்தவும் முடியாது, சோர்வடையச் செய்யவும் முடியாது. தேவன் எல்லாவற்றையும் பார்க்கிறார், அவர் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறார். எப்படி ஏதோ ஒன்று அவரை மேற்கொள்ள முடியும்? அதற்கான பதில் எதுவும் முடியாது என்பதுதான். பாடுகளையும், உபத்திரவங்களையும் தேவன் நம்முடைய வெளிப்புறமான நன்மைகளுக்காக பயன்படுத்துகிறாரா?

ஆம், பயன்படுத்துகிறார். நமக்கு தேவை ஏற்படும்போதெல்லாம் அவர் அப்படி பயன்படுத்துகிறார், பயன்படுத்துவார் (ரோமர் 8:28). இருந்தபோதிலும் அவருடைய கட்டுப்பாட்டை மீறி காரியங்கள் நடக்குமா? ஒரு போதும் இல்லை. எப்படி அப்படி நடக்கும்? அவர் ஒட்டுமொத்த உலகத்தையும் தம்முடைய கரங்களிலேயே வைத்திருக்கிறார். பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது (சங்கீதம் 24:1).

# நம் தகப்பன்

## Our Father

*Betty Burton choate*

**ந**ம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா? [யாக்கோபு 4:5]. இந்த வசனத்தைச் சிலர் பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கியமாக இருக்கிறார் என்பது குறித்து கொஞ்சம் கூட எண்ணமில்லாமல் இது மனுஷனுடைய ஆவி இச்சையுள்ள பொறாமைக்கு இடம் கொடுத்து விடுகிறது என்று தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

இங்கே வேத வாக்கியம் வீணாய் சொல்லுகிறதென்று காணப்படும் இந்த சொற்றொடர் வேதவாக்கியத்தின் மேற்கோள் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது இஸ்ரவேல் ஜனங்கள் மீது தேவனுடைய ஆழமான அன்பு மற்றும் அக்கறை பற்றிய சுருக்கமான வாக்கியம் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. நாம் யாத்திராகமம் 20:5 ல் கூட தேவன் தம்முடைய ஜனங்கள் மற்ற தேவர்களை சேவிப்பதை வெறுத்திருக்கிறார் என்று சொல்லி நாம் பார்க்க முடியும் **நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்‘** [யாத்திராகமம் 20:5] இன்னும் கூடுதலான தகவல்களை நாம் [2கொரிந்தியர் 11:2] ல் காண முடியும். **நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால்**, உங்களுக்காகத் தேவ வைராக்கியங் கொண்டிருக்கிறேன் [2 கொரிந்தியர் 11:2].

பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களை எழுத மனிதர்களை ஏவும் போது வாசகர்களுக்கு அவர் என்ன பொருளை கொடுக்க விரும்புகிறாரோ அதை சரியாகத் தேர்ந்தெடுத்து தான் கொடுக்கிறார். சில சந்தர்ப்பங்களில் பரிசுத்த ஆவியானவர் மகிழ்ச்சியான வார்த்தைகளை கொடுக்கிறார், சில சந்தர்ப்பங்களில் அவர் துக்கமான இந்த வார்த்தைகளை கொடுக்கிறார். வேறு விதமாகச் சொன்னால், அந்த வார்த்தைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர்

விரும்புகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடத்தில் உண்மை இல்லாதவர்களாக இருந்தபோது அவருடைய வேதனையின் குரலை கேளுங்கள்.

கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமுக்குச் சொல்லுகிறார், கானான் தேசமே உன் உற்பத்திக்கும், உன் பிறப்புக்கும் இடம் உன் தகப்பன் எமோரியன், உன் தாய் ஏத்தித்தி. உன் பிறப்பின் வர்த்தமானம் என்னவென்றால்: நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவுமில்லை, நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப்படவுமில்லை, உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை, துணிகளில் சுற்றப்படவுமில்லை. உனக்காகப் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒருகண்ணும் உன்பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை. நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் உன்பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை. நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய்.

நான் உன் அருகே கடந்துபோகும்போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப்பார்த்து பிழைத்திரு என்றேன். ஆம், உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப்பார்த்து பிழைத்திரு என்று சொன்னேன். உன்னை வயலின் பயிரைப்போல அநேகமாயிரமாய்ப் பெருகும்படி வைத்தேன், நீ வளர்ந்து பெரியவளாகி, மகாசௌந்தரியவதியானாய், உன் ஸ்தனங்கள் எழும்பின, உன் மயிர் வளர்ந்தது. ஆனாலும், நீ நிர்வாணம் அம்மணமாயிருந்தாய். நான் உன் அருகே கடந்து போனபோது, உன்னைப் பார்த்தேன், இதோ, உன் காலம் பருவகாலமாயிருந்தது. அப்பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து, உன் நிர்வாணத்தை மூடி, உனக்கு ஆணையிட்டுக்கொடுத்து, உன்னோடு உடன்படிக்கை பண்ணினேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், இவ்விதமாய் நீ என்னுடையவளானாய். நான் உன்னை ஜலத்தினால் முழுக்காட்டி, உன்னை இரத்தமற ஸ்நானம் பண்ணுவித்து, உனக்கு எண்ணெய் பூசி, சித்திரத்தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்ந்த பாதரட்சைகளை உனக்குத் தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக்குக் கொடுத்து, உன்னை ஆபரணங்களால் அலங்கரித்து, உன் கைகளிலே கடகங்களையும், உன் கழுத்திலே சரப்பணியையும்போட்டு, உன் நெற்றியில் நெற்றிப் பட்டத்தையும், உன் காதுகளில் காதணியையும், உன் தலையின்மேல் சிங்காரமான கிரீடத்தையும் தரித்தேன்.

இவ்விதமாய்ப் பொன்னினாலும் வெள்ளியினாலும் நீ அலங்கரிக்கப்பட்டாய், உன் உடுப்பு மெல்லிய புடவையும் பட்டும் சித்திரத்தையலாடையுமாயிருந்தது. மெல்லிய மாவையும் தேனையும் நெய்யையும் சாப்பிட்டாய், நீ மிகவும் அழகுள்ளவளாகி, ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றாய். உள் அழகினாலே உன் கீர்த்தி புறஜாதிகளுக்குள்ளே பிரசித்தமாயிற்று, நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே அது குறைவற்றதாய் இருந்ததென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நீயோவென்றால் உன் அழகை நம்பி, உன் கீர்த்தியினால் சோரமார்க்கமாய் நடந்து, வழிப்போக்கரில் உனக்கு நேர்பட்ட யாவரோடும் வேசித்தனம்பண்ணி, உன் வஸ்திரங்களில் சிலவற்றை எடுத்து, பலவருணச் சோடிப்பான மேடைகளை உனக்கு உண்டாக்கி, அவைகளின்மேல் வேசித்தனம்பண்ணினாய், அப்படிக்கொத்த காரியங்கள் ஒருக்காலும் சம்பவித்ததுமில்லை, சம்பவிப்பதுமில்லை. நான் உனக்குக் கொடுத்த என் பொன்னும் என் வெள்ளியுமான உன் சிங்கார ஆபரணங்களை நீ எடுத்து, உனக்கு ஆண்சுரூபங்களை உண்டாக்கி, அவைகளோடே வேசித்தனம்பண்ணி, உன் சித்திரத்தையலாடைகளை எடுத்து, அவைகளை மூடி, என் எண்ணெயையும் என் தூபவர்க்கத்தையும் அவைகளின் முன் படைத்து, நான் உனக்குக் கொடுத்த என் அப்பத்தையும், நீ சாப்பிடும்படி உனக்குக்கொடுத்த மெல்லிய மாவையும் நெய்யையும் தேனையும் நீ அவைகளின் சுகந்தவாசனையாகப் படைத்தாய், காரியம் இப்படி ஆயிற்றென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

நீ எனக்குப் பெற்ற உன் குமாரரையும் உன் குமாரத்திகளையும் எடுத்து, அவர்களை அவைகளுக்கு இரையாகப் பலியிட்டாய். நீ செய்த வேசித்தனங்கள் போதாதென்று, நீ என் பிள்ளைகளை அவைகளுக்குத் தீக்கடக்கப்பண்ண ஒப்புக்கொடுத்து, அவர்களைக் கொலைசெய்தாய். நீ உன் எல்லா அருவருப்புகளிலும் வேசித்தனங்களிலும் நடக்கும்போது, நிர்வாணமும் அம்மணமாயிருந்ததும், உன் இரத்தத்திலே மிதிக்கப்பட ஏதுவாய்க் கிடந்ததுமான உன் சிறுவயதின் நாட்களை நினையாமற்போனாய். (எசேக்கியேல் 16:3-22).

ஒரு உண்மையுள்ள, அன்புள்ள கணவன் உண்மையற்ற தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தை நாம் படிக்கும் போது அக்கணவனின் வேதனையை நம்மால் உணர முடிகிறது. இங்கு தேவன் ஒரு மணவாளனாக இருந்து மணவாட்டியாகிய தெரிந்து கொள்ளப்பட்ட தம்முடைய ஜனத்துக்கு அத்தனை நன்மைகளையும் செய்த பிறகும்

கூட அவர்கள் தேவனை நிராகரித்தது எத்தனை வேதனையை தேவனுக்கு உண்டாக்கிருக்கும்? அத்தனை உரிமையுடனும் பாதுகாப்புடனும் அன்பு ஒருவரிடத்தில் இருந்து மற்றொருவரிடம் செலுத்தப்படும் போது அன்பு செலுத்தப்படும் அந்த நபர் தனக்குத் தான் சொந்தம் என்னும் எண்ணம் தோன்றுவதில் தவறு ஏதுமில்லை. அவ்விதமான உணர்வு மனித இதயத்தில் தோன்றுவது இயற்கை தானே, நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டவர்கள்தானே?

இதேவிதமான இருதயத்தில் வேதனை நிறைந்த வார்த்தைகளை நாம் ஓசியா பதினோராம் அதிகாரத்தில் வாசிக்க முடியும். இங்கே அன்புள்ள தகப்பனாகிய தேவன் தன் மழலை மகனிடம் இவ்விதமாய் சொல்கிறார் 'இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன், எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்.

அவர்கள் தங்களை அழைக்கிறவரின் முகத்துக்கு விலகிப்போய் விட்டார்கள், பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங் காட்டினார்கள். நான் எப்பிராயீமைக் கைபிடித்து நடக்கப் பழக்கினேன், ஆனாலும், நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற் போனார்கள் மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன். அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரம் கொடுத்தேன் (ஓசியா 11:1–4) 'எப்பிராயிமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப் போலாக்குவேன்? உன்னை எப்படி செபோய்மைப்போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது, என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன், எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன். ஏனென்றால் நான் மனுஷனல்ல,தேவனாயிருக்கிறேன்,நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர், ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்' (ஓசியா 11:8,9).

நீங்கள் பெற்றோர்களாக இருக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளிடத்தில் உங்களுக்கு உண்டான அன்பு எத்தகைய பாதிப்பை இருதயத்தில் ஏற்படுத்தும் என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள். வெற்றியின் போது உங்கள் பிள்ளைகள் அடையும் மகிழ்ச்சியையும், தோல்வியின் போது அவர்கள் அடையும் வேதனையையும் நீங்கள் அனுபவித்திருப்பீர்கள் அப்படித்தானே? அவர்கள் தவழ்ந்து வரும்போது அவருடைய கரங்களைப் பிடித்து

நடக்கச் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களா? குழந்தை தவறி விழும்போது அந்த வேதனையை உணர்ந்திருக்கிறீர்களா? குழந்தைகள் தங்கள் தவறான தெரிந்து கொள்ளுதலினால் குழியில் விழும் போது உங்களால் அவர்களை காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும் போது அவர்களை விட உங்களுக்கு அதிகமான வேதனை உண்டான அனுபவம் ஏதாவது உண்டா?

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்னும் நிலையில் நம் தகப்பனாகிய பிதாவுக்கு கீழ்ப்படியாமல் போனால் அது அவருடைய இருதயத்தை எவ்விதமாக காயப்படுத்தும், வேதனைப்படுத்தும் என்பதை மனிதர்களாகிய நாம் புரிந்து கொள்வதற்காகத்தான் பரிசுத்த ஆவியானவர் மிகத் துல்லியமான வார்த்தைகளை பதிவு செய்யும்படி தேவதாசர்களை ஏவியிருக்கிறார். உண்மையான அன்பு கொள்ளும் எந்த ஒரு இருதயமும் பாதிப்புக்குட்படுத்தப்படும். தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்புக்கும் இது அப்படியே பொருந்துகிறது. நாம் வெறுமனே நம் வார்த்தைகளினாலே தேவன் உன்னதமானவர் என்று வெற்று வார்த்தைகளை அள்ளி வீசலாம். ஆனால், அதே நேரத்தில் நம் இருதயத்தில் தேவனுக்கு முதலிடத்தை கொடுக்க மறுக்கிறோம். இது தேவனுக்கு மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்துகிறது. தேவனுடைய நீதியும் நேர்மையும் சோதோம் கொமோராவும் அழிக்கப்பட்டபோது, அதோடு சேர்த்து அழிக்கப்பட்ட அத்மா மற்றும் செபோயிம் பட்டணங்களைப் போல உண்மை இல்லாதவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறது. ஆனால், மறுமுனையில், அந்த உண்மையற்ற மனைவி மீதும், வழி தப்பிப்போனா பிள்ளை மீதும் அவர் தம்முடைய இருதயத்தில் கொண்டிருந்த மாபெரும் அன்பு அவருடைய இருதயத்தை கலங்கச் செய்து அவருக்கு மிகப்பெரிய வேதனையை உண்டாக்குகிறது.

ஆம், நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் (யாக்கோபு 4:5) நம் தேவன் தம்முடையவர்களை வேறொருவருக்கு விட்டுக் கொடுக்க ஒருபோதும் விரும்புவதில்லை.

✞

**நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.**

II கொரிந்தியர் 11:2

# கர்த்தரை ஸ்தோத்திரி

## Bless the Lord

*Raymond Elliott*

**ஏன் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே** (சங்கீதம் 103:2). சங்கீதகாரனாகிய தாவீது தன்னுடைய வாழ்க்கையில் எப்போதெல்லாம் நன்மைகளை அனுபவித்தாரோ, அப்போதெல்லாம் இதுபோன்று அழகான சங்கீதங்களைப் பாடும்படியாக அவர் ஏவப்பட்டிருக்கிறார். நிச்சயமாக (அவர் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டுத்தான் பாடியிருக்கிறார்). கர்த்தர் தாவீதின் வாழ்க்கையில் செய்த எல்லா காரியங்களுக்காகவும் அன்பு செலுத்த அவருடைய இருதயம் பொங்கி வழிந்திருக்கிறது. தாவீது எவ்விதமான இருதயத்தை பெற்றிருந்தாரோ அதே விதமான இதயத்தை நாம் பெற்றிருக்க வேண்டாமா? கர்த்தர் நமக்காக சரீரப் பிரகாரமாக செய்த எல்லாவற்றையும் அதிலும் குறிப்பாக ஆவிக்குரிய பிரகாரமாக நமக்குச் செய்த காரியங்களை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதா வினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17). தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்கள் அவருடைய இரத்தத்தினாலே மன்னிக்கப்படும்படி அந்தக் கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனை விட்டார் (யோவான் 3:16; எபேசியர் 1:7).

தேவன் நம்முடைய ஜீவியங்களில் செய்த, செய்து வருகின்ற எல்லா விதமான நன்மைகளுக்காக நாம் சபையாக கூடி வரும் போது ஜெபங்களில் வழிநடத்தும் சகோதரர்கள் அந்த நன்மைகளை நினைத்து தேவனுக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டும் என்று நான் அவர்களை உற்சாகப்படுத்துகிறேன். சகோதரர்கள் ஜெபத்தில் வழிநடத்தும் போது தேவனுடைய கிருபை, இரக்கம், அன்பு, பொறுமை போன்றவைகளுக்காக நன்றி செலுத்தாமல் ஜெபங்களை ஏறெடுப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது. இப்படி எப்படி இருக்க முடியும்? வேண்டுதல்கள் விண்ணப்பங்கள் ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. ஆனால், நன்றி உணர்வு வெளிப்படுத்தப்படுகிறதா! இன்றைய நாட்களில் நன்றி உணர்வு ஏறெடுக்கப்படுவது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது (பிலிப்பியர் 4:6; 1 தீமோத்தேயு 2:1).

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது (சங்கீதம் 100:4,5).

# நம்முடைய ஆராதனை ஆராதனையாக இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்!

## Make sure our worship is worship

*David Conley*

***வே***தாகமம் நாம் எப்படி ஜீவிக்க வேண்டும் என்பதைப் பற்றிய வழிகாட்டு புத்தகம் மாத்திரம் அல்ல, தேவன் காரியங்களை எப்படி பார்க்கிறார் என்பதை பற்றிய புரிதலை கொடுக்கும் புத்தகமாகவும் உள்ளது. ஆமோஸ் நான்காம் அதிகாரத்தில் தேவன் ஜனங்கள் தம்மை தவறாக ஆராதிப்பதை குறித்து அவர் என்ன நினைக்கிறார் என்பதை ஆமோஸ் வெளிப்படுத்தி இருக்கிறார். பெத்தேலுக்குப் போய் துரோகம் பண்ணுங்கள் (வசனம் 4)! பெத்தேல் ஆராதனை செய்யும் ஓர் இடமாக இருந்தது, அவர்கள் சரியான இடத்தில் இருந்த போதும் கூட தேவன் ஜனங்கள் தமக்கு துரோகம் பண்ணினதாக வேதனைப்படுகிறார். அதாவது, அந்த ஜனங்கள் உண்மையான ஆராதனையை தேவனை நோக்கி ஏறெடுக்கவில்லை, அவர்கள் தேவனுக்கு துரோகம் செய்தார்கள் அல்லது தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார்கள். தேவன் தொடர்ந்து நான்காம் வசனத்தில் கில்காலுக்கும் போய்த் துரோகத்தை பெருகப் பண்ணுங்கள் என்று சொல்கிறார். அந்த ஜனங்கள் தேவனை தவறாக ஆராதிப்பதினால் தங்கள் பாவத்தை இன்னும் அதிக மோசமாக்குகிறார்கள் என்று தேவன் அவர்களுக்கு காட்டுகிறார்.

மேலும் ஐந்தாம் வசனத்தில் தேவன் அந்த ஜனங்கள் சடங்காச் சாரங்களில் ஈடுபடுவதை விரும்புவதாகவும் ஆனால், அவர்கள் தேவனுக்கு உண்மையான ஆராதனையை ஏறெடுப்பதில்லை என்றும் சொல்கிறார். அந்த ஜனங்கள் இவ்விதமாய் அருவருக்கத்தக்க ஆராதனையை ஏறெடுத்தபடியால் அவர்கள் மனந்திரும்பி தம்மிடத்தில் கூட்டிச் சேர வேண்டும் என்று தேவன் விரும்பினார். இங்கே தேவன் அந்த ஜனங்களுடைய கவனத்தை ஈர்க்க எப்படி முயற்சித்தார்?

ஆறாம் வசனத்தில் தேவன் அவர்களுடைய ஆகாரத்தை எடுத்துப் போட்டார். ஏழாம் வசனத்தில் அவர்களுக்கு மழையை மறுத்தார். ஒன்பதாம் வசனத்தில் தேவன் அவருடைய பயிர்களை அழித்து போட்டார். பத்தாம் வசனத்தில் தேவன் எகிப்து தேசத்தில் அனுப்பின

கொள்ளையை நோயைப் போல இங்கும் அனுப்பினார். பதினொன்றாம் வசனத்தில் இந்த ஜனங்கள் தோற்கடிக்கப்பட தேவன் அனுமதித்தார் என்று நாம் வாசிக்க முடியும். ஆனால், ஒவ்வொரு முறையும் தேவன் ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று சொல்வதை நம்மால் காண முடியும்.

இந்த ஜனங்களை உண்மையான ஆராதனையை ஏறெடுக்க வைக்க தேவன் எத்தனையோ முயற்சிகளை எடுத்த போதிலும் அதில் பலன் கிடைக்காமல் போனபடியால் பன்னிரெண்டாம் வசனத்தில், தேவன்'ஆகையால் இஸ்ரவேலே, இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வேன். இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிற படியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு' (ஆமோஸ் 4:12). என்று சொன்னார். நாம் ஏறெடுக்கும் ஆராதனை உண்மையான ஆராதனையாக இருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோம்.

✞

---

## நோவாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள்!

1. **முன்கூட்டியே திட்டமிட வேண்டும். நோவா பேழையை கட்டினபோது மழைபெய்யவில்லை.**
2. **உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள் ஏனென்றால், வயதாகும் போதுகூட தேவன் நம்மிடம் அவருக்காக பெரிய காரியத்தை செய்யும்படி சொல்லலாம்.**
3. **நமக்கு எதிரான விமர்சனங்களுக்கு செவிகொடுக்க வேண்டாம். செய்து முடிக்க வேண்டிய பணியை தொடர்ந்து செய்யுங்கள்.**
4. **எல்லாமே வேகத்தை அடிப்படையாக வைத்து அமைவதில்லை. பேழையில் ஆமையும், சிறுத்தையும் ஒரே படகில்தான் பயணித்தன.**
5. **நம் வாழ்வில் எத்தகைய புயல் அடித்தாலும் சரி, தேவன் நம்மோடிருந்தால் அமைதி உண்டாகும்.**

# வந்து எங்களோடு ஆராதியுங்கள் !

## Come worship with us !

*Larry Murdock*

சபைக் கட்டிடங்களுக்கு முன்பாக எங்களோடு வந்து ஆராதியுங்கள் என்று அறிவிப்பு பலகை வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதைப்போல் தினசரி செய்தித் தாள்களிலும் கூட எங்களோடு வந்து ஆராதியுங்கள் என்னும் சொற்றொடரை விளம்பரமாக பார்த்திருப்பீர்கள். இந்த அழைப்பின் உட்பொருளைப் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள்.

எங்களோடு வந்து ஆராதியுங்கள் என்னும் அழைப்பு எந்த சபையால் விடுக்கப்படுகிறதோ அந்த சபைக்கு ஆராதனை மிக முக்கியமானது என்று மறைகமாக பொருள்படுகிறது. அது மாத்திரமல்ல, அந்த அழைப்பு யாருக்கு கொடுக்கப்படுகிறதோ அவருக்கும் சபை மிக முக்கியமானது என்று தான் பொருள் படுகிறது. பொதுவாக சபை அது ஒன்று கூடி வரும் போது ஆராதிக்கிறது சில சந்தர்ப்பங்களில் வேறு நோக்கங்களுக்காக சபை கூடினாலும் கூட, உதாரணமாக சபை கட்டிட பராமரிப்பு பணிகளுக்காக, பசியில் உள்ளவர்களுக்கு ஆகாரம் கொடுப்பதற்காக, போதுமான அளவு ஆடைகள் இல்லாதவர்களுக்கு ஆடைகள் வழங்குவது போன்ற நற்கிரியைகளைச் செய்ய அது குறித்து ஆலோசிக்க சபை கூடி வந்தாலும் கூட பெரும்பாலான நேரங்களில் ஆராதிப்பதற்காகத் தான் சபை ஒன்று கூடுகிறது.

தேவனை ஆராதிப்பவர்கள் ஒன்று கூடி வரும் போது, அவர்கள் தங்கள் குரல்களை இணைத்து தேவனை நோக்கி துதிகளை ஏறெடுக்கிறார்கள்; அவர்கள் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தைப் படிக்கும்போது தேவனோடும், கிறிஸ்துவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் ஐக்கியப்படுகிறார்கள். ஆராதனையின் ஒட்டுமொத்த நோக்கமே தேவன் மகிமைப்படுவதும் அங்கத்தினர்கள் தனித்தனியே பக்தி விருத்தி அடைவதும் தான்.

எங்களோடு வந்து ஆராதியுங்கள் என்னும் அழைப்பு விடுக்கிறவர்கள் ஆராதிக்க கற்றிருக்கிறார்கள் என்று மறைமுகமாக பொருள் படுகிறது. பரிசுத்த ஆவியானவர் அறியாமையுள்ள ஆராதனை சாத்தியம் என்று போதிக்கிறார். 1 கொரிந்தியர் 14:38]. அப்போஸ்தலர் 17:23 ல் அப்போஸ்தலனாகிய பவுல் கிரேக்க பட்டணமாகிய அத்தனே பட்டணத்துக்குச் சென்றார் என்று வாசிக்கிறோம். அப்பட்டணத்தின் வழியாய் அவர் கடந்து போனபோது அங்கே ஒரு பலிபீடத்தைக் கண்டார் அதில் அறியப்படாத தேவனுக்கு என்று எழுதப்பட்டிருந்தது. எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்

குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். அப்போஸ்தலர் 17:23]. அறியாமையின் ஆராதனை தேவனால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வீணான ஆராதனையும் அபாயகரமான ஒன்றாகும். நம்முடைய ஆராதனை முறை தேவனுடைய வார்த்தையின்படி அல்லாமல் மனித பாரம்பரியத்தின்படி இருக்கும்போது அது வீணான ஆராதனை என்று அழைக்கப்படுகிறது. இதைப் பற்றி மத்தேயு 15 ஆம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து போதித்திருக்கிறார்.' இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்' [மத்தேயு 15:8,9]. மனுஷனுடைய பாரம்பரியங்கள் தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆராதனையை ஏறெடுக்க இந்த ஜனங்களுக்கு தடைகளாக இருந்தன. இதன் காரணமாக இவர்களுடைய ஆராதனை வீணான ஆராதனையாக மாறிவிட்டது.

தவறான நபருக்கு ஏறெடுக்கப்படும் ஆராதனையும் தோற்றுப் போய் விடுகிறது. அப்போஸ்தலனாகிய யோவான் மகிமையான தூதன் தனக்கு முன்பாகத் தோன்றின போது, அந்த தூதனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தார். உடனே அந்த தூதன் யோவானுக்குப் பிரதியுத்திரமாக 'அதற்கு அவன்: நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார், உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன், தேவனைத் தொழுதுகொள் என்றான்' [வெளிப்படுத்தின விசேஷம் 22:9]. யோவானுடைய ஆராதனை தவறான நபருக்கு ஏறெடுக்கப்பட்டது.

மேலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த சமாரிய ஸ்திரியிடம் 'உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் என்றார் [யோவான் 4:23]. ஒரு நபர் வெற்றிகரமான ஆராதனையை ஏறெடுக்கத் தகுதி அடைய, ஆவியோடு ஆராதனையை ஏறெடுத்திருக்க வேண்டும். அதாவது, அந்த ஆராதனை மனித இருதயத்தில் இருந்து ஏறெடுக்கப்பட்டிருக்கவேண்டும். நாம் ஆராதனைக்காக ஒரு கட்டிடத்தில் ஒன்று கூடலாம். ஆனால், ஆராதனையானது ஒவ்வொருவருடைய இருதயத்தில் நடைபெற வேண்டும். நாம் யாரோ ஒருவரை நம்மோடு இணைந்து ஆராதிக்க அழைப்பு விடுக்கும் போது,

நம்மோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அவர்கள் சிலரையும் அழைத்து வர வேண்டும் என்று தான் அந்த அழைப்பை விடுக்கிறோம்

ஒருவர் தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆராதனையை ஏறெடுக்க அவர் தன் இருதயத்திலிருந்து அந்த ஆராதனையை ஏறெடுப்பது மாத்திரமல்லாமல் அந்த நபர் உண்மையோடும் தேவனை ஆராதிக்க வேண்டும். அதாவது, தேவனுடைய வார்த்தையில் காணப்படும் உண்மைக்கேற்ப ஆராதனையை ஏறெடுக்க வேண்டும். இந்த சத்தியத்திற்கு பரிசுத்தமாக்கும் வல்லமை உண்டு என்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து காட்டியிருக்கிறார். [யோவான் 17:17] அவர் தேவனிடம் தம்முடைய சீஷர்களை பரிசுத்தமாக்கும்படி விண்ணப்பித்ததைப் பதிவு செய்திருக்கிறது. **உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்: உம்முடைய வசனமே சத்தியம்** [யோவான் 17:17]. ஏதோ ஒன்றை பரிசுத்தமாக்குவது என்பது அதை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பிரித்தெடுப்பதாகும். ஒரு குறிப்பிட்ட ஆவிக்குரிய செயல்பாடுகளை பின்பற்றுபவர்களை உண்மையாக தேவனை ஆராதிப்பவர்களாக இந்த சத்தியம் பிரித்தெடுக்கிறது. நம்முடைய ஆராதனையை தேவன் அங்கீகரிக்கிறார் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தினால் நாம் அதை அறிந்து கொள்ள முடியும். அதாவது, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட செயல்பாடுகளை நாம் நடைமுறைப்படுத்தும் போது சத்தியத்தின் படி நாம் தேவனை ஆராதிக்கிறோம் என்று பொருள்படும்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோம தேசாதிபதியாகிய பெலிக்ஸ் முன்பாக நிற்கும்போது இவ்விதமாய் சொன்னார் உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன். அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனைசெய்து நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புத்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து, நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்' [அப்போஸ்தலர் 24:15]. நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசன புத்தகங்களிலும் இயேசு தான் கிறிஸ்து என்பதற்கு அநேக சாட்சியங்கள் இருந்தபடியால் அவைகளை வாசித்த பவுல் மற்ற யூதர்களை விட வித்தியாசமாக தேவனை தொழுதுகொண்டார். பவுல் தேவனை ஆராதிக்கும் முறையில் சத்தியம் தான் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. கிறிஸ்தவர்கள் மற்றவர்களை தங்களோடு சேர்த்து தேவனை ஆராதிக்க அழைப்பு விடுக்கும் போது தாங்கள் ஆராதிக்கும் முறை சத்தியத்தின்படி அதாவது, தேவனுடைய வார்த்தையின்படி இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவன் தம்முடைய வார்த்தைகளில் அவர் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆராதனை முறை என்ன என்பதை போதித்திருக்கிறார். நாம் தேவனுடைய வார்த்தையின்படி ஆராதனை

முறையை அமைத்துக் கொண்டால் அந்த ஆராதனை தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வசன அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட ஆராதனை முறையின் நன்மைகளை சற்று சிந்தித்துப் பாருங்கள். வேத அடிப்படையிலான ஆராதனை ஆராதிக்கின்ற ஒவ்வொருவரையும் தேவனால் அங்கீகரிக்கப்படும் செயல்பாடுகளில் ஈடுபடுத்துகிறது. தேவனுக்கு நம் மனமார்ந்த துதிகளை வித்தியாசமான வார்த்தைகளில், வித்தியாசமான பாடல்களில், வித்தியாசமான குரல்களில் நாம் ஏறெடுக்க அவர் நமக்கு முழு சுதந்திரத்தை தந்திருக்கிறார். இன்றைய நாட்களில் காது கேளாதவர்களும், காது கேட்கும் கருவிகள் மூலமாக பாடப்படும் பாடல்களை, கேட்டு தங்கள் இருதயங்களில் தேவனை துதிக்க முடியும், அதைப்போல் பார்வை அல்லாதவர்களும் கூட ப்ரெய்லி எழுத்துமுறை மூலமாக பாடல் வரிகளை வாசித்து தங்கள் இருதயங்களில் தேவனை துதித்துப் பாட முடியும். ஒட்டுமொத்தமாக நாம் எல்லோருமே சத்தியத்தில் வேரூன்றப்பட்டிருக்கிற பாடல் வரிகள் மூலமாக நாம் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு நம்முடைய இருதயங்களில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி அவரை மகிமைப்படுத்துகிறோம் [எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16]. சங்கீத புத்தகங்களிலும், கீர்த்தனை பாடல்களிலும் தேவனை துதித்து பாடப்பட்டிருக்கும் பாடல்களால் நம் இருதயங்கள் பக்தி விருத்தி அடைகின்றன.

நாம் சபையாகக் கூடி வரும் போது சகோதரர் ஒருவர் ஜெபத்திலே வழி நடத்தும் போது, நாம் எல்லோரும் ஒருமனதோடு அந்த ஜெபத்திலே பங்கெடுக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபத்தின் வல்லமையை பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கிறார் அநேகர்மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் [2 கொரிந்தியர் 1:11]. புதிய ஏற்பாட்டில் ஆராதனைக்காக சபையாகக் கூடி வந்த போதெல்லாம் தேவனை நோக்கி விண்ணப்பங்களை ஏறெடுத்து திருக்கிறார்கள். நம்முடைய ஜெபங்களில் நம்முடைய தேவைகளுக்காக மாத்திரம் அல்ல பிறருடைய தேவைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டிய அவசியம் நமக்கு உண்டு.

ஒரு பிரசங்கியாரோ அல்லது போதகரோ தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளும் போது, நாம் தேவனுடைய வார்த்தைகளை தியானிக்கிறதற்கு தம்முடைய இருதயங்களை திறந்த நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். நம் லீதியாள் கிறிஸ்துவை பற்றிய பிரசங்கத்தை கேட்டபோது அவள் தன் இருதயத்தை திறந்தாள் என்று நாம் வாசிக்கிறோம் [அப்போஸ்தலர் 16:14]. தீத்து 3:5 இவ்விதமாய் சொல்கிறது 'நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்

(தீத்து 3:5). பரிசுத்த ஆவினுடைய புதிதாக்குதல் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி பரிசுத்த ஆவியானவர் எழுதி கொடுத்திருக்கிற வார்த்தைகளினால் தான் ஏற்படுகிறது.

கர்த்தருடைய நாளில் கர்த்தருடைய பந்தியின்போது நாம் தேவன், இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவரோடு ஐக்கியப்பட முடியும். அது மாத்திரமல்ல, பொதுவான அன்பில் உலகம் முழுவதும் உள்ள லட்சக்கணக்கான விசுவாசிகளோடு நாம் இருதயங்களில் இணைய முடியும். நாம் இணைந்து கர்த்தருடைய வருகை வரை அவருடைய மரணத்தை நினைவு கூறும் வாய்ப்பு நமக்குத் தரப்பட்டிருக்கிறது.' இதுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 26:29).

கிறிஸ்துவின் சபையானது வேத வாக்கியங்களில் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட காரியங்களைத் தான் ஆராதனை முறையாக கொள்ள வேண்டும். உதாரணமாக, சிலர் புதிய ஏற்பாட்டு அங்கீகாரமில்லாமல் இசைக்கருவிகளை ஆராதனை வேளையிலே பயன்படுத்துகிறார்கள். இது போன்ற செயல்பாடுகளை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவோ, பின்பற்றவோ கூடாது. சிலர் ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்திக் கொண்டு எங்களோடு சேர்ந்து ஆராதிக்க வாருங்கள் என்று அழைப்பு விடுப்பது வேடிக்கையாக இருக்கிறது.

நண்பர்களே, கிறிஸ்துவின் சபை எங்களோடு வந்து ஆராதியுங்கள் என்று அழைப்பு விடுக்கும்போது தேவனால் அங்கீகரிக்கப்படும் எளிய ஆராதனை முறையில் பங்கெடுக்கும்படித் தான் அழைப்பு விடுக்கிறது. வேதாகம அடிப்படையில் ஏறெடுக்கப்படும் ஆராதனையில் பங்கெடுக்கும்படி சபை அழைப்பு விடுக்கும் போது யார் தான் அதில் பங்கெடுக்க மறுக்க முடியும்?

புதிய ஏற்பாட்டு சத்தியத்தில் வேரூன்றப்பட்டிருக்கும் ஆராதனை முறையில் பங்கெடுக்கும் படி ஜனங்களுக்கு அழைப்பு விடுப்பது கிறிஸ்துவின் சபைகளுக்கு அவசியமாய் இருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு பர்னபா மற்றும் சில யூதர்கள் புறஜாதியாரோடு புசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், விருத்தசேதனம் உள்ளவர்கள் வந்தபோது அவர்களுக்கு பயந்து அவர்களை விலகிப்பிரிந்தார்கள். இச்செயலைக் கண்ட பவுல் பேதுருவை கடுமயாய் எதிர்த்து கண்டித்திருக்கிறார் (கலாத்தியர் 2:14). பவுல் சத்தியத்திற்காக நின்ற காரியத்தில் அவர் சரியாகத்தான் செய்திருக்கிறார், அதன் காரணமாகத்தான் யூத கிறிஸ்தவர்களும், புறஜாதி கிறிஸ்தவர்களும் ஆராதனையில் ஐக்கியம் கொண்டார்கள். கிறிஸ்துவின் சபைகள் இனமொழி நிற கலாச்சார பேதங்களைக் கடந்து சுவிசேஷ சத்தியத்தின்படி ஆராதனை முறைகள் கடைபிடிக்கப்படுகிறதுக்காக தொடர்ந்து போராட வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆம், கிறிஸ்துவின் சபை உங்களுக்கு வாழ்த்துதலை தெரிவித்துக் கொண்டு எங்களோடு வந்து ஆராதியுங்கள் என்று அழைப்பு விடுக்கிறது. ✞

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

‘தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.

இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார், அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.

அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.

அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய்,

புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குப் கீழ்ப்படியாதவர்களுமாய்,

உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

ரோமர் 1:28–32

# தேவனால் உங்களுக்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட பாதை

## God's chosen path for you

*Aaron cozort*

**உ**ங்கள் பாதை இருளால் சூழப்பட்டவையாக இருக்கிறது. உங்கள் நம்பிக்கை கிட்டத்தட்ட எல்லாம் போய்விட்டது. நீங்கள் முன்னோக்கி பார்க்கும் பொழுது இருளை மாத்திரம் பார்க்கிறீர்கள். நீங்கள் சரியான முடிவுகளை எடுக்கத் தடுமாறுகிறீர்கள். எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்கேயோ போய்விடலாம் என்று நினைக்கிறீர்கள். அப்படியென்றால், எதிர்நோக்குவதற்கு என்று நேர்மறையான காரியங்கள் எதுவும் இல்லையா? கிறிஸ்தவ வாழ்வு என்பது நம்பிக்கை அற்ற ஒன்றா? நடந்து செல்ல சரியான பாதை தெரியாத நம்பிக்கையற்ற உலகில் இருளில் நடப்பது போன்றதா?



அவர்கள் இரவும், பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தப்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார் (யாத்திராகமம் 13:21). இந்த வசனப் பகுதியில் இஸ்ரவேல் எகிப்திலிருந்து எப்போது வெளியேற வேண்டும் என்பதை மோசே தேர்ந்தெடுக்கவில்லை. மோசே வாலிபனாக இருந்தபோது தான் நினைத்த சமயத்தில் இஸ்ரவேலை விடுவிப்பதாக நம்பினார். ஆனால், இஸ்ரவேலை விட்டு வெளியேறும் காலத்தை தேவன் தான் தெரிந்து கொண்டார். அது மாத்திரம் அல்லாமல், மோசே இஸ்ரவேலை தேவன் துரிதமாக விடுவிக்கப் போகிறதாக எண்ணினார். ஆனால், தேவன் அப்படி துரிதமாக விடுவிக்கவில்லை. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை மோசே மூலமாக வெளியே கொண்டு வரும் காலத்தை தேவன் தான் தெரிந்து கொண்டார்.

தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலை வெளியே கொண்டு வந்த போது, அந்த ஜனங்களால் தாங்கள் விரும்பிய இடத்திற்குச் செல்ல முடியவில்லை. மோசே ஒரு வரைபடத்தை வைத்துக் கொண்டு நாம் இந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்று எதையும் தீர்மானிக்கவில்லை. மாறாக, தேவன் தாமே பகலிலே மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்னி ஸ்தம்பமாகவும் இருந்து அவர்களை

அந்த வனாந்திர யாத்திரையில் வழி நடத்தினார். மோசேயும் அந்த இஸ்ரேல் ஜனங்களும் அந்த வனந்திரத்தில் தேவப்பிரசன்னத்தில் வழி நடத்தப்பட்டார்கள்.

நெகேமியாவின் நாட்களில் வாழ்ந்த யெசுவா என்னும் பிரதான ஆசாரியன் தேவனுடைய செயல்பாடுகளைக் குறித்து ஜனங்களுக்கு இவ்விதமாய்ச் சொன்னான்‘ பார்வோனிடத்திலும், அவனுடைய எல்லா ஊழியக்காரரிடத்திலும் அவன் தேசத்தின் சகல ஜனத்தினிடத்திலும், அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தீர். அவர்கள் உமது ஜனங்களை அகந்தையாய் நடத்தினார்கள் என்பதை அறிந்திருந்தீர். இப்படியே இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி உமக்குக் கீர்த்தியை உண்டாக்கினீர்.

நீர் அவர்களுக்கு முன்பாகச் சமுத்திரத்தைப் பிரித்ததினால், கடலின் நடுவாகக் கால் நனையாமல் நடந்தார்கள். வலுவான தண்ணீர்களிலே கல்லைப்போடுகிறதுபோல, அவர்களைத் தொடர்ந்தவர்களை ஆழங்களிலே போட்டுவிட்டீர். நீர் பகலிலே மேகஸ்தம்பத்தினாலும், அவர்கள் நடக்கவேண்டியவழியை அவர்களுக்கு வெளிச்சமாக்க இரவிலே அக்கினிஸ்தம்பத்தினாலும் அவர்களை வழிநடத்தினீர் (நெகேமியா 9:10–12).

இஸ்ரவேல் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வந்து சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, சாலமோன் ஞானி தன்னுடைய குமாரனை கீழ்காணும் வார்த்தைகளால் உற்சாகப்படுத்தினார். உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்கு பயந்து, தீமையை விட்டு விலகு (நீதி 3:5–7).

எரேமியா தீர்க்கதரிசி தேவனைப் பற்றி இவ்விதமாய்ச் சொல்கிறார் கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் தடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன், கர்த்தாவே, என்னைத் தண்டியும் ஆனாலும், நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்டைய கோபத்தினாலே அல்ல மட்டாய்த் தண்டியும். உம்மை அறியாத ஜாதிகளின்மேலும், உமது நாமத்தைத் தொழுது கொள்ளாத வம்சங்களின்மேலும் உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும், அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவனை விழுங்கி, அவனை நிர்மூலமாக்கி, அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்களே‘ (எரேமியா 10:23–25). என்று சொல்லப்பட்ட வசனப் பகுதிகளெல்லாம் பழைய ஏற்பாட்டில் இருந்து ஓர் உண்மையான தெளிவான பாடத்தை நமக்கு கற்றுத் தருகிறது. அப்பாடம் இன்றும் நமக்கும் உண்மையாக

இருக்கிறது. நாம் நம்முடைய பாதைகளை தீர்மானிக்க நம் சுய ஞானத்தைச் சார்ந்து இருக்கக் கூடாது. நீங்கள் உண்மையுள்ள கிறிஸ்தவராயிருக்கிறீர்களா, தேவன் உங்களுக்காக தெரிந்து கொண்ட பாதையை தேடுகிறவர்களாக இருக்கிறீர்களா?

நமக்கு நாமே பாதையை உருவாக்கிக் கொண்டால், தேவன் நமக்காக தெரிந்து கொண்டிருக்கிற பாதையை அறிந்து கொள்ளவே முடியாது. மனித ஞானத்தால் தேவன் நமக்காக தெரிந்து கொண்டிருக்கிற பாதையை அறிந்து கொள்ள முடியாது. அதைப்போல் நமக்கு நாமே பாதையை உருவாக்கிக் கொண்டால், அது செவ்வையான பாதையாக இருக்க முடியாது. அப்பாதை கடினமானதாயும், இடர்பாடுகள் நிறைந்ததாயும்தான் இருக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் அந்த வனாந்திர யாத்திரையில் தாங்கள் விரும்பிய பாதையை தெரிந்த கொண்டதால்தான் அதிக வருடங்கள் அங்கே அலைந்து திரிய வேண்டியதாருந்தது. தேவன் உங்களுக்காக தெரிந்து கொண்ட பாதையை நீங்கள் காணும் போது, அது சரியான பாதை அல்ல என்று எண்ணி நீங்கள் பின்வாங்கி போவீர்களா? அப்படி நாம் பின்வாங்கி போனால் தோல்வி நமக்கு உறுதி என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நாம் நம் சுய புத்தியின் மேல் சாயாமல், நம் முழு இருதயத்தோடும் கர்த்தரில் தொடர்ந்து நம்பிக்கையாயிருப்போம். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது' [சங்கீதம் 119:105].

✞

---

**சோர்வை மேற்கொள்ளுதல் !**

**தேவனுடைய சமூத்தில் தனித்திருங்கள்**
(I சாமுவேல் 30:89)

**தேவனுடைய ஜனங்களை நாடுங்கள்**
(I சாமுவேல் 20:7)

**தேவனுடைய வாக்குத்தத்தங்களில் சாய்ந்திருங்கள்**
(II கொரிந்தியர் 1:20)

**தேவனுடைய பராமரிப்பை நினைவில் கொள்ளுங்கள்**
(ரோமர் 8:28)

# உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது

## Your speech Betrays you

*Paul Holland*

**நா**ங்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக ஒரு மூப்பருடைய வீட்டிலே குழுமியிருந்தோம். அங்கே ஏராளமான கல்லூரி செல்லும் மாணவர்களும், மாணவிகளும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் என்னுடைய தெற்கத்திய ஆங்கிலத்திற்கு என்னை பரிகாசம் செய்தார்கள். நான் அமெரிக்க தேசத்தின் தென்பகுதியில் வசிப்பதால் அமெரிக்காவின் மற்ற பிராந்தியங்களில் பேசப்படும் ஆங்கிலத்தை விட நாங்கள் பேசும் ஆங்கிலம், அந்த பேச்சு நடை சற்று வித்தியாசமாக இருக்கும். இதன் காரணமாக அந்த புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது அங்கே கூடியிருந்த இளைய தலைமுறையினர் என்னை பரிகாசம் செய்தார்கள். உதாரணமாக, Humble என்னும் ஆங்கில சொல்லில் நான் முதல் எழுத்தை உச்சரிப்பதில்லை. இதன் காரணமாக பலர் நான் அமெரிக்க தேசத்தின் தென்பகுதியின் வட்டார வழக்கை பயன்படுத்துவதாக என்னை பரிகாசம் செய்வதுண்டு.

நம்முடைய நடைமுறை வாழ்வில் நம் பேச்சு நம்மை வெளிப்படுத்துகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கீலேயாத் நாட்டை சேர்ந்தவர்களுக்கும், எப்பிராயீம் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் வார்த்தைகளை உச்சரிப்பதில் பெரிய வித்தியாசம் உண்டு. எப்பிராயீம் நாட்டைச் சேர்ந்தவர்களால் ஷிபோலேத் என்னும் வார்த்தையை உச்சரிக்க முடியாது. அதற்கு பதிலாக அவர்கள் சிபோலேத் என்று தான் உச்சரிப்பார்கள். இது நியாயாதிபதிகள் 12:1-7 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல் என்னுடைய அனுபவத்தில் ரோமானிய நாட்டைச் சேர்ந்தவர்களுக்குத் என்னும் எழுத்தை உச்சரிப்பதில் பிரச்சனை இருக்கிறது. அமெரிக்கர்களுக்கு சில எழுத்துக்களை உச்சரிப்பதில் பிரச்சனை உள்ளது. ஆம், நிச்சயமாகவே நம் பேச்சு நம்மை வெளிப்படுத்துகிறது.

இது வெறுமனே நாம் வார்த்தைகளை எப்படி உச்சரிக்கிறோம் என்பது மாத்திரமல்லாமல் நாம் இப்படித்தான் காரியங்களை சொல்கிறோம் என்பதைத் தான் காட்டுகிறது. நாங்கள் ரோமானியா தேசத்தில் இருந்தபோது அங்கே இருந்த ஒரு குழந்தைகள் மருத்துவமனைக்கு சில விளையாட்டுப் பொருட்களையும், பழங்களையும் வெகுமதிகளாக கொடுத்தோம். நாங்கள் அந்த பரிசு பொருட்களை ஒரு சிறிய பையில் போட்டு குழந்தைகள் இல்லாத நேரத்தில் அவர்களுடைய படுக்கையின் மேல் வைத்தோம். அதை குறித்து என்னிடம் கேள்வி கேட்கப்பட்ட போது நான் அதற்கு ரோமானிய மொழியில் பதிலளித்தேன். நாம் ஆங்கிலத்தில்

படுக்கையின் மேல் அல்லது படுக்கை மீது வைத்தேன் என்று தான் சொல்வோம். ஆனால், ரோமானிய மொழியில் படுக்கையில் வைத்தேன் என்று தான் சொல்வது வழக்கமாம். உண்மையாகவே நம் பேச்சு நாம் யார் என்பதை வெளிப்படுத்துகிறது.

உங்கள் பேச்சு உங்களைப் பற்றி என்ன சொல்கிறது? உங்கள் பேச்சினால் உங்கள் துணையை நீங்கள் நேசிக்கிறீர்கள், அவர்களுக்கு மரியாதை கொடுக்கிறீர்கள் என்பதை காட்டுகிறீர்களா? நீங்கள் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறீர்களா? உங்கள் பேச்சில் கேலியும் கிண்டலும் இருக்கிறதா? நீங்கள் பொறுமையற்றவர்களாக இருக்கிறீர்களா? மற்றவர்களைப் புண்படுத்தும் விதத்தில் பேசுகிறீர்களா? மற்றவர்களிடம் கடுமையாக நடந்து கொள்கிறீர்களா? உங்கள் பேச்சு நீங்கள் உங்கள் குழந்தைகளை நேசிக்கிறீர்கள் அல்லது அவர்களை மதிக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறதா? உங்கள் பேச்சினால் நீங்கள் பொறுமை உள்ளவர்கள் என்பதை காட்டுகிறீர்களா? உங்கள் பேச்சினால் நீங்கள் அன்புள்ளவர்கள்,சமாதானத்தை விரும்புகிறவர்கள் மகிழ்ச்சிகரமானவர்கள் என்பதைக் காட்டுகிறீர்களா?

உங்கள் பேச்சு உங்களைப் பற்றி என்ன சொல்கிறது? உங்கள் பேச்சு நீங்கள் இயேசுவை நேசிக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறதா? நீங்கள் அவரை பின்பற்றுகிறீர்கள் என்பதை காட்டுகிறதா? எந்த நேரத்திலும் நீங்கள் அவரை விட்டுத் தூரமாக இல்லை என்பதைக் காட்டுகிறதா? அவர் நம் இருதயத்தில் வாசம்செய்து நம் வாழ்க்கையை ஊக்கப்படுத்தினால் நம்மால் எப்படி தொடர்ச்சியாக முரட்டுத்தனமாக நடந்து கொள்ள முடியும்? எப்படி மற்றவர்களை புண்படுத்தும் வகையில் கேலியும் கிண்டலுமாக பேச முடியும்?



இந்த நீதிமொழிகளை பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள்' நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்: மாறுபாடுள்ள நாவோ அறுப்புண்டுபோம்' (நீதிமொழிகள் 10:31). பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு! ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம் (நீதிமொழிகள் 12:18). ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்: நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும் (நீதிமொழிகள் 15:4).' தன் வாயையும், நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்'(நீதிமொழிகள் 21:23). தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது' (நீதிமொழிகள் 31:26).

...விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்' (மத்தேயு 12:34-37).

உங்கள் பேச்சு உங்களை வெளிப்படுத்துகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது என்ன சொல்கிறது?


## கிறிஸ்துவின் சேனையில் போர்ச்சேவகர்களின் சீருடைகள்

1. சத்தியம் என்னும் கச்சை — எபேசியர் 6:14
2. நீதியென்னும் மார்க்கவசம் — எபேசியர் 6:14
3. ஆயத்தம் என்னும் பாதரட்சசை — எபேசியர் 6:15
4. விசுவாசமென்னும் கேடகம் — எபேசியர் 6:16
5. இரட்சணியமென்னும் தலைச்சீரா — எபேசியர் 6:17
6. ஆவியின் பட்டயம் — எபேசியர் 6:17

# தேவன் எவ்வளவு நெருக்கமாக நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார்

## How closely is God watching us?

*Cliff Holmes*



அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: நீ என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப்போல பூமியில் ஒருவனுமில்லை. முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார் (யோபு 2:3). நாம் வசிக்கும் இந்த உலகத்தில் கோடிக் கணக்கான மக்கள் வாழ்வதால் நாம் அவ்வளவு முக்கியமானவர்கள் அல்ல. எனவே, தேவன் நம் அன்றாட செயல்பாடுகளை அவர் உற்று நோக்க வாய்ப்பில்லை என்று நாம் நினைக்கலாம். இந்த எண்ணம் உண்மையாக இருந்தால் சில வேளைகளில் நம்முடைய பாவ செயல்களை சர்வவல்ல தேவனிடமிருந்து நம்மால் மறைக்க முடியும். இது இப்போது மாத்திரமல்ல, எப்போதுமே சாத்தியமாக இருந்ததில்லை. தேவன் இப்பிபஞ்சத்தின் நட்சத்திரங்களையும், கோள்களையும், வால் நட்சத்திரங்களையும் சந்திரனையும் உண்டாக்கினார். அது மாத்திரமல்ல, இவ்வுலகில் மனிதன் வாழவும், சுவாசிக்கவும், நடக்கவும் பேசவும் தக்கதாய் மனித சரீரத்தையும் அதன் செயல்பாடுகளையும் வடிவமைத்தார். தேவன் மனிதனை உண்டாக்கி மனிதனுக்கு உகந்த கோள் பூமி தான் என்பதை அறிந்து இந்த பூமியை மனிதனுடைய வசிப்பிடமாகக் கொடுத்தார். தேவன் அத்தோடு நின்று விடாமல், மனிதன் அவருடைய

சிருஷ்டிப்பாய் இருக்கிறபடியால் மனித இனத்தை அவர் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்.

மேற்சொல்லப்பட்டவைகளுக்கு எல்லாம் ஆதாரம் தேவன் தம்முடைய தாசனாகிய யோபுவைப் பற்றி சாத்தானிடம் பேசியதுதான். தேவன் தமது தாசனாகிய யோபுவின் இருதயத்தைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார். இப்பூமியில் யோபுவைப்போல் உத்தமனும்,சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன் ஒருவனும் இல்லை என்பதை தேவன் அறிந்திருந்தார். சாத்தான் யோபுவை அநியாயமாக சோதித்த பிறகும் கூட யோபு தன் உத்தமத்தை விட்டு விலகவே இல்லை. சாத்தானுடைய குறிக்கோள் எல்லாம் எப்படியாவது யோபு தேவனை முக முகமாக சபிக்க வேண்டும். அதன் மூலம் யோபு தேவனால் பகைக்கப்பட்டு யோபு நித்திய தண்டனை அடைவான் என்பதாக இருந்தது.

இன்றைய நாட்களில் முன்னெப்போதையும் விட கோடிக்கணக்கான மக்கள் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், இவ்வுலகில் உள்ள அத்தனை பேரையும் தேவனால் காண முடியுமா?கண்காணிக்க முடியுமா? நிச்சயமாக நம் தேவனால் முடியும், ஏனென்றால், இருக்கின்ற எல்லாவற்றையும் உண்டாக்கின நம் தேவன் சர்வ ஞானியாகவும், சர்வ வல்லவராகவும், சர்வ வியாபியாகவும் இருக்கிறார். நம்முடைய செயல்பாடுகள் எல்லாவற்றையும் அது நல்லதாக இருந்தாலும் சரி அல்லது கெட்டதாக இருந்தாலும் சரி எல்லா வற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய ஒவ்வொரு எண்ணத்தையும் அவர் அறிந்திருக்கிறார். தேவனுக்கு நம்முடைய சந்தோஷம் துக்கம் எல்லாம் தெரியும். நாம் அவருக்கு சேவை செய்வதில் பலவீனமாய் இருப்பதும் அவருக்குத்தெரியும். நம்முடைய இருதயத்தின் எல்லா நினைவுகளையும் அவர் அறிந்திருக்கிற படியால் நாம் நம்முடைய உத்தமத்தை விட்டு சில வேளைகளில் விலகிப் போவதையும் அவர் அறிந்திருக்கிறார்.

கடைசியாக,நான் என் இளம் வேதாகம கல்லூரி மாணவர்களுக்கும், என் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் சொன்ன அதே புத்தி மதியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். தேவன் உங்கள் அருகில் நின்று நீங்கள் செய்வதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் நீங்கள் எவைகளை எல்லாம் செய்யக் கூடாதோ அதை ஒருபோதும் எந்தச் சூழ்நிலையிலும் செய்யாதிருங்கள். தேவன் சதா காலங்களிலும் நம்மோடி ருந்து, நாம் நினைப்பதையும் செய்வதையும் அறிகிறார் என்பதை ஒருபோதும் மறந்து விட வேண்டாம்.

✞

வேதாகம கதாபாத்திரம்

# நீங்கள் எதைப் பார்க்க வந்தீர்கள்?

## What did you come to see?

*David R.Kenney*

**ந**ம்முடைய ஜீவியத்தில் சில சந்தர்ப்பங்களில் நம் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகாமல் போகலாம், அந்த வேளைகளிலே நாம் சோர்ந்து போகிறோம். நம் வாழ்வில் நடந்த சம்பவங்களை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கும் போது எதிர்பார்ப்புகள் எட்டப்படவில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். உதாரணமாக, யோவான் ஸ்நானனைப்பற்றி இயேசு கிறிஸ்து சொன்னவைகளை சற்று உற்று நோக்குவோம் யோவானுடைய தூதர்கள் போனபின்பு அவர் யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால், எதைப்பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந்தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலே இருக்கிறார்கள் அல்லவென்றால், எதைப்பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் அவன் தான் ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியதீர்க்கதரிசி ஒருவனுமில்லை, ஆகிலும், தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக்கா [7:24–28].



யோவான் ஸ்நானனைப்பொறுத்தவரை ஜனங்கள் அவரிடம் எதிர்பார்த்த பண்புகள் ஒன்று கூட இல்லாதிருந்தார். மாறாக, யோவான் ஸ்நானன் தனித்துவம் வாய்ந்த பண்புகளை உடைய தனித்துவம் வாய்ந்த நபராக இருந்தார். யோவான் ஸ்நானனை பொறுத்தவரையில் தீர்க்கதரிசிகளில் தலைசிறந்தவராக கருதப்பட்டார். ஆனால், தேவனுடைய ராஜ்யத்தில் அவர் சிறியவராகத்தான் இருந்தார். இது எப்படி சாத்தியம் என்று நீங்கள் நினைக்கக்கூடும். தீர்க்கதரிசிகளின் செய்திகள் எல்லாமே வருங்கால மேசியாவை பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்தன, ஆனால் யோவான் ஸ்நானன் மேசியாவின் வருகையை முன்னறிவிக்கும் முன்னோடியாக நியமிக்கப்பட்டார் (மத்தேயு3:1-4). ஆனால், நாம் இங்கே கவனிக்க வேண்டிய ஒன்று மேசியாவின் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாகவே யோவான் ஸ்நானன் மரித்து விட்டார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானனை மிக உயர்வாகக் கருதினார். அதன் காரணமாகத்தான் இயேசு நாம் பார்த்த வசனப் பகுதியில் யோவானைக் புகழ்ந்து பேசுகிறார்

இயேசு கிறிஸ்துவுக்கும், யோவான் ஸ்நானனுக்கும் இடையே உள்ள சுவாரசியமான பொருத்தம் என்னவென்றால், ஜனங்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றார் போல ஜனங்களுக்கு முன்பாக காட்சியளிக்க வில்லை. இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், ஜனங்களுடைய எதிர்பார்ப்பு பூர்த்தி ஆகவில்லை என்றாலும் கூட, இயேசு கிறிஸ்துவும் யோவான் ஸ்தானம் தங்கள் ஊழியங்களை நிறைவேற்றினார்கள்.

நம்முடைய எதிர்பார்ப்புகள் பல பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்கிறதா அல்லது பிரச்சனைகளை அதிகப்படுத்துகிறதா என்பதை நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கு உண்மை என்னவென்றால், ஒரு பிரசங்கியார் எப்படி இருக்க வேண்டும் என்று நம்மால் எதிர்பார்க்கப்படுகிறதோ அந்த எதிர்பார்ப்பு அல்லது அளவுகோலின்படி பார்த்தால் பெரும்பாலான பிரசிங்கியார்கள் அதற்கு தகுதி பெற மாட்டார்கள். எனவே தான், அப்போஸ்தலனாகிய பவுல் இன்றைய பிரசங்கியார்களிடமிருந்து வேறுபட்டு நிற்கிறார். அவர் விவாகம் பண்ணாமலும், கட்டுண்ட நிலையிலும் பிரசங்கித்து வந்தார்.

## உங்களுக்குத் தெரியுமா?

யூத ஆண்மக்கள் வருடம் தோறும் மூன்று பண்டிகைகளுக்காக எருசலேம் தேவாலயத்துக்கு வர வேண்டும் (யாத்திராகமம் 23:14-19). அவைகள் புளிப்பில்லா அப்பப்பண்டிகை, அறுப்பின் பண்டிகை மற்றும் சேர்ப்பு கால பண்டிகை போன்றவைகளாகும்.

வேதாகம கதாபாத்திரம்

# பவுல் ஊழியத்தில் அமர்த்தப்படுதல்

## Paul's placement in the ministry

*Brian R.Kenyon*

**ப**வுல் தன்னுடைய வாழ்க்கையில் ஆச்சரியமாகப் பார்த்த காரியங்களில் ஒன்று பாவிகளில் பிரதான பாவியாகிய தனக்கும் மன்னிப்புக் கிடைத்து, இயேசு கிறிஸ்து மூலமாக ஊழியத்தை பெற்றுக் கொண்டது தான் (1தீமோத்தேயு 1:15,16). இந்தக் காரியங்களை உள்ளடக்கிய வசனப் பகுதியில் பவுல் கள்ளப் போதகர்களை எச்சரிப்பதை சிறிது நேரம் விட்டுவிட்டு, தன்னுடைய வாழ்க்கையில் செய்த காரியங்களை நினைத்து உரத்த சத்தமாய் அவருக்கு நன்றி சொல்லத் தொடங்கி விட்டார். என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமைசெய்கிறவனுமாயிருந்தேன். அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்.

நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன் (1 தீமோத்தேயு 1:12-16).

**இயேசு கிறிஸ்து மாற்றங்களை ஏற்படுத்துகிறார்.** பலப்படுத்துகிற, எண்ணி ஏற்படுத்தினப்படியால் போன்ற சொற்றொடர்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைக் குறிக்கின்றன. மேலும், இந்த குறிப்பிட்ட காலகட்டம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் பவுலுக்குக் காட்சி அளித்ததைத்தான் குறிக்கிறது அப்போஸ்தலர் (9:15-16; 22:14:26:16-18). மேலும், இந்தக் குறிப்பிட்ட காலம் என்பது பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இயேசு கிறிஸ்துவைச் சந்தித்த பிறகு அவருக்குள் உண்டான மனமாற்றத்தையும் குறிக்கும். (1தீமோத்தேயு 1:12)ல் பவுல் 3 உண்மைகளை குறிப்பிட்டு அதற்காக அவர் நன்றி உள்ளவராக இருக்கிறார். இவ்வசனத்தில் பலப்படுத்துகிற கிறிஸ்து என்பது ஒருவரை விசுவாசத்தில்

உறுதிப்படுத்துவது என்று பொருள்படும்.

மேலும், பலப்படுத்துகிற என்னும் சொற்றொடர் விசுவாசத்தில் வல்லவனான ஆபிரகாமைப் பற்றியும் (ரோமர் 4:20) கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட வேண்டிய கிறிஸ்தவர்களைப் பற்றியும் விவரிக்கிறது (எபேசியர் 6:10). அப்போஸ்தலனாகிய பவுல் **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு** என்று உறுதியாய் சொல்கிறார் (பிலிப்பியர் 4:13). பலப்படுத்தின கிறிஸ்துவால்தான் பவுல் தன்னுடைய கடைசி சிறைவாசம் வரை அவரை நிலைத்திருக்கச் செய்தது. நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை. எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள். அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார். சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் (2 தீமோத்தேயு 4:16,17). நாம் கர்த்தரிடமிருந்து பெலனைப் பெற்றுக் கொள்கிறோமா?

இரண்டாவது, பவுல் கிறிஸ்து தன்னை உண்மையுள்ளவன் என்று எண்ணியதற்காக நன்றிகளை ஏறெடுக்கிறார். **உண்மையுள்ள** என்னும் வார்த்தை நம்பத் தகுந்த என்னும் பொருளையும் கொடுக்கிறது. இன்னும் சொல்லப்போனால், உண்மையுள்ள என்னும் வார்த்தையானது சாராளுடைய காரியத்திலே தேவனுடைய பண்புகளை விவரிக்கும் வார்த்தையாக இருக்கிறது. விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள் (எபிரேயர் 11:11). மாம்சத்தில் தேவனாய் இருந்தும் கூட தம்மை ஏற்படுத்தின பிதாவுக்கு உண்மையுள்ளவராய் இயேசு கிறிஸ்து இருந்திருக்கிறார் (எபிரேயர் 3:2).

உண்மைத்தன்மை என்பது மனிதப் பண்புகளை விவரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. பவுல் தீமோத்தேயுவை கர்த்தருக்குள் உண்மையுள்ள குமாரனாகிய தீமோத்தேயு என்று விவரித்தார் (1கொரிந்தியர் 4:17). 1 தீமோத்தேயு 1:12ல் பவுல் இயேசு கிறிஸ்து தன்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி அதற்காக தெரிவிக்கிறார், இது ஏற்கனவே பவுலின் வாக்கியத்தை எதிரொலிக்கிறது (1 தீமோத்தேயு 1:11) நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது (1 தீமோத்தேயு 1:11). இயேசு கிறிஸ்து சுவிசேஷத்திற்கு உண்மை உள்ளவராகவும் நம்பத் தகுந்தவராகவும் இருப்பார் என்பதை அறிந்திருந்தார். கர்த்தர் நம்மை பார்த்து இப்படி

சொல்ல முடியுமா? நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா, நம்பத் தகுந்தவர்களாக இருக்கிறோமா?

மூன்றாவது, அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்து தன்னை ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் கிறிஸ்துவுக்கு நன்றிகளை ஏறெடுக்கிறார். இவ் வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற ஏற்படுத்துதல் என்னும் வார்த்தை ஒப்புவித்தல் என்னும் வார்த்தையோடு ஒத்துப் போகிறது. எனவே தான் (2கொரிந்தியர் 5:19)ல் பவுல் இவ்விதமாய் சொல்கிறார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்' (2 கொரிந்தியர் 5:19). தேவன் பவுலை ஊழியத்திற்கு ஏற்படுத்தினதை தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அதன் பிற்பாடு தமஸ்குவில் அவர் மனமாற்றமடைந்ததையும் சற்று நாம் திரும்பிப்பார்த்து அதை உறுதிச் செய்ய முடியும் (அப்போஸ்தலர் 9:1– 18). சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் கர்த்தருடைய ஏதோ ஒரு வெளிப்பாட்டினால் அவருடைய கண்கள் குருடாக்கப்பட்டன. அந்தச் சந்திப்பின்போது பவுல் கர்த்தரைப் பார்த்து இரண்டு மாபெரும் கேள்விகளைக் கேட்டார். ஆண்டவரே நீர் யார்? ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? (அப்போஸ்தலர் 9:5,6). மேலும், கர்த்தர் பவுலிடம் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்'.

இடைப்பட்ட நேரத்தில் கர்த்தர் அனனியாவிடம் ஒரு தரிசனத்தின் மூலமாக தர்சு பட்டணத்தானாகிய சவுலை தேடி அவனுக்குப் போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் (அப்போஸ்தலர் 9:10–12). ஆனால், அனனியாவுக்கு சவுலின் நற்பெயர் குறித்து ஒரு சந்தேகம் இருந்தது. அந்த சந்தேகத்தை போக்கும்படியாக கர்த்தர் அனனியாவிடம் இவ்விதமாய்ச் சொன்னார். அதற்கு கர்த்தர், நீ போ. அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.

அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். (அப்போஸ்தலர் 9:16). தேவனுக்கு பவுலை குறித்து ஒரு பெரிய திட்டமிருந்தது. தேவன் பவுலை ஊழியத்திற்கு ஏற்படுத்தினதென்பது பவுல் மற்ற அப்போஸ்தலர்களைப் போல இயேசுவால் நியமிக்கப்பட்டவர் அல்ல என்னும் கருத்தையும் வலியுறுத்துகிறது. அதே நேரத்தில் பவுல் மற்ற அப்போஸ்தலர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர் அல்ல என்பதையும் இவ் வசனப்பகுதி வலியுறுத்துகிறது (கலாத்தியர் 1:10–2:14). இங்கே பவுல் தான் அப்போஸ்தலன் என்பதைக்காட்டிலும் தேவனுக்கான சேவைப் பகுதியை இங்கே வலியுறுத்துகிறார். நீங்கள் உன்னதமான

தேவனுக்கு ஊழியம் செய்கிறீர்களா?

தேவனுடைய சித்தத்தாலும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலும் எல்லாக் கிறிஸ்தவர்களும் மிகப்பெரிய மாற்றத்தை சந்தித்திருக்கிறார்கள். நிச்சயமாகவே நம்முடைய மனமாற்றமும் ஊழியமும் பவுலின் காரியங்களில் இருந்து எல்லா விதத்திலும் மாறுபட்டிருந்தாலும் கூட, நம் வாழ்க்கை மாற்றப்பட்டதற்காக நாம் தேவனுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததால் தேவன் நம் வாழ்வில் செயல்பட ஆரம்பித்தார். மனமாற்றத்திற்கு முன்பாக பவுலின் நிலையை நாம் எண்ணிப் பார்க்கும் பொழுது அவருடைய புதிய நிலை உண்மையாகவே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**இயேசு கிறிஸ்து இலக்கு நிர்ணயிக்கிறார்:** இயேசுவால் மிக மோசமான பாவிகளைக் கூடத் தொடமுடியும் [1 தீமோத்தேயு 1:13]. பவுல் கிறிஸ்துவுக்கு எதிராகவும், அவருடைய சபைக்கு எதிராகவும் பேசினதினால் மாத்திரம் தேவ தூஷணம் செய்யவில்லை, மற்றவர்களையும் அப்படிச் செய்ய அவர் நிர்பந்தித்து கூடுதலாக அவர் தேவதூஷணம் செய்திருக்கிறார் [அப்போஸ்தலர் 26:11]. பவுல் சபையை தூஷித்ததைக் குறித்து மிக விவரமாக அப்போஸ்தலருடைய நடபடிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது [அப்போஸ்தலர் 8:3:9:1-2;22:4-5,26:9-11; கலாத்தியர் 1:13]. பவுல் கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்பட்டதால் தான் ஆதி திருச்சபையில் அநேகர் அவரை கிறிஸ்துவுக்குள் சகோதரனாக ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினார்கள் [அப்போஸ்தலர்9:13-14,26]. பவுல் கிறிஸ்தவத்தை எதிர்க்க மாத்திரம் செய்யவில்லை. அதற்கு எதிராக, வன்முறையிலும் ஈடுபட்டிருக்கிறார். இருந்தபோதிலும் பவுலின் கடந்த கால வாழ்வை தேவன் அறவே மறந்து அவர் மீது கிருபையை பொழிந்து, பவுலையும் தம்முடைய ஊழியக்காரனாக ஏற்றுக் கொண்டார். அதன் காரணமாகத்தான் பவுல் தான் தேவனிடமிருந்து இரக்கம் பெற்றுக் கொண்டதாகச் சொன்னார். இது ஏதோ நிபந்தனையற்ற தெரிந்து கொள்ளுதல் முறையை போதிப்பதல்ல, மாறாக பவுல் தேவனிடமிருந்து இரக்கத்தைப் பெற்றுக் கொள்வது என்பது தேவனுக்கு உண்மையாய் இருப்பதின் விளைவாகத்தான் அவரிடமிருந்து அதை பெற்றுக் கொள்கிறோம் என்று உறுதிப்படுத்தியிருக்கிறார் [ரோமர் 11:30-31; 1 கொரிந்தியர் 7:25; 2 கொரிந்தியர் 4:1].

மேலும், அறியாமையினாலும் அவிசுவாசத்தினாலும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தபடியால் அவருக்கு இரக்கம் கிடைத்தது [1 தீமோத்தேயு 1:13]. இவ்வசனத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அதாவது, கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் ஒரு பாவி தான் செய்த பாவங்களுக்கு கணக்கு கொடுக்க

வேண்டிய அவசியம் இல்லை என்பது அந்த தவறான உபதேசம் ஆகும். இந்த வாக்கியம் எண்ணாகமம் 15:23–31 வசனங்களுக்கு ஒப்புமையாக சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே மோசே அறியாமையினால் செய்யப்படும் பாவத்திற்கும், துணிகரமாக செய்யப்படும் பாவத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை ஒப்பிட்டு காட்டுகிறார்.

யூத மார்க்கத்திலும் சரி, புதிய உடன்படிக்கையிலும் சரி துணிகரமான பாவங்களிலிருந்து பாவ நிவர்த்தி அடைய எதையும் செய்ய முடியாது [எண்ணாகமம் 15:23–31; எபிரேயர் 10:26]. பவுல் தன் மனமாற்றத்திற்கு முன்னான வாழ்வில் தேவனுடைய கோபாக்கினையை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்க தான் தேவனுடைய இரக்கத்தை பெற்றுக் கொண்டதாக விளக்குகிறார். மேலும், பவுல் தான் கிறிஸ்துவுக்கு விரோதமாக பாவம் செய்த போதும்கூட அதை நல் மனசாட்சியுடன் செய்ததாகச் சொல்கிறார் [அப்போஸ்தலர்23:1:2 தீமோத்தேயு 1:3]. பவுல் தான் இழந்துபோயிருந்தாலும் கூட, தான் தேவனுக்கு சேவை செய்ததாகச் சொல்கிறார். பவுலின் முக்கிய பிரச்சனையே இயேசு கிறிஸ்துவை அவன் தேவனுடைய குமாரன் என்று விசுவாசியாமல் இருந்தது தான். ஆனால், பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் கிறிஸ்துவை பற்றிய பார்வையை மாற்றிக்கொண்டார். இந்த மன மாற்றம் இறுதியில் அவரை சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வைத்தது. பவுல் துணிகரமான பாவங்களை செய்திருந்தால் அவர் மனந் திரும்புதலுக்குள் வந்திருக்க மாட்டார். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் ஒருவரால் தேவனுக்கேற்ற துக்கத்தைக் கொள்ள முடியாது [2 கொரிந்தியர் 7:8–11].

**முடிவுரை**

இயேசு கிறிஸ்து பவுலை ரட்சித்ததற்கான காரணங்களில் ஒன்று பவுல் மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கும் படியாகத்தான் [1தீமோத்தேயு 1:16]. தேவன் தம்முடைய ஜனங்கள் மீது நீடிய சாந்தம் உடையவராய் இருக்கிறபடியால் தான் ஜனங்களுடைய பாவங்களை அவர் பொறுத்துக் கொள்கிறார் [யாத்திராகமம்34:6; எண்ணாகமம் 14:8]. தேவனுடைய இப்பண்பு மோசமான பாவிகளை இரட்சிப்பதற்காக தம்முடைய ஒரே பேரான குமாரனை அனுப்பியதில் வெளிப்படுகிறது. தேவனால் பவுல் போன்ற மிக மோசமான பாவியைக் கூட ரட்சித்து ஊழியத்தில் உபயோகப்படுத்த முடியும் என்றால், பவுலைப்போல எந்த ஒரு பாவியும் தன்னுடைய ஜீவியத்தை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கும் போது அவர்களையும் அவர் இரட்சித்து ஊழியத்தில் பயன்படுத்துவார் என்பது இங்கே நமக்கு விளங்குகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் நம்முடைய வாழ்வை மாற்ற நாம் அனுமதித்திருக்கிறோமா?




# யாத்திராகமம் புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை

*Rebecca Rushmore*

1. எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர்களால் கட்டப்பட்ட இரண்டு பண்டசாலை பட்டணங்களைக் குறிப்பிடுக.
2. மோசே தான் கொன்ற எகிப்தியனை எங்கே புதைத்தார்?
3. ஏழாவது வாதையின் பெயர் என்ன?
4. இஸ்ரவேலர்கள் பஸ்காவை எவ்விதமாய் புசிக்க வேண்டியதாக இருந்தது?
5. யாரெல்லாம் கர்த்தரிடத்திற்கு பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும்?
6. ஒவ்வொரு இஸ்ரவேலரும் எவ்வளவு மன்னாவை எடுத்துச்சேர்க்க வேண்டும்?
7. அமலேக்குடனான யுத்தத்தில் இஸ்ரவேலர்கள் எப்போது ஜெயித்தார்கள்?
8. இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு புறப்பட்டு எத்தனை மாதம் கழித்து சீனாய் பர்வதத்திற்கு வந்தடைந்தார்கள்?
9. மோசேயின் பிரமாணத்தின்படி பெற்றோரை பிள்ளைகள் அடித்தால் அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்பட்டது?
10. இஸ்ரவேலர்கள் வருடத்திற்கு மூன்று முறை ஆசரிக்கும்படி தேவனால் கட்டளையிடப்பட்ட மூன்று பண்டிகைகளை எழுதுக?

# எல்லா ஆவிகளையும் நம்ப வேண்டாம்

## Do not believe every spirit

*Sunny David*

1 ராஜாக்கள் 13 ஆம் அதிகாரத்தில் ராஜாவின் அழைப்பை நேர்மையாகவும், உறுதியாகவும் மறுத்த ஒரு இளம் தீர்க்கதரிசியைப் பற்றி நாம் வாசிக்கிறோம். ராஜா ஒரு மிகப்பெரிய வெகுமானத்தை அந்த தீர்க்கதரிசிக்கு கொடுக்கத் தயாராக இருந்த நிலையில் இந்த இளம் தீர்க்கதரிசி அதை உறுதியாக மறுத்து விட்டார். அந்த இளம் தீர்க்கதரிசி ராஜாவிடம் இவ்விதமாய்ச் சொன்னார் 'தேவனுடைய மனுஷன் ராஜாவை நோக்கி: **நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை. இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை.**

ஏனென்றால், நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வர்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொன்னான், (1 இராஜாக்கள் 13:8,9). தேவன் இந்த மனிதனிடம் எதை செய்யச் சொன்னாரோ அதற்கு மரியாதை கொடுக்கும் ஒரு மனப்பான்மையை இந்த மனிதனிடம் நாம் காண்கிறோம். இருந்தபோதிலும், பின்வரும் வசனப் பகுதிகளில் இவன் தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக ஒரு கிழ தீர்க்கதரிசியின் பேச்சை கேட்டு அந்த தீர்க்கதரிசியின் வீட்டிற்கு போய் அவரோடு அப்பம் புசிக்கவும், தண்ணீர் குடிக்கவும் செய்திருக்கிறார்.

அந்த கிழத் தீர்க்கதரிசி பின்வரும் வார்த்தைகளால் இந்த இளம் தீர்க்கதரிசியை வஞ்சித்திருக்கிறார். அதற்கு அவன்: உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான், அவன் அப்பம், புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் **பொய்** சொன்னான் (1 இராஜாக்கள் 13:18).

19 அப்பொழுது அவன் இவனோடே திரும்பிப் போய், இவன் வீட்டிலே அப்பம், புசித்துத் தண்ணீர் குடித்தான். 1 இராஜாக்கள் 13:19. அடுத்ததாக நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம்20 அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருக்கிறபோது, அவனைத் திருப்பிக்கொண்டு வந்த தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டானதினால், அவன் யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும், தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்துக்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர்

சொல்லுகிறார் என்றான். (1 இராஜாக்கள் 13:20-22). இந்த தீர்க்கதரிசி வீட்டிற்கு திரும்பி போய்க் கொண்டிருக்கும் போது, வழியில் ஒரு சிங்கம் அவனைக் கண்டு கொன்று போட்டது. அவன் கீழ்படியாமல் போனதற்காக தேவன் அந்த தீர்க்கதரிசியை தண்டித்தார். அதாவது, ஆரம்பத்திலிருந்து தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனவர்களை ஆதாம் ஏவாளிலிருந்தே அவர் இவ்விதமாக தண்டித்திருக்கிறார்.

இந்த இளம் தீர்க்கதரிசி தனக்கு தகுந்த சன்மானம் கொடுக்கத் தயாராக இருந்த ராஜாவின் அழைப்பை உறுதியாக மறுத்த போதிலும் தன்னை ஒரு தீர்க்கதரிசி அல்லது ஒரு தேவனுடைய மனுஷன் என்று பாசாங்கு காட்டின ஒருவனிடம் ஏமாற்றம் அடைகிறான். இது அன்றும் உண்மையாய் இருந்தது. இன்றும் உண்மையாய் இருக்கிறது. நேர்மையும், உண்மையுமுள்ள ஜனங்கள் உண்மையான ஊழியர்கள் போல் தோற்றமளிக்கும் சிலருடைய வஞ்சக வலையில் விழுவதற்கான வாய்ப்பு அல்லது அபாயம் அதிகமாகவே உள்ளது. எனவேதான், அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாய் எச்சரித்தார் 'அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டு மென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்

அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்' (ரோமர் 16:17,18).

எனவே, வேதாகமத்தில் சொல்லப்படாத காரியங்களை எங்கும் போதித்து கொண்டு, ஜனங்களை தவறான பாதையில் வழிநடத்த முயற்சிக்கும் இன்றைய கள்ள தீர்க்கதரிசிகள் மற்றும் கள்ள போதர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய யோவான் இவ்விதமாய்ச் சொன்னார் பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'(1 யோவான் 4:1). மேலும், ஆறாம் வசனத்தில் அப்போஸ்தலன் அந்த ஆவிகளை எதைக் கொண்டு சோதித்து அறிய வேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். நாங்கள் தேவனால் உண்டானவர்கள். தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான். தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை. இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்' (1 யோவான் 4:6). இங்கே நாங்கள் என்னும் பதத்தை அப்போஸ்தலன் தனக்காகவும் மற்ற அப்போஸ்தலர்களுக்காகவும் பயன்படுத்துகிறார். இவர்களுக்குத்தான் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் கொடுக்கப்படும் என்று இயேசு ஏற்கனவே வாக்குதத்தம் செய்திருந்தார்

(அப்போஸ்தலர் 1:4– 8); லூக்கா24:46–49). இயேசு கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்டார் (யோவான் 14:25,26; 16:12,13). பூலோகத்திலே கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்கும் அப்போஸ்தலர்க ளுக்குத் தான் அதிகாரம் அளிக்கப்பட்டது. அதாவது, கிறிஸ்துவின் அதிகாரத்தால் போதிப்பதற்கும், போதிக்காமல் இருப்பதற்கும் அவர்களுக்குத் தான் அதிகாரம் இருந்தது (மத்தேயு 18:18). தேவன் நாம் எவைகளை அறிய வேண்டும், விசுவாசிக்க வேண்டும் அப்பியாசப்படுத்த வேண்டும் என்று விரும்பினாரோ அவைகளை அப்போஸ்தலர்கள் இந்த பூமியில் வாழ்ந்த போது நமக்காக புதிய ஏற்பாட்டில் எழுதினார்கள் ( 2 பேதுரு 1:20).

அப்போஸ்தலர்கள் ஒருபோதும் போதிக்காத காரியங்களைப் போதிக்கும் போதகர்களுக்கு இன்றைய நாட்களில் பஞ்சமில்லை என்றாலும் கூட, உண்மையும், நேர்மையுமான மக்களும் கூட அவைகளை தேவனுடைய வார்த்தைகள் என்று நம்புவது வேதனையாக உள்ளது. அந்த இளம் தீர்க்கதரிசி, கிழக்தீர்க்கதரிசி தன்னிடம் செய்யும்படியாகச் சொன்ன காரியத்தை குறித்து தேவனோடு ஆலோசனைபண்ணியிருந்தால் அந்த இளம் தீர்க்கதரிசி அழிந்து போயிருக்க மாட்டான். அந்தக் கிழத்தீர்க்கதரிசி உண்மையைத்தான் பேசுகிறார் என்று இவன் வெறுமனே நம்பி விட்டான். இன்றைய நாட்களிலும் கூட பெரும்பாலான மக்கள் இதே தவறைத்தான் செய்கிறார்கள். பெரோயா பட்டணத்தில் வாழ்ந்த ஜனங்களைக் குறித்து இவ்விதமாக வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.** (அப்போஸ்தலர் 17:11). அந்த பட்டணத்து ஜனங்கள் தங்களுக்கு போதிக்கப்பட்டவைகளை அப்படியே நம்பவில்லை, மாறாக, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தார்கள்.

உதாரணமாக, கிறிஸ்து எப்போது இப்பூமிக்கு மறுபடியும் வருவார், எந்த நாளிலே வருவார் என்பதைப் பற்றி எந்த மனிதனும் அறியான் என்று வேதாகமம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது (யோவான் 14:1–3; அப்போஸ்தலர் 1:11). தம்முடைய இரண்டாம் வருகை பற்றி இயேசு கிறிஸ்து செல்லும்போது இவ்விதமாய்ச் சொல்கிறார். **அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்** என்று (மாற்கு 13:32). ஆனால், கடந்த பல வருடங்களாக நாம் பார்க்கும் போது, கள்ளத்தீர்க்கதரிசிகள் இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு மறுபடியும் வரும் வருடத்தையும், நாளையும் தாங்கள் அறிந்திருப்பதாகச்

சொல்லி எண்ணற்ற மக்களை வஞ்சித்திருக்கிறார்கள். சொல்வதை யெல்லாம் நம்பும் மக்கள் நம்பி ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட கிறிஸ்து **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** என்று போதித்தார் (மாற்கு 16:16) அப்போஸ்தலனாகிய பேதுருவும் கூட,கூடியிருந்த ஜனங்களைப்பார்த்து இவ்விதமாய்ச் சொன்னார்: பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று (அப்போஸ்தலர் 2:38). இருந்த போதிலும், இந்த நாட்களில் அநேக பிரசிங்கியார்கள் ஜனங்களிடம் இரட்சிக்கப்படும்படி இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் போதுமானது அல்லது பாவிகளின் ஜெபத்தை சொன்னால் போதுமானது என்று தவறாக போதிக்கிறார்கள். அப்போஸ்தலர் 2:47 ல் கிறிஸ்து என்று சபையை கட்டினாரோ மத்தேயு 16:18, எந்த சபைக்கு தலையாயிருக்கிறாரோ கொலோசெயர் 1:18; எந்த சபையை தன்னுடைய சுய ரத்தத்தினால் வாங்கினாரோ (அப்போஸ்தலர் 20:28) அந்த சபையில் தான் அவர் இரட்சிக்கப்பட்டவர்களை சேர்த்தார் என்று சொல்லி நாம் வாசிக்கிறோம். இருந்தபோதிலும், இந்த நாட்களில் அநேக பிரசங்கியார்கள் ஜனங்களிடம் அவர்கள் விரும்பிய சபையில் சேர்ந்து கொள்ளலாம் என்றும், எல்லா சபைகளும் ஒன்று தான் என்றும் சொல்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்முடைய சபையை எருசலேம் பட்டணத்திலே கி.பி 33 ல் கட்டின பிறகு சில நூற்றாண்டுகளிலேயே அநேக கள்ள தீர்க்கதரிசிகள் வெவ்வேறுப்பட்ட பெயர்களிலே ஆயிரக்கணக்கான சபைகளை ஸ்தாபித்து விட்டார்கள்.

நம்மைச் சுற்றிலும் வேதாகமத்தின் பெயரால் ஆண்களாலும், ஆண்கள் மத்தியில் போதிக்கவும் பிரசங்கிக்கவும் தடை செய்யப்பட்டிருக்கிற பெண்களாலும் போதிக்கப்பட்டு வருகின்ற மத சம்மந்தமான உபதேசங்களை நாம் பார்க்கும் போது (1 தீமோத்தேயு 2:11.12) வேதாகமத்தில் தேவன் சொல்லியிருக்கிற காரியங்களுக்கு விரோதமாக போதிக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகள் அநேகர் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய முரண்பாடான கள்ள உபதேசங்களும், போதனைகளும் திரளான ஜனங்களை அவைகளை விசுவாசிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் செய்திருக்கிறது. அவர்கள் மத உலகம் மிக மோசமான ரீதியில் பிளவு படுவதற்கு காரணமாக இருக்கிறார்கள். இது ஒற்றுமைக்காக இயேசு கிறிஸ்து செய்த ஜெபத்திற்கு எதிரானதாகும் (யோவான் 17:21-25).'பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்' (1 யோவான் 4:1)

✞

சபை

## கிறிஸ்து எனக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்

## Christ gave Himself for me!

*Mark .N.posey*

**கி**றிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் [கலாத்தியர் 2:20].

பழங்கால பாரசீகர்கள் ஒருவரை சிலுவையில் அறைந்து கொல்லும் முறையை சுமார் கி.மு. 300–400 காலகட்டத்தில் கண்டுபிடித்தார்கள். இது அணுஅணுவாக சித்திரவதை செய்து ஒருவரை மெதுவாக கொல்லும் முறையாகும். அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டில் சிலுவையில் அறையப்படுதல் பற்றி பல முறை பேசியிருக்கிறார் [1 கொரிந்தியர் 1:18,21,23]. சிலுவை கால வரலாற்றில் ஒரு மைய நிகழ்வாக இருக்கிறது.

**கிறிஸ்து எனக்காக தம்முடைய முதுகை வாரினால் அடிக்கப்பட கொடுத்தார்** [யோவான் 19:1]. வாரினால் அடிக்கும் இந்த மிருகத்தனமான தண்டனைக்கு மூன்று நோக்கங்கள் இருந்தன. முதலாவது நோக்கம் குற்றவாளிக்கு அதிக வேதனையை உண்டாக்க வேண்டுமென்பது. இரண்டாவது, குற்றவாளிடம் இருந்து அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக கடைசியாக, ஒரு குற்றவாளி சிலுவையில் அறையப்படும் போது அந்த நபர் சிலுவையில் சீக்கிரம் சாகுபடி அந்த நபரை பலவீனப்படுத்துவதற்காக இந்த வகையான தண்டனை கொடுக்கப்பட்டது.

**கிறிஸ்து எனக்காக தம்முடைய தலையை முள்கிரீடம் சூட்டப்படும்படி கொடுத்தார்** [யோவான் 19:2]. ஒருவருடைய தலையில் முள் கிரீடத்தை வைத்து அமுக்குவது என்பது அந்த நபருக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கும். ஆனால், இங்கே முள் கிரீடம் வைப்பதன் பிரதான நோக்கம், அந்தக் குற்றவாளியை பரிகாசம் செய்வதற்காகத்தான். ரோம போர் சேவகர்கள் ஆரம்பத்தில் முள்கிரீடத்தை ஒரு ராஜரீக அடையாளமாக பயன்படுத்தி வந்தாலும்கூட பிற்பாடு அதை குற்றவாளிகளை சிறுமைப்படுத்துவதற்காகவும். குற்றவாளிகளுக்கு அதிக வேதனையை உண்டாக்குவதற்காகவும் பயன்படுத்த தொடங்கி விட்டார்கள்.

**கிறிஸ்து எனக்காக** தம்முடைய முகத்தை அறையப்படும்படியாக கொடுத்தார் [யோவான் 19:3]. ஏசாயா தீர்க்கதரிசி கிறிஸ்துவுக்கு

இவ்விதமாக நடக்கும் என்று முன்னறிவித்திருந்தார் அடிக்கிறவர்களு க்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன், அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை [ஏசாயா 50:6]. இயேசு கிறிஸ்து ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு என்று பிரசங்கித்தார். அவர் எதை பிரசங்கித்தாரோ அதையேப் பின்பற்றவும் செய்தார் [யோவான் 18:19-34].

**கிறிஸ்து எனக்காக தம்முடைய தோள்களை சிலுவையை சுமக்கும் படி கொடுத்தார்** [யோவான் 19:17]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தண்டனையின் ஒரு பகுதியாக அந்தப் பாரமான சிலுவையை நமக்காக நெடுந்தூரம் சுமந்து சென்றார். 300-400 பவுண்டுகள் வரை எடை உள்ள சிலுவை எந்த ஒரு நபருக்கும் தூக்கிச் செல்வதற்கு மிகக் கடினமானதாகத்தான் இருந்திருக்கும். நம் ஆண்டவர் பலவிதமான தண்டனைகளின் காரணமாக பலவீனமாக இருந்த போதிலும் கூட அந்த பாரமான சிலுவையை நமக்காக சுமந்தார். ஒவ்வொரு அடியையும் நமக்காக அவர் முன்னெடுத்து வைத்தார்.



**கிறிஸ்து எனக்காக தம்முடைய கைகளையும் கால்களையும் ஆணிகள் கடாவப்படும்படி கொடுத்தார்** [சங்கீதம்22:16]. 1968 ல் முதல் முறையாக விஞ்ஞானிகள் இயேசுவின் நாட்களில் வாழ்ந்த சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதனுடைய பாகங்களை அல்லது எச்சங்களை கண்டுபிடித்தார்கள். அந்த நபர் உட்கார வைக்கப்பட்ட நிலையில் தான் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார். அந்த நபருடைய இரண்டு கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டு இருந்தன. அந்த நபருடைய கரங்கள் வெளியே நீட்டப்பட்ட நிலையில் இருந்தன, இரண்டு கைகளிலும் ஆணிகள் கடாவப்பட்டிருந்தன. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு வெள்ளிக்கிழமை அன்று 6 மணி நேரம் அதாவது, காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார்.

**கிறிஸ்து எனக்காக தம்முடைய சரீரத்தை சிலுவையில் அறையப்படும்படி கொடுத்தார்** [1 பேதுரு 2:24]. இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிய போது, அவருடைய சரீரத்தின் எடை உதரவிதானத்திற்கு, அதாவது, வயிறு பாகத்திற்கிடையே உள்ள தடித்த தசை சுவருக்கு கீழே இழுக்கப்பட்டது. அதன் காரணமாக காற்று அவருடைய நுரையீரலுக்குள் புகுந்து அங்கேயே இருந்தது. எனவே,

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசு மூச்சை உள்ளே இழுக்க ஆணிகள் கடாவப்பட்ட தம்முடைய கால்களை சற்று மேலே தள்ள வேண்டியதாய் இருந்தது. ஒரே கால் அது இன்னும் அதிக வேதனையை அவருக்கு ஏற்படுத்தியது. இயேசு மூச்சை இழுக்கும்போது அவர் பேச வேண்டும் என்று சொன்னால் காற்று குரல் நாளங்கள் வழியாக கடந்து போக வேண்டியதாயிருந்தது. சுவிசேஷப் புத்தகங்கள் இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து ஏழு முறை பேசியதாக பதிவு செய்திருக்கின்றன. நம் ஆண்டவர் அத்தனை வேதனைகளுக்கு மத்தியிலும் கூட இவர்களை மன்னியும் என்று சொல்வதற்காக பேசியிருக்கிறார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது [லூக்கா 23:34]. நம் அன்புள்ள ஆண்டவர் இறுதிவரை அன்பு கூர்ந்திருக்கிறார்.

**கிறிஸ்து எனக்காக தம்முடைய விலாவை குத்தப்படும்படியாகக் கொடுத்தார்** [யோவான் 19:34]. ஒரு போர்ச் சேவகன் இயேசு மரித்து விட்டார் என்பதை நிச்சயப்படுத்துவதற்காக ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான், உடனே ரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது [யோவான் 19:34]. இது ஒரு நீதிமான் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலாகும்.

# நற்கீர்த்தி


*திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது: பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம் (நீதி 22:1). இந்த வசனத்திற்கான சவாலை கவனியுங்கள். சில வேளைகளில் சுலாச்சாரம் மனிதர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற தங்கள் நற்பண்பையும் உத்தமத்தையும் தியாகம் செய்யத் தூண்டும். இந்த வசனத்திற்கான ஆசீர்வாதத்தை கவனியுங்கள். நற்கீர்த்தியில் நம்மால் நிச்சயமாய் தயவை காண முடியும். சிலர் சத்தியத்தையும், அதைப் பேசுகிறவர்களையும் வெறுக்கலாம். ஆனால், தேவனுடைய பார்வையிலும், தேவனுடைய சித்தத்தை செய்பவர்களிடத்திலும் இந்த தயவை நாம் காண முடியும். இவ் வசனத்திற்கான விளக்கத்தை கவனியுங்கள். எது நற்கீர்த்தியை ஏற்படுத்துகிறது? பொருளாதார ரீதியான வளர்ச்சி அல்ல, செல்வம் அல்ல. மனிதர்கள் மத்தியில் நற்கீர்த்தி அல்ல. மாறாக, மனிதர்களை உண்டாக்கிய தேவனிடத்தில் நற்கீர்த்தி. தேவனோடு சரியான உறவை வைத்துக்கொள்ள பாடுபடுபவருக்குத்தான் நற்கீர்த்தி கிடைக்கிறது. அதன் காரணமாக நற்கீர்த்தி பெற்றவருடைய பெயர் ஜீவ புத்தகத்தில் காணப்படுகிறது (பிலிப்பியர் 4:3)*

சபை

# மனிதனால் உண்டாக்கப்பட்ட மதம்

## A man made Religion

*T. pierce Brown*



**நே**பாத்தின் குமாரனாகிய யெரோபெயாம் ஒரு மாபெரும் ராஜாவாக இருந்திருக்கலாம். ஆனால், அவன் தேவனுடைய வழியைப் புரட்டி பாவ செயல்பாடுகளுக்கு மற்றவர்களுக்கு முன்னோடியாக மாறிவிட்டான். அவன் ஆரம்பித்த மத சம்மந்தமான சடங்காச்சாரங்கள் தான் மனிதனால் உண்டாக்கப்பட்ட மதங்களுக்கும் மாதிரியாக மாறிவிட்டது. இதிலிருந்து நாம் பாடங்களை கற்றுக் கொண்டால், ஒவ்வொரு தலைமுறையிலும் தலைதூக்கும் மனிதனால் உண்டாக்கப்படும் மதங்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியும்.

முதலாவதாக, மனிதனால் உண்டாக்கப்பட்ட மதம் மனித இருதயங்களில் ஆரம்பமானது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று தன் மனதிலே சிந்தித்து கொண்டிருந்தான் (1 ராஜாக்கள் 12:26). இவ்வுலகில் இரண்டு வகையான மதங்கள் தான் உள்ளன. ஒன்று அதன் ஆரம்பத்தை தேவனுடைய சித்தத்தில் கொண்டது. மற்றொன்று, அதன் ஆரம்பத்தை மனிதனுடைய சித்தத்தில் கொண்டது. ஏசாயா 55:8 இவ்விதமாய் சொல்கிறது. **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று** இது எப்போதுமே இப்படியாகவே இருந்து வருகிறது. எரேமியா 17:9 இவ்விதமாய் சொல்கிறது' எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? மனிதனுடைய இருதயத்திலிருந்து ஒரு போதும் தேவன் எதிர்பார்க்கின்ற மார்க்க முறையோ, மனித ஆத்மாவின் தேவைகளை பூர்த்தி செய்கிற ஒன்றுமே வராது. தேவன் விரும்பும் ஒன்றுக்கு எதிராக மாத்திரமல்ல, அதற்கு மாற்றாக ஒன்றை செய்வது கூட துணிகரமான ஒன்றாகிவிடும் என்பதை எப்போதுமே நாம் அறிந்திருக்க வேண்டும். நீதிமொழிகள் 3:5 ல் கொடுக்கப்பட்டுள்ள புத்திமதி இன்றும் மதிப்பு மிக்கதாக இருக்கிறது. உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு

இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருக்க வேண்டும் [நீதிமொழிகள் 3:5].

இப்போது நாம் எதிர்கொள்ளும் வினோதமான கேள்வி என்னவென்றால், ஒருவர் தன்னுடைய ஆராதனை தேவனை பிரியப்படுத்தும் என்று நிச்சயமில்லாத பட்சத்தில் அவர் எதற்காக தேவனை ஆராதிக்க வேண்டும்? ஜீவனுள்ள தேவனை ஆராதிக்காத புறஜாதி மக்கள் கூட தங்கள் பொய்யான தேவர்களை பிரியப்படுத்த முயற்சிப்பார்கள். இருந்தபோதிலும், யூதர்களும் கிறிஸ்தவர்களும் இயேசு கிறிஸ்து குறிப்பிட்ட அந்தப்பிரிவின் கீழ்தான் வருகிறார்கள். இயேசு, மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார் [மத்தேயு 15:9].

இரண்டாவது, இங்கே யெரோபெயாம் தோற்றுவித்த இந்தப் பொய்யான மதத்துக்கும், இன்றைய நாட்களில் காணப்படும் பொய்யான மதங்களுக்கும் இடையே ஏதோ ஒன்று பொதுவாக உள்ளது. இந்த யெரோபெயாம் தன்னுடைய சுயநலத்திற்காக பெத்தேலிலும், தாணிலும் இரண்டு பொற்கன்று குட்டிகளை உண்டாக்கி இரண்டு இடங்களிலும் ஸ்தாபித்தான். நம்மில் எத்தனை பேர் நம்முடைய சுயநலத்திற்காக தேவனுடைய காரியங்களுக்கு இரண்டாம் இடத்தைக் கொடுக்கிறோம்? நாம் நம்முடைய பெரும்பாலான பணத்தை செலவு செய்யும் சபை கட்டிடங்களுக்காக, உடற்பயிற்சி கூடங்களுக்காக இயேசு கிறிஸ்து மரிக்கவில்லை. இருந்தபோதிலும், ஆத்துமா இரட்சிப்புக்காக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும் போது பெரும்பாலான பிராந்திய சபைகள் மிகச் சிறிய அளவிலேயே அதை நிறைவேற்ற நிதி கொடுக்கிறார்கள்.

இந்த யெரோபெயாம் **மற்றவர்களுடைய நலனுக்காக** இந்த மனிதனால் உண்டாக்கப்பட்ட மதத்தை தான் முன்மொழிவதாக காட்டிக் கொண்டான். **நீங்கள் எருசலேக்கு போகிறது உங்களுக்கு வருத்தம்** என்று [1 ராஜாக்கள் 12:28]. இந்த ராஜா ஆரம்பத்திலிருந்தே செய்த காரியங்கள் எல்லாம் மாய்மாலமானதும், சுய நலமானதுமாகவே இருந்து வந்தது. இன்றைய நாட்களிலும் பல மார்க்கப்பிரிவினை கூட்டப் பிரசிங்கியார்கள் மாய்மாலம் மற்றும் நேர்மையற்றத்தன்மையுடன் பிரசங்கித்து வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக, ஒருவர் பாவ மன்னிப்புக்கென்று மனந்திரும்புங்கள் என்று பிரசிங்கத்தால் அவர் எதையோ விட்டு விட்டு தவறாக வசனத்தை மேற்கோள் காட்டுகிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இன்று பல காரியங்கள் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாக, பொருத்தமாய் இருக்கும் என்பதற்காகவே செய்யப்பட்டு வருகின்றன. தேவ காரியங்களில் ஒன்று பொருத்தமாக இருக்க வேண்டுமென்றால், அது தேவனுடைய அங்கீகரிப்பின் ஒரு பகுதியாயிருக்க வேண்டும். ஒரு

மரப் பலகையில் ஆணி அடி என்று தேவன் சொல்லும் போது, ஆணி அடிப்பதற்கு கோடாரிக்குப்பதிலாக சுத்தியலை பயன்படுத்துவது பொருத்தமாயிருக்கும். ஆனால், அந்த மரப்பலகையை ரம்பத்தை வைத்து அறுத்துப்போடுவது பொருத்தமற்ற ஒன்றாக இருக்கும். அதேபோல் தேவன் **பாடுங்கள்** என்று சொன்னால், ஒன்று அல்லது இரண்டு பாடல்களை பாடுவது பொருத்தமாயிருக்கும், ஆனால் **இசைக்கருவிகளை** பயன்படுத்துவது பொருத்தமற்ற ஒன்றாக இருக்கும்.

மேற்ச்சொல்லப்பட்ட செயல்பாடுகள் எப்படிப் பார்த்தாலும் தேவனுடைய வார்த்தைக்கு எதிரானவைகளாகவே இருக்கின்றன. யெரோபெயாம் ஜனங்களைப் பார்த்து 'இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப் பண்ணின உங்கள் தேவர்கள் 'என்று சொன்னான் [1ராஜாக்கள் 12:28]. அங்கே தேவனுடைய கட்டளை தெளிவாகவே இருந்தது. அதாவது, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் [யாத்திராகமம் 20:3] யெரோபெயாம் தன் செயல்பாடுகளை நியாயப்படுத்த பல காரணங்களை சொல்லியிருக்கலாம்.

சாக்குப் போக்கு எதுவாக இருந்தாலும் சரி, தேவனுடைய கட்டளை இவ்விதமாய் தெளிவாகச் சொல்கிறது. **மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்** [யாத்திராகமம் 20:4]. சரீரப் பிரகாரமான மனது தரிசித்து நடக்க விரும்பி அது எதைச் செய்ய விரும்புகிறதோ அதைச் செய்ய சாக்குப் போக்குகளைத்தேடுகிறது. நாகமான் நான் நினைத்திருந்தேன் என்று சொன்னான். தர்சு பட்டணத்து சவுலும் கூட நினைத்திருந்தேன் என்று சொன்னார் [அப்போஸ்தலர் 26:9], நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 14:6 ல் இவ்விதமாய்ச் சொல்கிறார். அதற்கு இயேசு: **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்**[யோவான் 14:6]. இவ்வுலகில் கிட்டதட்ட எல்லா பிரிவினைச் சபைகளும் இயேசுவைத்தான் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்கின்றன. வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் எல்லோரும் இயேசு மூலமாகத்தான் தேவனிடத்தில் வருகிறதாக சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், **இயேசுவை அவமதித்துவிட்டு** ஒருவரும் தேவனிடத்தில் வரவே முடியாது. தேவனுடைய காரியங்களைப் பொறுத்தவரை, நான் அப்படி நினைக்கிறேன், அப்படி எனக்குத் தோன்றுகிறது போன்றவைகளுக்கு இடமே இல்லை. தேவன் பாடுங்கள் என்று நம்மிடம் சொல்லும் போது,

குரலை தாழ்த்தி பாடுங்கள் அல்லது குரலை உயர்த்தி பாடுங்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை. எனவே, பாட வேண்டும் அவ்வளவுதான். அதேபோல் தேவன் ஞானஸ்நானத்தை கட்டளையிட்டிருக்கிறார், நாம் ஞானஸ்நானத்தை ஒரு சிற்றோடையில் வைத்தும் கொடுக்க முடியும் அல்லது ஞானஸ்நானத் தொட்டியில் வைத்தும் கொடுக்க முடியும். ஏனென்றால், தேவன் இங்கேதான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பாக சொல்லவில்லை. தேவன் கட்டளையிட்ட ஒன்றுக்கு மாற்றாக மற்றொன்றை செய்வதற்கு நமக்கு உரிமை இல்லை.

எப்போதும் போலவே பொய்யான மதம் மற்றவர்களுக்கு ஒரு கண்ணியாக மாறியது (1 ராஜாக்கள் 12:30). தேவனால் அங்கீகரிக்கப்பட்ட காரியங்களுக்காக நிற்பதைப் பார்க்கிலும், கூட்டத்தோடு ஒத்துப் போவது என்பது எளிதானது தான். தூய உபதேசம் அல்லது தூய ஜீவியத்திற்கு எவ்வித மதிப்பும் கொடுக்காமலிருப்பது வீழ்ச்சியின் ஆரம்பமாகும். அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான்.' (1 இராஜாக்கள் 12:31). நாம் எவ்வகையான தேவனை ஆராதிக்கிறோமோ அதுதான் நாம் எவ்வகையான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது என்பதை உணர்ந்து கொள்வது முக்கியமானது.

யெரோபெயாம் இந்தத் தவறான மதத்தை தோற்றுவித்த காரியத்தில் குறைந்தபட்சம் நான்கு தவறுகளை செய்திருக்கிறான். முதலாவது அவன் நீதிக்கு முன்பாக அரசியலை நிறுத்தினான். இன்றும் கூட லட்சக்கணக்கானோர் ஒரு குறிப்பிட்ட அரசியல் வேட்பாளர் எவ்வளவு மோசமானவராக இருந்தாலும் சரி எந்த கட்சி பிடித்திருக்கிறதோ அக்கட்சிக்கு ஓட்டுப் போடுகிறார்கள். இரண்டாவது, அவன் கடமையை காட்டிலும் சௌகரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தான். இன்றைய நாட்களில் கர்த்தருடைய சபையை சார்ந்தவர்களிலும் கூட அநேகர் இவ்விதமாய்ச் செய்கிறார்கள். மூன்றாவது, அவன் கீழ்படிவதை காட்டிலும் எது பொருத்தமானதோ அதைத் தான் செய்ததாக நினைத்தான். இன்றைய நாட்களிலும் பலர் வெற்றியை தேவன் தங்களோடு இருப்பதற்கான அளவுகோலாக வைத்திருக்கிறார்கள். மார்க்க பிரிவினைக் கூட்டத்தார் பெரும்பாலும் தங்கள் வளர்ச்சியையும், வெற்றியையும் தேவன் தங்களோடு இருப்பதை நிரூபிப்பதற்காகக் காட்டுகிறார்கள். நான்காவது, அவன், நாம் எதை விதைக்கிறோமோ அதை அறுப்போம் என்பதை உணரத் தவறினான். ஆதாமின் காலத்திலிருந்தே மனிதர்கள் முடிவு சரியாக இருந்தால் போதும் அதைச் செய்யும் முறை தவறாக இருந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி தங்களைத் தாமே வஞ்சித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, ஒருவர் நான் நல்ல நோக்கத்திற்காகத்தான் இந்தப்போரை எதிர்க்கிறேன். எனவே, வன்முறை தவறு என்பதை காட்டுவதற்காக அருகிலுள்ள வங்கியை

எரிப்பதற்கும், நாட்டின் பிரதமரை சுடுவதற்கும் எனக்கு உரிமை உண்டு என்று சொல்வதைப் போல் உள்ளது. அதேபோல் மற்றொருவர் கருக்கலைப்பு ஒரு கொலையாக இருப்பதால் அதற்கு என் எதிர்ப்பை தெரிவிப்பதற்காக அந்தக் கருக்கலைப்பை செய்த மருத்துவரை சுட்டுக் கொல்வேன் என்று சொல்வதைப் போல் இருக்கிறது. இன்றைய நாட்களில் சபையிலும் கூட அநேகர் இதுபோன்று பகுத்தறிவில்லாமல் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறார்கள். வேறு விதமாகச் சொன்னால், அவர்கள் களைகளை விதைத்து விட்டு கோதுமை மணிகளை அறுக்க எதிர்நோக்குகிறார்கள்.

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன் (2 நாளாகமம் 7:14). நம் தேசத்தின் ஜனங்கள் தெய்வ பக்தி உள்ள தலைவர்களை தேர்ந்தெடுக்க தேவன் அவர்களுக்கு உதவி செய்வாராக. அத்தகைய தலைவர்களுடைய வெற்றிக்காக நாம் ஜெபிப்போமாக!

✞

---

'நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.

அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார், அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.

நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்' (யோவான் 10:28-30). தேவனுடைய பலத்த கரங்களுக்குள் பாதுகாப்பாக இருப்பவர்கள் தேவனை விட்டு விட்டு செல்வது மிகவும் துக்ககரமானதாகும். தேவன் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடுவதில்லை. ஆனால், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வேண்டுமானால் அவரைக் கைவிட முடியும். நாம் தேவனை விட்டு விட்டால் நம் நிலைமை என்னவாகும் என்பதை கற்பனை செய்து பார்க்கவே முடியாது.

வேதாகம வரலாறு

# உங்கள் பிதாக்கள் என்னை பத்து முறை பரீட்சை பார்த்தார்கள்!

## Your Fathers tempted me Ten times!

*Mark Mcwhorter*

**எ**பிரெயர் ஆசிரியர் யூத கிறிஸ்தவர்களை கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருக்கும்படி உற்சாகப்படுத்துகிறார். அவர்கள் மறுபடியும் பழைய பிரமாணத்திற்குச் செல்லும்படி இழுக்கப்பட்டார்கள். இங்கே எபிரேய ஆசிரியர் கீழ்ப்படியாமை எதிர்மறையான நியாயத்தீர்ப்பை தேவனிடமிருந்து வரவழைக்கும் என்று எச்சரித்தார்.

எபிரேயர் 3:8,9 வசனங்கள் இவ்விதமாய் சொல்கின்றன' **வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளில் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலமாய் என் கிரியைகளைக் கண்டார்கள்** (எபிரேயர் 3:8,9). இங்கே எபிரேய ஆசிரியர் யாத்திராகமம் 17 ஆம் அதிகாரத்தின் சம்பவங்களை நம்மை திரும்பி பார்க்க வைக்கிறார். மேலும், இந்தச் சம்பவம் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியேறி தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்த காலகட்டங்களை விவரிக்கிறது.

இங்கே எண்ணாகமம் 14:22 ல், தேவன் இஸ்ரவேலர்களைப் பார்த்து, **நீங்கள் என்னை பத்து முறை பரீட்சைப் பார்த்தீர்கள்** என்று சொல்கிறார். இங்கே பத்து முறை என்பது தேவன் எகிப்தியர் மீது வருவித்த 10 வாதைகளை நமக்கு நினைவுப்படுத்துகிறது. இஸ்ரவேலர்களின் கீழ்படியாமை மற்றும் முறுமுறுப்பின் காரணமாக தேவன் அவர்களை அந்த வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் அலைக்கழித்தார்.

இஸ்ரவேலர்கள் தேவனை பரீட்சைப் பார்த்த அந்தப் பத்து சம்பவங்களை தேவன் வரிசையாக குறிப்பிடவில்லை. இருந்தபோதிலும் அந்தப் பத்து சம்பவங்களும் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன யாத்திராகமம் 6:9–12;14:10–12; 15:23–26;

17:1–7,32, எண்ணாகமம் 11:1,4– 33; 12:1–15 மற்றும் 14 ஆம் அதிகாரம், இஸ்ரவேலர்கள் தம்மை 10 முறை பரீட்சை பார்த்ததாக தேவன் சொன்ன 10 சம்பவங்கள் இவைகள் தான் என்று துல்லியமாக நமக்கு தெரியவில்லை என்றாலும் கூட மோசே இந்த பத்து சம்பவங்களைத் தான் பதிவு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கருத்து இன்றும் உண்மையாய் இருக்கிறது. அதாவது, தேவன் நீடிய பொறுமை உள்ளவராய் இருந்தாலும் கூட அவர் தமக்கு கீழ்படிகிறவர்கள் மீது நியாயத் தீர்ப்பை செலுத்துவார் என்பது எவ்வளவு உண்மையாயிருக்கிறது. தேவன் பழைய உடன்படிக்கையிலும் இவ்விதமாகச் செய்தார், புதிய உடன்படிக்கையிலும் அவ்விதமாய் செய்வார். எனவே, வேதாகமத்தை நன்றாய்ப் படித்து முடிந்தவரை தேவனைப் பற்றி முழுமையாக கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிகிறீர்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். வேத வாக்கியங்களில் புரிந்து கொள்வதற்கு கடினமாக ஏதாவது இருந்தால், அதை வேதாகமத்தை நன்கு அறிந்தவர்களிடம் கேட்டுக் கற்றுக் கொள்ளுங்கள்.

✞

---

**ஆறுதல்**

வாழ்க்கை சுழற்சியைப் பற்றி வேதாகமம் சொல்வதை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? (2 கொரிந்தியர் 1:3-4) 3 நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். (2 கொரிந்தியர் 1:3,4). இந்த இரண்டு வசனங்களிலும் ஒரு காரியத்தை கவனியுங்கள். தேவன் நம்மை ஆறுதல் படுத்துகிறார், அவர் நம்மை ஆறுதல் படுத்துகிறபடியாலே நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் செய்ய வேண்டும்.

# வசன ஆராய்ச்சி

(1 கொரிந்தியர் 15:12–28)

*Jerry Bates*

*1.* கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை விசுவாசிப்பது இயற்கையாகவே என்ன விளைவை ஏற்படுத்துகிறது? (வசனம் 12)

*2.* கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் நம்முடைய பிரசங்கம் என்னவாயிருக்கிறது? (வசனம் 14)

*3.* கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் நம்முடைய விசுவாசம் என்னவாயிருக்கிறது? (வசனம் 17)

*4.* கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவில்லையென்றால் நம்முடைய நிலைமை என்னவாயிருக்கும்? (வசனம் 19)

*5.* கிறிஸ்து நித்திரையடைந்தவர்களில்...என்று பவுல் சொல்கிறார்? (வசனம் 20)

*6.* மனுஷனால்.... உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின்.... உண்டாயிற்று' (வசனம் 21).

*7.* கிறிஸ்து திரும்பி வரும்போது, ராஜ்யத்தை என்ன செய்வார்?(வசனம் 24)

*8.* எது பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு? (வசனம் 26)

*9.* கிறிஸ்து இப்போது ஆளுகைசெய்து கொண்டிருக்கிறாரா? (வசனம் 25)

*10.* எவைகள் எல்லாம் கிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டுத்தப் பட்டிருக்கின்றன? (வசனம் 27)

*11.* கிறிஸ்துவுக்கு கீழ்ப்படுத்தப்படாத ஒரே நபர் யார்? (வசனம் 28)

## 1 கொரிந்தியர் 15:12-28

**12** கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?
**13** மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே.
**14** கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா.
**15** மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி

சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. 16 மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. 17 கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். 18 கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. 19 இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.

**20** கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். **21**மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. **22** ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். **23** அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். **24** அதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். **25** எல்லாச் சத்துருக்களையும் ஆளுகை செய்ய வேண்டியது. தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும். அவர் **26** பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். **27** சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே. ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லை யென்பது வெளியரங்கமாயிருக்கிறது. **28** சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாம் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (1 கொரிந்தியர் 15:12–28).

✞

---

குறிப்பு: மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதியின் முக்கிய கருத்து உயிர்த்தெழுதலின் முக்கியத்துவமாகும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லை என்றால் நாம் செய்கின்ற, விசுவாசிக்கின்ற எல்லாமே மதிப்பற்றதாகப்போகும். இவ்வதிகாரத்தின் கடைசிப்பகுதி (ரோமர் 5:12–19) வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை தொட்டுப் போகிறது. அதாவது, இந்த 1கொரிந்தியர் 15ஆம் அதிகாரம் உயிர்த்தெழுதலின் நேர்மறையான காரியங்களை வலியுறுத்துகிறது. எல்லா அதிகாரங்களும், சாத்தானும் கூட கிறிஸ்துவுக்கு கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறான்; ஒரு நாளில் மரணம் கூட கிறிஸ்துவுக்கு கீழ்ப்படுத்தப்படும். ஆனால், இயேசு கிறிஸ்து எப்போதுமே பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்பட்டிருப்பார்.

தேவனுடைய வார்த்தை

# இன்று ஏசாயா எதைப் பிரசிங்கப்பார் ?

## What Isaiah would preach Today?

*Hiram kemp*

ஏசாயா தேவனுடைய மாபெரும் தீர்க்கதரிசியாக இருந்தார், அவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் பிரசங்கித்து வந்தார். அவர் தன் வாசகர்களுக்கு சொல்வன்மையும், மிகச் சிறந்த மொழிநடையும் கொண்டு எழுதினபடியால், தலைசிறந்த தீர்க்கதரிசியாக திகழ்ந்தார். அவர் எருசலேமில் பல அரசர்கள் அரசாண்ட காலகட்டத்தில் பிரசங்கித்தார் (ஏசாயா 1:1). ஏசாயாவின் பிரசங்கம் தேவ ஆவியினால் ஏவப்பட்டிருந்தபடியால் இன்றைய நாட்களின் பிரசங்கங்களோடு முற்றிலும் வேறுபடுகிறது. இருந்தபோதிலும் கூட, இதிலிருந்து நாம் சில பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஏசாயாவின் பிரசங்கத்தைப்போலவே நம்முடைய பிரசங்கங்களும் ஏவப்பட்ட தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டதாக காணப்பட வேண்டும் ( 2 தீமோத்தேயு 3:16,17:1 பேதுரு 4:11). சூரியனுக்குக்கீழே நூதனமானது ஒன்றுமில்லை (பிரசங்கி 1:9). ஏசாயா தான் வாழ்ந்த காலகட்டத்தில் மிகவும் வல்லமையான பிரசிங்கியாராக இருந்தார் அவருடைய செய்திகள் இன்றைய நாட்களிலும் பொருத்தமாயிருக்கின்றன. நாம் ஏசாயா தீர்க்க தரிசனப் புத்தகம் முழுவதையும் வாசிக்கும் போது, சில முக்கியமான கருப்பொருட்களை கண்டு கொள்ள முடியும். அது மாத்திரமல்ல, அந்தப் பிரசங்கங்களை நம்முடைய ஜீவியங்களில் பொருத்திப் பார்த்து, மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். இவர்களை எல்லாம் வைத்துப் பார்த்தால், ஏசாயா மரித்தாலும் இன்றும் அவர் நம்மோடு பேசிக்கொண்டு தான் இருக்கிறார் (எபிரேயர் 11:4).

### தேவன் எல்லா ஆராதனைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை

சில வேளைகளில் ஜனங்கள் ஆராதனையை எப்படி ஏறெடுத்தாலும் தேவன் அதை ஏற்றுக் கொள்வார் என்கிற தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசி அந்த பழங்கால இஸ்ரவேலுக்கு அது உண்மையல்ல என்று எப்படிச் சொன்னாரோ அதைத் தான் இன்றைய நாட்களிலும் நமக்குச் சொல்கிறார். தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட சக மனிதர்களை தவறாக நடத்தி விட்டு தேவனுக்கு ஆராதனையை ஏறெடுத்தவர்களை ஏசாயா கடுமையாக கடிந்து கொள்கிறார் (ஏசாயா 1:11–15). ஜனங்கள் வாழ்வின் மற்ற பகுதிகளிலே தேவனுடைய பிரமாணத்தின்படி வாழாமல் தேவனுக்கு ஆராதனையை ஏறெடுத்தால் அதை அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார்

என்று கடுமையாகச் சாடினார். அந்த இஸ்ரேல் ஜனங்கள் தங்கள் பாவச் செய்கைகளினாலே தேவனுக்கு கோபமூட்டின பிறகும் கூட, தேவனை ஆராதித்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தார்கள் (ஏசாயா1:2-9). இன்றைய நாட்களில் ஜனங்கள் இந்த பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய இருதயங்கள் தேவனுக்கு நேராக செம்மையாக இல்லாத பட்சத்தில் நாம் எப்படிப்பட்ட ஆராதனையை அவருக்கு ஏறெடுத்தாலும் அவர் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார். நாம் ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் (யோவான் 4:24). நாம் தேவன் கட்டளையிட்டபடி அவருக்கு ஆராதனை ஏறெடுத்து விட்டு, வாழ வேண்டியபடி நாம் வாழாத பட்சத்திலே அந்த ஆராதனை அவரால் நிராகரிக்கப்படும். அதேபோல் நாம் ஜனங்களை சரியாக நடத்தி விட்டு, நம்முடைய விருப்பப்படி தேவனுக்கு ஆராதனை ஏறெடுத்தால் அதுவும் அவராலே நிராகரிக்கப்படும் (ஏசாயா 29:13). இன்று ஏசாயா பிரசங்கிக்கிறதாகயிருந்தால், ஆராதனை என்பது லேசாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்ல, தேவன் எல்லா ஆராதனையையும் ஏற்றுக்கொள்வதில்லை என்று தான் சொல்வார் (ஆமோஸ் 5:21-27).

**தேவன் மன்னிக்கிற தேவனாக இருக்கிறார்**

தேவனுடைய ஜனங்கள் விக்கிரக ஆராதனை செய்கிறவர்களாக இருந்தாலும்கூடஏசாயா அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தார். அவர்கள் மனந்திரும்பினால், அவர்களுடைய பாவங்களை உறைந்த மழையைப் போல வெண்மையாக மாற்றுவார் என்றும் ஏசாயா சொன்னார் (ஏசாயா1:18). தேவன் ஏசாயா மூலமாக அந்த இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை கழுவி சுத்திகரிக்கவும், தீமை செய்வதை நிறுத்தவும் வேண்டும் என்று மன்றாடினார் (ஏசாயா 1:16). அந்த இஸ்ரவேல் ஜனங்கள் ஒடுக்கப்பட்டவர்களை ஆதரிக்க வேண்டும் என்றும், முழுமையாக ஆவிக்குரியவ ர்களாக மாறவேண்டுமென்றும் விரும்பினார்(ஏசாயா 1:17). அவர்கள் தேவனிடத்திற்குத் திரும்பி, சரியானவைகளைசெய்தால் அவர்கள் செழித்திருப்பார்கள் என்று ஏசாயா சொல்கிறார். ஆனால், அவர்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தால் அதன் விளைவுகளை எதிர்கொள்வார்கள் என்றும் ஏசாயா சொல்லுகிறார் (ஏசாயா 1:19,20). பழைய ஏற்பாட்டின் நாட்களிலே தேவன் தம்முடைய கோபத்தினால் அறியப்பட்டிருந்தார். ஆனால், பழைய ஏற்பாட்டில் தேவன் கிருபையையும் அதிகமாக பொழிந்தருளினார் என்பதை அநேகர் அறியாமலிருக்கிறார்கள் (யாத்திராகமம் 34:6-7). புதிய ஏற்பாட்டில் நம் பாவங்களை மன்னித்து, மன்னிப்பு வழங்குகிற தேவன் பழைய ஏற்பாட்டின் நாட்களிலும் மன்னிப்பை அபரிதமாக வழங்கினார் (சங்கீதம் 86:15; 103:8). இங்கே ஏசாயா தம்முடைய ஜனங்களின் பாவங்களின் நிமித்தம் அவர்களை அழிக்க விரும்பாமல் ஜனங்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பினால் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்

தேவனாக நம் தேவன் இருப்பதாக ஏசாயா தெளிவுபடுத்துகிறார் [ஏசாயா40:1,2].

இன்று ஏசாயா உயிரோடிருந்தால், பாவத்தை குறித்தும் அதன் விளைவுகளை குறித்தும் எச்சரிப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றாலும் கூட, மனந்திரும்பினால் மன்னிப்பு உண்டு என்பதையும் நினைப்பூட்டுகிறார் [அப்போஸ்தலர் 2:37,38]. ஓர் ஆத்துமா கெட்டுப் போவதைக் கூட தேவன் விரும்புவதில்லை. அதனால் தான் தேவன் இயேசு கிறிஸ்துவை இப்பூமிக்கு பலியாக அனுப்பினார் [1 தீமோத்தேயு 2:4 ; 2பேதுரு 3:9]. தேவன் மீட்பராகவும், தங்கள் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு, இரண்டாவது வாய்ப்பு கொடுக்க விரும்புகிறவராகவும் அறியப்படுகிறார் [ஏசாயா 43:1]. பெரும்பாலான ஜனங்கள் சீக்கிரமாய் தளர்ந்து போகிறார்கள். அநேகமாக அவர்கள் வாழ்க்கையில் பல மோசமான காரியங்களை செய்து விட்டதாக அல்லது தேவனுடைய வீட்டிற்கு மறுபடியும் திரும்ப முடியாத தூரத்திற்கு சென்று விட்டதாகவும் அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. இரத்தக் கறைபடிந்த இஸ்ரவேல் ஜனங்களுடைய பாவங்களே அவர்கள் மனந்திரும்பினால் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும் போது [சங்கீதம்51:7]. இயேசுவைக் கொலை செய்தவர்களுடைய பாவங்களே அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த போது மன்னிக்கப்பட்டபடியால் [அப்போஸ்தலர்22:16] ஜனங்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனிடத்திற்கு திரும்பும் போது பாவ மன்னிப்பு கிடைக்கும் [அப்போஸ்தலர் 13:38-39].

**தேவன் பரிசுத்தமானவர் விக்கிரக ஆராதனையோ மூடத்தனமானது**

ஏசாயா தீர்க்க தரிசன புத்தகத்திலேயே மிகவும் பிரபலமான வசனப் பகுதி ஏசாயாவுக்கு உண்டான தரிசனத்தை உள்ளடக்கிய ஆறாம் அதிகாரம் தான். இந்த அதிகாரத்தின் முதல் வசனத்தில் ஏசாயா உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்ததைக் கண்டார். மேலும் ஏசாயா சேராபீன்கள் 'ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்' [ஏசாயா 6:3] என்று சொல்கிறார். இப்புத்தகத்தில் ஏசாயா தேவனை இஸ்ரவேலின் பரிசுத்தர் என்று 20 முறைக்கு மேல் குறிப்பிடுகிறார் ஏசாயா [1:4:5:19; 5:24; 30:12; 41:14; 43:3]. இன்று ஏசாயா இருந்திருந்தால் இன்றைய நாட்களின் மக்களுக்கு தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால் நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பார் [1 பேதுரு 1:15,16].

இஸ்ரவேலர்களை அதிகமாக பாடாய்ப்படுத்தின பாவம் விக்கிரகாரதனைதான். விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டிருந்த இஸ்ரவேலர்களை ஏசாயா கடுமையாகச் சாடினார். ஏசாயா தீர்க்கதரிசன

புத்தகத்தை வாசிப்பவர்கள் ஏசாயா சமகாலத்தில் இருந்த விக்கிரக ஆராதனை நடைமுறைகளை கேலியும், கிண்டலும் அடிப்பதை வாசித்து சிரிக்காமல் இருக்கவே முடியாது [ஏசாயா 44:9-20]. ஏசாயா அன்றைய இஸ்ரவேலுக்கு ஒரே ஒரு தேவன் தான் உண்டு யேகோவா தேவனைத் தவிர வேறொரு தேவன் இல்லை என்பதை தெளிவுபடுத்தினார் [ஏசாயா 45:6]. விக்கிரக ஆராதனை இன்றும் தலைவிரித்தாடுகிறது. எனவே தான், நாம் நம்முடைய ஆராதனைக்கும் பக்திக்கும் பாத்திரர் நம் தேவன் மாத்திரமே என்பதை எப்போதுமே நினைவில் கொள்ள வேண்டும் [கொலோசெயர்3:5]. ஏசாயா அன்றைய நாட்களிலேயே தேவனுடைய பிள்ளைகள் கீழானவைகளை அல்ல அதாவது இவ்வுலகத்திற்குரியவை களை அல்ல மேலானவைகளை நாட வேண்டுமென்று உற்சாகப்படுத்தி விட்டார் [மத்தேயு 6:19-21]. புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் விக்கிரக ஆராதனையிலிருந்து விலகியிருக்க வேண்டுமென்று பல வசனங்கள் திரும்பத் திரும்ப எச்சரிக்கின்றன 1 கொரிந்தியர் 8:4-6;1 யோவான் 5:21].

தேவஆவியினால் ஏவப்பட்ட ஏசாயாவின் வார்த்தைகளை நாம் வாசிக்கும் போது, அந்த நாட்களில் ஜனங்கள் எதற்காக சிரமப்பட்டார்களோ அதற்காகத்தான் இன்றைய நாட்களிலும் ஜனங்கள் சிரமப்படுகிறார்கள். அதேபோல் அன்று ஜனங்களை மன்னிப்பதற்காக கரங்களை நீட்டிய அதே தேவன் தான் இன்றும் தம்முடைய கரங்களை மன்னிப்பதற்காக நீட்டுகிறார். மேலும், தேவனுடைய வார்த்தைகளை போதிப்பவர்களும், பிரசிங்கப்பவர்களும் தேவ வசனத்தை பிரசங்கிக்க தைரியமுடையவர்களாக இருக்க வேண்டும் [2 தீமோத்தேயு 4:2]. ஏசாயா சக இஸ்ரவேலர்களால் விரும்பப்படாமல் இருந்திருக்கலாம், நாம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டவர்களாய், அவருக்காக பாடுபட மனமுள்ளவர்களாய், ஏசாயாவைப் போல் தைரியமாய் பிரசங்கிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. நாம் ஏசாயாவின் செய்தியைப் படித்து இன்றும் அவர் நம்மோடு தொடர்ந்து பேச அனுமதிக்க வேண்டும் [ரோமர்16:4;1 கொரிந்தியர் 10:6,11].

**இஸ்ரவேலர்களை அதிகமாக பாடாய்ப்படுத்தின பாவம் என்றால் அது விக்கிரகாரதனைதான். விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டிருந்த இஸ்ரவேலர்களை ஏசாயா கடுமையாகச் சாடினார். ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசிப்பவர்கள் ஏசாயா சமகாலத்தில் இருந்த விக்கிரக ஆராதனை நடைமுறைகளை கேலியும் கிண்டலும் அடிப்பதை வாசித்து சிரிக்காமல் இருக்கவே முடியாது.**

# முட்டாளின் மையக்கரு பாடல்

## The Fool's theme song

*Denny petrillo*

**சா**லமோன் ஞானி முட்டாள்களைப் பற்றி அதிகமாக சொல்லியிருக்கிறார். அவர் எழுதின பிரசங்கி புத்தகத்திலேயே முட்டாள்களைப் பற்றி அதிகமாக குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக, பிரசங்கி 10:19 ல், ஞானி சாலமோன் முட்டாளின் வாழ்க்கை தத்துவத்தை சுருக்கமாக சொல்லியிருக்கிறார். அந்த தத்துவஞானம் மூன்று வாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

**1 விருந்து சந்தோஷத்துக்கென்று செய்யப்படும்.**

நாம் உண்ணும் உணவை ரசிப்பதோ, அனுபவிப்பதோ எவ்விதத்திலும் பாவம் அல்ல [பிரசங்கி 2:24;5:18]. இவ்வாக்கியத்தில் முட்டாளின் சுயநலம், தனக்குத் தானே திருப்தி அடைந்து கொள்ளும் தன்மையும் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு முட்டாள் எனக்கு மட்டும்தான் என்னும் சுய ஞானத்தின்படி தான் வாழ்கிறான். மேலும், ஒரு முட்டாள் அளவுக்கு அதிகமாக ஆகாரம் புசிக்கும் பாவத்திலும் ஈடுபடுகிறான். சாலமோன் ஞானி நாம் பெலனடைவதற்காகத் தான் புசிக்கிறோம் என்று குறிப்பிடுகிறார் [10:17]. அப்போஸ்தலனாகிய பவுலும் நாம் போஜன பதார்த்தங்களை தோத்திரத்தோட அனுபவிக்க வேண்டும் என்று சொல்லுகிறார் [1 தீமோத்தேயு 4:3–5].

**2 திராட்ச ரசம் ஜீவனுள்ளோரை களிப்பாக்கும்.**

ஒரு முட்டாள் மாத்திரம்தான் இவ்விதமான ஆழமற்ற சுயநலமான கண்ணோட்டத்தை கொண்டிருப்பான். முட்டாளின் மைய நோக்கமே எப்படியாவது மகிழ்ச்சியாய் இருப்பதுதான். பிரசங்கி ஏழாம் அதிகாரத்தில் சாலமோன் ஞானி, **விருந்து வீட்டுக்குப்போவதிலும் துக்க வீட்டுக்குப்போவது நலம் என்று** எழுதியிருக்கிறார் [7:2,4]. வேதாகமம் மதுபானத்துக்கு எதிரான எச்சரிப்புகளால் நிறைந்திருக்கிறது [நீதிமொழிகள் 20:1]. ஒரு ஞானி மதுபானத்தை தவிர்க்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார். மதுபானம் நிச்சயமாகவே ஒருவருக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வராது. மாறாக, அது ஒருவருடைய துக்கத்தைத்தான் அதிகப்படுத்தும்.

**3. பணமோ எல்லாவற்றிற்கும் உதவும்**

இந்த உலகில் பணத்தால் எல்லாவற்றையும் சாதித்து விடலாம், பெற்று விடலாம் என்று ஒரு முட்டாள்தான் நினைப்பான். ஐசுவரியம்

வஞ்சனையானது ஐசுவரியத்தால் உண்மையான சந்தோஷத்தையும் திருப்தியையும் அளிக்க முடியாது (பிரசங்கி 5:13-17). எனவே தான், ஒரு முட்டாள் உண்மையாகவே வஞ்சிக்கப்படுகிறாள். இன்றைய நாட்களில் எத்தனை பேர் இவ்விதமான முட்டாள்த்தனமான நம்பிக்கையால் ஏமாற்றப்படுகிறார்கள்? வேதாகமத்தில் அந்தப் பணக்கார முட்டாள் ஏமாற்றப்பட்டான் (லூக்கா 12:13-21). அந்தப் பணக்கார வாலிபன் ஏமாற்றப்பட்டான் (மத்தேயு 19:16-26). அப்போஸ்தலனாகிய பவுலும் கூட பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்று எச்சரித்தார் (1தீமோத்தேயு 6:9). நாம் வரலாற்றை சற்று புரட்டிப் பார்த்தால் திரளான செல்வம் உடையவர்களாக இருந்தும் தனிமையாக, மிகவும் துக்ககரமாக மரித்த பலரை நாம் காண முடியும். பல செல்வந்தர்கள் தற்கொலை கூட செய்திருக்கிறார்கள். நிச்சயமாகவே பணம் எல்லா வாழ்க்கை பிரச்சனைகளுக்கும் தீர்வாகாது.

மேற்சொல்லப்பட்ட காரியங்களிலிருந்து நாம் எதையாவது கற்றுக் கொண்டிருக்கிறோமா? நாம் வாழும் உலகம் மேற்சொல்லப்பட்ட சீர்கேடான சிந்தை உடையதாகத்தான் இருக்கிறது. இவ்வுலகம் நலமான வாழ்க்கை வாழ்வதற்கான சீர்கேடான தத்துவ ஞானங்களைத்தான் ஏற்றுக் கொள்கிறது. பணம், உணவு மற்றும் மதுபானத்தை குறித்து நமக்குச் சரியான பார்வை இல்லை என்றால் அவைகள் நம்மை பாடாய்ப்படுத்திவிடும்.

✞

---

**யாரோ ஒருவர் நம்மை தழுவல் மூலமாக அல்லது நம்முடைய வார்த்தைகளை செவி கொடுத்து கேட்பதன் மூலமாக அல்லது ஒரு வார்த்தை கூட பேசாமல் நமதருகில் உட்காருவதன் மூலமாக ஆறுதல் படுத்தினால் நாம் எப்படி உணர்வோம் என்பதைப் பற்றி சற்று நினைத்துப் பாருங்கள். இந்த முழு சுழற்சியையும் கவனியுங்கள். முதலாவது தேவன் நம்மை ஆறுதல் படுத்துகிறார், தேவன் நம்மை ஆறுதல் படுத்துகிறபடியால் நாம் மற்றவர்களை ஆறுதல் படுத்துகிறோம். அவர் சகல விதமான ஆறுதலின் தேவனாய் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவனைப் போல் நம்மை யாரும் ஆறுதல் படுத்த முடியாது.**

## தேவனுடைய வார்த்தை

# இரண்டு பேராவது, மூன்று பேராவது எங்கே கூடியிருக்கிறார்களோ

# Where Two or three are gathered Together

*Louis Rushmore*

மிகவும் சுவாரசியமாக சபையில் யாரோ ஒருவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சபைக் கூடுகை சிறிய அளவில் இருந்தால் போதுமானது சபை எண்ணிக்கை ஒரு பொருட்டே அல்ல என்று சொன்னதாக விளக்கம் கொடுத்திருக்கிறார். இந்தத் தாறுமாறான விளக்கத்திற்கான மைய வசனம் மத்தேயு 18:20 ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. **ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்** என்றார் (மத்தேயு 18:20). இந்த வசனத்திற்கு இப்படிப்பட்ட விளக்கத்தை நான் ஒருபோதும் கேட்டதில்லை என்பதை முதலில் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இப்போது நாம் **இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்** என்னும் சொற்றொடர் இடம்பெற்றுள்ள அந்த வசனப் பகுதியையும் காண்போம். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 18:18 19 அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 18:19

ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'(மத்தேயு 18:18-20). இங்கே சந்தர்ப்பம் என்னவென்றால் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பிரத்தியேகமாக பேசிக் கொண்டிருக்கிறார். பதினெட்டாம் வசனத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்கள் உபதேச ரீதியாக தேவனுக்காகப் பேச வேண்டும் என்று அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அப்போஸ்தவர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு தேவனுக்காக பேசியதன் விளைவாக அவர்களால் போதிக்கப்பட்ட உபதேசம் அப்போஸ்தலருடைய உபதேசம் என்று அழைக்கப்படுகிறது (2 பேதுரு 1:20-21); அப்போஸ்தலர் 2:42).



சில வேளைகளில் சபை அங்கத்தினர்களும் கூட இந்த (மத்தேயு 18:20) நாம் ஆராதனைக்காக ஒன்று கூடும் போது அங்கு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் இருக்கிறது என்பதை போதிப்பதற்காக பயன்படுத்துகிறார்கள்.

அவர்கள் இந்த வசனத்தின் சந்தர்ப்பத்தையும், பொருளையும் புரிந்து கொள்வதில்லை என்பது வேதனைக்குரிய விஷயமாகும். ஆம், நிச்சயமாகவே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவத்துவத்தின் குணாதிசயங்களையும் பெற்றிருக்கிறபடியால் அவர் சர்வ வியாபியாக இருக்கிறார் (சங்கீதம் 139:7–10); மத்தேயு 28:20). மேலும் இயேசு கிறிஸ்து ஆராதனை வேளையில் தம்முடைய பிரசன்னம் இருப்பதாக வாக்குரைத்தும் இருக்கிறார் (மத்தேயு 26:29).

ஆயினும், மத்தேயு எழுதின சுவிசேஷ புத்தகம் (18: 20) இந்த சத்தியத்தை போதிப்பதில்லை. மேலும், (மத்தேயு 18:20) கர்த்தருடைய சபையின் எண்ணிக்கை பற்றி எதுவுமே சொல்லவில்லை. இருந்தபோதிலும் முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் சில வேளைகளில் ஆயிரக்கணக்கானோர் கூட கூடியிருக்கிறார்கள். முதல் நூற்றாண்டில் திரளான கூட்டத்தார் கர்த்தரிடத்தில் சேர்க்கப்பட்டிருப்பதையே நாம் வேத வாக்கியங்களில் வாசிக்க முடியும் அப்போஸ்தலர் 4:32; 5:14,6:2; 15:12,30.

✞

### உண்மையாய் இல்லையெனில்

| | |
|---|---|
| 1. தேவன் தமது முகத்தை மறைப்பார். | உபா 32:20 |
| 2. எஜமான் தண்டிப்பார். | லூக்கா 12:46 |
| 3. நம்பிக்கை குறைந்து போகும். | லூக்கா 16:11 |
| 4. தேசத்தின் மேல் கர்த்தருக்கு வழக்கு வரும். | ஓசியா 4:1 |
| 5. மாறுபாடான சந்ததியாக மாறும். | உபா 32:20 |

# இந்தக் கடினமான காலகட்டத்தில் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துதல்

## Encouraging one another during this trying time

*Martha Lynn Rushmore*

**கொ**ரோனா நோய் கொள்ளை நோய் உச்சத்தில் இருந்த போது, கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரி தன் சபை அங்கத்தினர்களுக்கு தொடர்ச்சியாக அவர்களை உற்சாகப்படுத்தும்படி தபால் அட்டைகளை அனுப்பிக்கொண்டிருந்தார். அந்த சபையில் எத்தனை பேர் கூடி வருகிறார்கள் என்பதை பற்றி நிச்சயமாக எனக்கு தெரியவில்லை. ஆனால், இது ஒரு சாதாரண செயல் அல்ல. அந்தச் சகோதரி மற்றவர்கள் மீது சிந்தை உடையவராயிருந்தபடியால் தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

சபையில் எங்களைப் போன்ற பல பெண்களுக்கு தையல் தெரியாதபடியால், தைக்கத் தெரிந்தவர்கள் எல்லோருக்காகவும் கவசத்தை தயார் செய்தார்கள். அதிலும் குறிப்பாக, எங்கள் பிராந்திய சபையில் யாருக்கெல்லாம் கவசம் அவசியப் பட்டதோ அவர்களுக்கு எல்லாம் கவசத்தை தயாரித்துக் கொடுத்தார்கள். இது மற்றவர்கள் மீதான அக்கறையை காட்டுகிறது. இந்த நற்கிரியை செய்வதற்காக அவர்கள் மற்றவர்களிடம் இருந்து பணம் எதையும் வாங்கவே இல்லை. சிலர் துணிகளை மாத்திரம் வாங்கி கொடுத்தார்கள். தையல் வேலை தெரியாதவர்கள் இவ்விதமாக கவசம் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களை வாங்கி கொடுத்தார்கள். இவைகள் எல்லாம் மற்றவர்களை உற்சாகப்படுத்த நம்மால் செய்யக்கூடிய காரியங்கள் தான்.

நீங்கள் வயதானவர்களுக்கோ அல்லது வியாதி பட்டவர்களுக்கோ ஆகாரத்தை எடுத்துச் செல்லலாம். நீங்கள் ஆகாரத்தை எடுத்துக்கொண்டு அவருடைய வீட்டுக்கு உள்ளாகக் கூட போக வேண்டிய அவசியமில்லை. நேரம் கருதி வாசலிலேயே நின்று அந்த ஆகாரத்தை கொடுத்து விட்டு நீங்கள் வந்துவிடலாம். நீங்கள் வீட்டு வாசலுக்கே செல்ல விருப்பம் இல்லாதவர்களாக இருந்தால் கூட, உணவு நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு உணவை நாம் யாருக்கு கொடுக்க விரும்புகிறோமோ அவர்களுக்கு கொடுக்க முடியும்.

நாம் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்த வேறென்ன செய்ய முடியும்? சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை பற்றி எப்படி? ஒருவரோடு ஒருவர் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இது மிகச்சிறந்த வழியாகும். இந்த நாட்களில் கிட்டத்தட்ட எல்லோருமே ஏதோ ஒரு சமூக வலைத்தளத்தில்

இருக்கிறபடியால் மற்றவரோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இது மிகவும் சுலபமான வழியாகும்.

சில பிராந்திய சபைகள் ஞாயிறு காலை இணைந்து ஆராதிக்கத்தக்க அப்பம் திராட்சை ரசம் போன்றவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் தயாரிக்கிறார்கள். இதில் சபை அங்கத்தினர்களின் பங்களிப்பு அளப்பரியது. கர்த்தருடைய பந்திக்கு உண்டான அப்பம் மற்றும் திராட்சை ரசத்தை தயார் செய்யும் போது சபை அங்கத்தினர்கள் கையுறைகளை போட்டுக் கொண்டு மிகவும் பாதுகாப்பான முறையிலே அதை தயாரித்தார்கள். நாங்கள் அடிக்கடி கைகளை கழுவிக் கொண்டும் கிருமி நாசினிகளை பயன்படுத்திக் கொண்டும் வந்தோம். அரசாங்க அறிவுறுத்தலின்படி ஆறு அடி இடைவெளி விட்டு நாங்கள் நின்றோம். அந்த கொடிய கொரோனா காலகட்டத்திலும் கூட நாங்கள் ஒரு முறை கூட ஆராதனையை தவறவிட்டதே இல்லை. அதே நேரத்திலே அரசாங்கச் சட்ட திட்டங்களையும் நாங்கள் மதித்து, கவசமிட்டு, கைகளை கழுவிக்கொண்டு கிருமி நாசினிகளை பயன்படுத்திக் கொண்டு எங்களை நாங்கள் தற்காத்துக் கொண்டோம். அந்தக்கொடிய கொரோனா காலகட்டத்தில் எல்லாவற்றையும் விட தேவனே எங்களுக்கு பாதுகாப்பாக இருந்தார் என்பதை இந்த வேளையிலே நாங்கள் நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

இன்றைய நாட்களில் அநேக பிரசங்கியார்கள் பிரசங்கிக்கவும் 5 நிமிட செய்தி கொடுக்கவும் இணையதளத்தை பயன்படுத்தினார்கள். பெரும்பாலான சபைகள் இணையத்தின் மூலமாக குறைந்தது வாரம் ஒரு முறையாவது ஏதாவது நிகழ்ச்சியை நடத்தினார்கள். நாம் இந்த விதத்தில் ஐக்கியத்தை வைத்துக் கொள்ள முடியும். சில பிராந்திய சபைகள் ஞாயிறு காலை, ஞாயிறு மாலை மற்றும் புதன்கிழமை வேத பாட வகுப்பு போன்றவைகளை இணையத்தில் பகிர்ந்து கொண்டார்கள். இன்றைய நாட்களில் ஆரோக்கியமான சுவிசேஷத்தை இணைய வழியில் பிரசிங்கிப்பதற்கு அநேக வாய்ப்புகள் உள்ளன.

உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி, நான் தாமதியாமல் தீவிரித்தேன்‘(சங்கீதம் 119:60). காலம் கரைந்து கொண்டிருக்கிறது, நேரம் பறந்து கொண்டிருக்கிறது. என்றாவது ஒருநாள் கிறிஸ்தவராக வேண்டும் என்று நீங்கள் எண்ணியிருந்தால் அல்லது விட்டுச் சென்ற சபைக்கு மறுபடியும் திரும்ப வேண்டும் என்று நீங்கள் எண்ணியிருந்தால் இதுதான் சரியான நேரம். இன்னும் தாமதப்படுத்தாமல், சீக்கிரம் காரியங்களைச் செய்யுங்கள். காலம் கரைந்து கொண்டிருக்கிறது, நேரம் பறந்து கொண்டிருக்கிறது.

✞

இரட்சிப்பு

# ஜெபம் அருவருப்பாகும்போது...

## When prayer is an Abomination...

*Ernest S. Underwood*

**க**ள்ளப் போதகர்கள் அடிக்கடி தங்களைப் பின்பற்றுபவர்களிடம் நீங்கள் வெறுமனே பாவியின் ஜெபத்தை ஜெபித்து, இயேசுவை உங்கள் இருதயத்திற்கு அழையுங்கள் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இந்தப் போதனையை எந்த வேத வாக்கியமும் போதிக்காதபடியால், இதற்கு வசன ஆதாரங்களை அவர்களால் கொடுக்க முடியாது. இந்தக் கற்பனையான வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கிறவர்கள் ஞானி சாலொமோனின் எச்சரிப்பின் வார்த்தைகளை வாசிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவும் சரி, அவருடைய அப்பேஸ்தலர்களும் சரி தேவனுடைய இரட்சிப்பின் ஈவை மனிதன் பெற்றுக் கொள்வதற்கு விசேஷத்த ஜெபங்களோ அல்லது வார்த்தைகளோ ஏறெடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடவில்லை. இப்படியிருக்கும் பட்சத்தில், ஒருவர் கிறிஸ்துவின் பிரமாணத்தைக் கேளாதபடி செவியை விலக்கி, பாவியின் ஜெபத்தை சொல்லும்படி உற்சாகப்படுத்தும் உளறுகிறவர்களின் வார்த்தைகளை உள்வாங்கி ஏற்றுக் கொண்டால் அந்த நபருக்கு மன்னிப்பே கிடையாது; அல்லது அந்த நபர் எந்த சாக்கு போக்கையும் சொல்ல முடியாது. இந்த கள்ள போதகர்கள் மனித இனத்தை அருவருப்பான காரியத்தைச் செய்ய தூண்டுகிறார்கள். இத்தகைய கள்ளப் போதகர்கள் வெட்கப்படுத்தப்பட வேண்டும்.

அருமையான நண்பரே, பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்போது கர்த்தர் உங்களை மார்க்கப் பிரிவினை சபைகளில் அல்ல, தம்முடைய சபையிலே சேர்த்துக் கொள்வார். அதன் பிறகு, பரம தகப்பனின் பிள்ளைகளாகிய நீங்கள் ஜெபிப்பதற்கான தேவனால் கொடுக்கப்பட்ட உரிமையை பெறுவீர்கள். **பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே** இப்படி அழைக்க தானே நீங்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?



**உங்களுக்குத் தெரியுமா?**

**ஏசாயாவும், மீகாவும் தெற்கு ராஜ்யத்தில் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில்தான் ஓசியாவும், ஆமோசும் வடக்கு ராஜ்யத்தில் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்தார்கள்.**

# நீங்கள் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்

## You must be circumcised

*Gary C. Hampton*



**வி**ருத்தசேதனம் என்னும் வார்த்தை ஒருவரை உடனே பழைய ஏற்பாட்டிற்கு அழைத்துச் செல்கிறது. விருத்தசேதனம் என்பது தேவனுடனான உடன்படிக்கை உறவில் ஒரு முக்கிய அம்சமாகும்.

தேவன் ஆபிரகாமை பெரிய ஜாதியாக்கி சகல தேசத்தாருக்கும் தகப்பனாக்கி, அவருடைய சந்ததிக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியை கொடுப்பதாகச் சொன்னார் [ஆதியாகமம் 17:1–8]. சர்வ வல்ல தேவன் இவ்விதமாய் அறிவித்தார் எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ளவேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். [ஆதியாகமம் 17:10–11].

விருத்தசேதனம் பண்ணப்படாத ஆண் பிள்ளை தன் உடன்படிக்கை உறவில் இருக்க மாட்டான் என்று தேவன் தெளிவுபடுத்தி விட்டார். நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்றார் [ஆதியாகமம் 17:14]. வனாந்தரத்தில் அலைந்து திரிந்த இஸ்ரவேலர்கள் தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ண வில்லை. எனவே, அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் [யோசுவா 5:2].

ஒருவர் நியாயப்பிரமாணத்தை பூரணமாகக் கைக்கொள்ளும் போது மாத்திரமே விருத்தசேதனம் நன்மை பயக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தவிர வேறு எந்த யூதனும் நியாயப்பிரமாணத்தை பூரணமாகக் கைக்கொள்ளவில்லை. யூதர்கள் நியாயப்பிரமாணத்தை மீறினபடியால் அவர்களுடைய விருத்தசேதனம் அவர்களுக்கு எவ்விதத்திலும் பிரயோஜனப்படவில்லை.

இன்று கிறிஸ்தவர்கள்தான் தேவனுடைய விருத்தசேதனமாய் இருக்கிறார்கள். அதாவது, கிறிஸ்தவர்கள் தான் விருத்தசேதனம் உள்ளவர்களாயிருக்கிறார்கள் [பிலிப்பியர்3:3]. ஆனால், நம்முடைய விருத்தசேதனம் இருதயத்தில் உண்டாகிறது. ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல.

உள்ளத்திலே யூதனானவனே யூதன், எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம், இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது' [ரோமர் 2:29].

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தை களைந்து விட்டதினால் கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றிருக்கிறோம்.' அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்.

ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் [கொலோசெயர் 2:12].

கிறிஸ்துவின் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க விரும்பும் எந்த ஒரு நபரும் ஞானஸ்நானத்தில் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். ஒருவர் ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியத் தவறும் போது அது பரலோகத்திலிருந்து அந்த நபரை துண்டித்து விடும். நாம் சத்தியத்திற்காக நிற்கிறோமா ?

பழைய ஏற்பாட்டின் நாட்களில் எலியா தீர்க்கதரிசி சரியானதைச் செய்ய நாடினார். ஆனால், அப்போது அரசாட்சியில் இருந்த யேசபேல் எலியாவை கடுமையாகத் துன்புறுத்தினார். புதிய ஏற்பாட்டில் யோவான் சத்தியத்திற்காக உறுதியாக நின்றார் அதன் காரணமாக ராஜாவின் மனைவியால் வெறுக்கப்பட்டார். ராஜாவின் மனைவியாகிய ஏரோதியாள் யோவான் ஸ்நானனை கொலை செய்யத் திட்டம்

தீட்டினாள். எனவே ஏரோதியாள் விருந்து வேளையில் ராஜா உட்பட பலர் மது போதையில் இருந்த போது அவர்களுக்கு முன்பாக தன் மகளை அசிங்கமாக ஆட வைத்தாள். அப்போது ஏரோதியாள் ராஜாவை சிக்க வைத்து யோவான் ஸ்நானனை கொல்லத் தூண்டினாள். (மாற்கு 6:14-29). சில வேளைகளில் சத்தியத்திற்காக நிற்பது நம்மை பல்வேறு விதமான பிரச்சினைகளுக்குள் தள்ளிவிடும். (ரோமர் 1:18) சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கி வைக்கிற மனுஷரைப்பற்றி வேதாகமம் பேசுகிறது. எனவே, ஒருவர் என்ன செய்ய வேண்டும்? ஒருவர் சத்தியத்தை அறிந்தால், ஆட்சியாளர்கள் உட்பட பெரும்பாலானோர் சத்தியத்திற்கு எதிராக நின்றால் அவர் சத்தியத்திற்கு சமரசமாகி விட வேண்டுமா அல்லது சத்தியத்தைப் பிடித்துக் கொண்டு அதற்காக நிற்க வேண்டுமா? (நீதிமொழிகள் 23:23) சத்தியத்தை வாங்கு அதை விற்காதே என்று புத்திமதி சொல்கிறது.

✞

## விசுவாசமும், கிரியையும்

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வயதான ஒரு படகோட்டி பயணிகளை அக்கரைக்கு எடுத்துச் செல்லும் வேலையைச் செய்து வந்தார். ஒரு நாள் பயணிகளில் ஒருவர் படகில் இருந்த இரு துடுப்புகளில், ஒரு துடுப்பில் **விசுவாசம்** மற்றொரு துடுப்பில் **கிரியைகள்** எனும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டதைக் கண்டார். இதில் ஆர்வம் கொண்ட பயணி அதன் பொருள் என்ன? என்று கேட்டார். அதற்கு அந்த வயதானவர் நான் காட்டுகிறேன் என்று சொல்லி, விசுவாசம் என்று பொறிக்கப்பட்டிருந்த துடுப்பை கீழே போட்டு விட்டு, **கிரியைகள்** என்று பொறிக்கப்பட்டிருந்த துடுப்பை பிரயோகித்தார். அப்போது அந்தப்படகு சுற்றிச் சுற்றிப் போனது. பின்பு அந்தத் துடுப்பபை கீழே போட்டுவிட்டு **விசுவாசம்** என்று பொறிக்கப் பட்டிருந்த துடுப்பைப் பிரயோகித்தார். அப்போது அந்தப்படகு எதிர்த் திசையில் சுற்றி சுற்றிப்போனது. அப்படிப் பரிசோதனை செய்து காட்டி விட்டு படகோட்டி **இரு** துடுப்புகளையும் எடுத்து படகோட்டினார். அப்போது படகு மிக லகுவாகவும், வேகமாகவும் சென்றது.

ஆகவே, வாழ்க்கைப் பயணத்தில் விசுவாசமும், கிரியைகளும் சேர்ந்திருந்தால் பாதுகாப்பும் முன்னேற்றமும். ஆசீர்வாதமும் நிச்சயம் (யாக்கோபு (2:14.26).

# ஏழையாகிவிட்ட ராஜா

## The king became poor

*David A.sargent*

**தே**வனுடைய அன்பினாலும், பாவத்திலிருந்து நமக்கு விடுதலை அவசியம் என்பதாலும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்தின் மகிமையை விட்டுவிட்டு, மனிதனாக வாழ்ந்து உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படி சிலுவையில் தொங்கினார். (பிலிப்பியர்2:5-11) வசனங்களை வாசித்துப் பாருங்கள், இவ்வசனப்பகுதி இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிப்பதற்காக எதை விட்டார் என்பதை மிக அழகாக விவரிக்கிறது. இயேசு ஐசுவரியமுள்ளவராய் இருந்தும் நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியாவான்களாகும்படிக்கு நமது நிமித்தம் தரித்திரரானார். இயேசு கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்வதற்காக, அதாவது பாவ மன்னிப்பு, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்,பரலோகம் என்று அழைக்கப்படும் அழகான இடத்தில் நித்திய ஜீவனை அடைவதற்கான நம்பிக்கை போன்ற ஆசீர்வாதங்களை அல்லது ஐசுவர்யங்களை நாம் பெற்றுக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து தரித்திரானார்.

இயேசு கிறிஸ்து மீது விசுவாசம் வைத்து (அப்போஸ்தலர் 16:30,31), மனம் திரும்புவதன் மூலமாக பாவத்திலிருந்து திரும்புகிறவர்களுக்கு (அப்போஸ்தலர் 17:30-31), மனுஷருக்கு முன்பாக இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிறவர்களுக்கு (ரோமர் 10:9-10), பாவமன்னிப்புக்காக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு (அப்போஸ்தலர் 2:38) தேவன் நித்திய ஜீவனை கொடுப்பார். மேலும், தேவன் அவருடைய வார்த்தை என்னும் வெளிச்சத்தில் தொடர்ந்து நடப்பவர்களின் பாவங்களை தொடர்ந்து கழுவி சுத்திகரிப்பார் (1 யோவான் 1:7-9).

நாம் ஆவிக்குரிய மற்றும் நித்திய ஆசீர்வாதங்களை சுதந்தரித்து ஐசுவரியம் அடைவதற்காக இயேசு கிறிஸ்து தரித்திரராகி,பாடுபட்டு, மரித்தார். அவர் மாபெரும் நன்கொடையாளராக இருக்கிறபடியால் நாம் அவருடைய நிபந்தனைகளுக்கு உட்படும்பொழுது மாத்திரமே அவரிடமிருந்து நன்மைகளை அல்லது ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.



கிறிஸ்தவ இல்லம்

# குடும்ப ஜெப நேரத்தின் முக்கியத்துவம்

## The Importance of Family prayer Time

*Rodney Nulph*

**ஏ**ந்த ஒரு மனித உறவின் வெற்றிக்கும் தகவல் பரிமாற்றம் தான் முக்கிய காரணியாக இருக்கிறது. உண்மையைசொல்லப்போனால், இரு நபர்களுக்கிடையான உறவில் தகவல் பரிமாற்றமே அடித்தளமாக அமைகிறது. இது உண்மையாயிருக்க குடும்பங்கள் உறுதியான விசுவாசத்தைக் கொண்டிருக்க குடும்பமாக இணைந்து தேவனிடத்தில் பேசுவது அவசியமாய் இருக்கிறது. சில குடும்பங்கள் படுக்கை நேர ஜெபம், உணவு நேர ஜெபம் என சில நேரங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், வாரம் முழுவதும் சில விசேஷித்த தருணங்களை ஜெபத்திற்காக ஒதுக்குவது உங்கள் குடும்பத்திற்கு நீடித்த, நேர்மறையான, நித்திய தாக்கத்தை ஏற்படுத்தும். நான் இக்கட்டுரையில் பட்டியலிடும் காரியங்களை விட குடும்ப ஜெப நேரத்திற்கு அதிக நன்மைகள் இருந்தாலும் கூட குடும்பமாக இணைந்து ஜெபிக்க தொடங்குவதற்கோ அல்லது ஏற்கனவே இணைந்து குடும்பமாக ஜெபித்துக் கொண்டிருந்தால் அதை தொடர்வதற்கோ கீழ்க்காணும் காரியங்களை ஓர் உந்தும் சக்தியாக எடுத்துக் கொள்ளலாம்.

முதலாவது, குடும்ப ஜெப நேரம் மதிப்பை உணர வழி வகுக்கிறது ஜெபத்தின் ஒரு பகுதி தேவனை துதிப்பதும், அவர் ஒவ்வொரு நாளும் நமக்கு அளிக்கின்ற அளவற்ற ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்துவதுமாய் இருக்கிறது. (சங்கீதம் 105:1-3) 138:1-2; 1 தெசலோனிக்கேயர் 5:17-18; யாக்கோபு 1:17). ஆனால், நாம் நன்றி கெட்ட சமுதாயம் என்று அழைக்கப்படுகிற சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இருந்தபோதிலும், குடும்பமாகச் சேர்ந்து ஜெபிப்பது குடும்பங்கள் தேவன் தங்களுக்கு கொடுத்திருக்கின்ற ஆசீர்வாதங்களை நின்று எண்ணிப் பார்க்க வைக்கிறது. தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்காக, நாம் நன்றி நிறைந்தவர்களாகக் காணப்படும் பொழுது மகிழ்ச்சியானவர்களாகவும் நம்பிக்கை உள்ளவர்களாகவும் காணப்படுவோம். நீங்கள் குடும்பமாகச் சேர்ந்து ஜெபிக்கும்போது தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிற ஆசீர்வாதங்களைக் குறித்து பேசுங்கள். அதிலும் குறிப்பாக, குடும்ப அங்கத்தினருக்காக தேவனால் விசேஷித்த விதமாகக் கொடுத்த ஆசீர்வாதங்களைக் குறித்து அதிகமாக பேசுங்கள். நிச்சயமாக, நாம் குடும்பமாக சேர்ந்து ஜெபிப்பதன் முக்கிய நோக்கமே தேவனுக்கு நன்றி செலுத்துவதற்காகத் தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவது, குடும்ப ஜெப நேரம் ஒருமித்த தன்மையை ஊக்கப்படுத்துகிறது. ஒரு குடும்பம் வாழ்க்கையின் எல்லா பிரச்சினைகளையும் ஓரமாக வைத்துவிட்டு ஜெபத்திற்காக நேரத்தை ஒதுக்கும்போது அது குடும்பத்தில் உள்ள எல்லோரையும் தேவனிடத்தில் நெருக்கமாகக் கொண்டு வருகிறது. அது மாத்திரமல்ல, வாழ்க்கை கொண்டு வருகிற ஏற்றத் தாழ்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள ஒவ்வொருவருக்கும் வாய்ப்பை அளிக்கிறது. நம்முடைய குடும்ப உரையாடலில் தேவனையும் கொண்டு வரும்போது தேவன் நம்முடைய குடும்பத்தின் மைய அங்கமாகிறார். மேலும், குடும்ப ஜெபத்தின் போது ஒவ்வொருவரும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வாய்ப்பு கொடுக்கப்படுகிறபடியால் அது குடும்பத்தையும் ஆவிக்குரிய பந்தத்தையும் பலப்படுத்தும். ‘‘சேர்ந்து ஜெபிக்கிற குடும்பம் சேர்ந்து வாழ்கிறது’’ என்பது எவ்வளவு உண்மையாய் இருக்கிறது. உண்மையில், குடும்ப ஜெபத்தில் இணைந்து ஜெபிப்பது ஒருவரையொருவர் நன்றாக அறிந்து கொள்வதற்கும் மற்றவர்களை மன்னிப்பதற்கும் வெகுவாக உதவுகிறது. எந்த குடும்பத்திற்கு மன்னிப்பும், புரிந்து கொள்வதும் அவசியம் இல்லை?



மூன்றாவது, குடும்ப ஜெப நேரம் விழிப்புணர்வை உண்டாக்குகிறது. உண்மையில், இன்றைய நாட்களில் பெரும்பாலான குழந்தைகள் பரலோகத்தின் தேவனைப் பற்றிய குறைந்தபட்ச அறிவுடன்தான் வளர்கிறார்கள். பெரும்பாலான இளைய தலைமுறையினர் தேவன் இருக்கிறாரா என்கிற சந்தேகத்துடன் தான் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவதாசனாகிய மோசே இஸ்ரவேலர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவனைப் பற்றிய போதுமான அறிவை ஊட்ட வேண்டுமென்று போதித்தார் (உபாகமம் 6:6–7) – தேவனைப் பற்றியும் அவருடைய வாத்தைகளைப் பற்றியும் போதுமான அளவு நமக்கு அறிவு இருந்தால் வழி தப்பி போவதற்கோ அல்லது உண்மையற்றவர்களாய் இருப்பதற்கோ வாய்ப்பு குறைவுதான் (சங்கீதம் 119:9–11).

பெரும்பாலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் வருங்காலத்தில் எப்போதும் நினைவுகூரத்தக்கதாக எதையாவது ஒன்றைச் செய்து வைப்பார்கள். பிற்காலத்தில் பிள்ளைகள் வளர்ந்த பிறகு தாங்கள் பெற்றோரால் வளர்க்கப்பட்ட விதத்தை திரும்பிப் பார்த்து அதை தங்கள் மனதில் எப்போதுமே வைத்துக் கொள்வார்கள். நாம் குடும்பமாகச் சேர்ந்து சர்வ வல்லவரோடு பேசும் அந்த ஜெப நேரத்தை விட பிள்ளைகளுடைய மனதில் வேறு எதுவும் பசுமையான நினைவாக இருக்க முடியாது. எனவே, நீங்கள் நேரம் எடுத்து குடும்பமாக சேர்ந்து ஜெபிக்கும்போது தேவன் உங்கள் விசுவாசத்தையும், உங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறவர்களுடைய விசுவாசத்தையும் பலப்படுத்தி நிலைத்திருக்கச்செய்வார். சகலவற்றையும் அலசி ஆராய்ந்த பிறகு கடைசியாக குடும்பமானது ஆவிக்குரிய பிரகாரமாக எதை சேர்ந்து செய்கிறதோ அதுவே முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

✞

## கிறிஸ்தவ வாழ்வில் அன்றாடம் செய்ய வேண்டியவைகள்

*1. உள்ளார்ந்த மனிதனை நாளுக்கு நாள் (அன்றாடம்) புதிதாக்க வேண்டும். (2கொரி 4:16)*

*2. அன்றாடம் வேத வாக்கியங்களை வாசிக்கவேண்டும். (நெகேமியா 8:18; அப்போஸ்தலர் 17:11)*

*3. அன்றாடம் தேவனிடம் ஜெபத்தின் மூலமாகப் பேசவேண்டும். (சங்கீதம் 55:16-17 ; 86:3)*

*4. அன்றாடம் நாம் தேவனைத் துதிக்கவேண்டும். (சங்கீதம் 72:15)*

*5. அன்றாடம் நாம் ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வேண்டும். (எபிரெயர் 3:13)*

கிறிஸ்தவ இல்லம்

# இள வயதினரின் சவால்கள்

## The challenges of young people

*Volois Hooper*

இன்றைய இளைய தலைமுறையினர் பலவிதமான சவால்களால் சூழப்பட்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், எதைத் தெரிந்து கொள்ளலாம் எதை தெரிந்து கொள்ளக் கூடாது என்னும் கடும் குழப்பத்தில் உள்ளார்கள். பல உருவங்களில் வலம் வரும் பாவத்தை எதிர்கொள்வது இளம் தலைமுறையினருக்கு மிகப்பெரிய சவாலாகும் [கலாத்தியர் 5:19–21].

வாலிபப் பருவமானது பலவிதமான காரியங்களை ஆராயத் துடிக்கும் ஒரு பருவமாகும். எனவே, வாலிபர்களை பாவத்தினடத்திற்கு அழைத்துச் செல்லும் சோதனைகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் ஏன் என்று அவர்களை சரியான பாதையில் வழிநடத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது [1 தீமோத்தேயு 4:12]. இன்றைய நாட்களில் தொழில்நுட்பம் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது தொழில்நுட்பம் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சராசரி குழந்தையும் தொழில்நுட்ப சாதனங்களுக்கு அடிமையாகி விட்டது.

இவ்வுலகில் உள்ள ஒவ்வொன்றும் நன்மையைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது,அதே நேரத்தில் தீமையை கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஒரு குழந்தை நடக்கவும் பேசவும் ஆரம்பிக்கும் போது அதன் கையில் ஒரு மின்னணு சாதனத்தை கொடுத்துவிட்டு பின்பு சில நாட்கள் அதை கண்காணிக்காமல் விட்டுவிட்டால் ஒரு 13 வருடங்களுக்குப் பிறகு அது போன்ற மின்னணு சாதனங்களை அக்குழந்தையிடம் இருந்து பறிப்பது முடியாத காரியமாக மாறிவிடும். **பிரம்பும், கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்** [நீதிமொழிகள் 29:15]. பெற்றோர் பிள்ளைகள் மீது தங்கள் கடமையை சரியான நேரத்தில் ஆற்றவில்லையென்றால் அங்கே மிகப் பெரிய ஆபத்து காத்திருக்கிறது. பிள்ளைகள் விளையாட்டு சாமான்கள் மின்னணு சாதனங்கள் போன்றவைகளுக்கு அடிமையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் [நீதி 22:6].

இளைய தலைமுறையினர் வாழ்வில் பெற்றோரின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிரசங்கி 12:1 ஒருவருடைய பிந்தைய பருவத்தைக் காட்டிலும் வாலிபப் பிராயத்தில் தேவனிடத்தில் திரும்புவது அதிக நன்மை பயக்கும் என்று வலியுறுத்துகிறது; நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்குநாட்கள் வராததற்கு முன்னும். எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும், என்று வாசிக்கிறோம் (பிரசங்கி 12:1). வாலிபர்கள் தேவனை நேசிக்கிற காரியத்தில் படிப்பிக்கப்பட வேண்டும். ஏனென்றால், அவர்களுடைய ஜீவியத்தில் தேவன் இடைபடுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வாலிபர்களுடைய வாழ்க்கையில் பெற்றோர்கள் எல்லாவற்றையும் முன்னின்று செய்கிறவர்களாக, வேறு விதமாகச் சொன்னால் முன்னோடிகளாக இருந்தால் தான் தீமோத்தேயு போன்று பாரம்பரியத்தை பிள்ளைகள் சுதந்தரித்துக் கொள்ள முடியும். (2 தீமோத்தேயு 1:5). பிள்ளைகள் தேவனுக்காக வாழ வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க பெற்றோர் மற்றவருடைய உதவியை நாடினாலும் அதில் தவறு ஒன்றும் இல்லை. தேவ பக்தி எளிய காரியங்களில் இருந்து தொடங்க வேண்டும். குடும்பங்களில் தெய்வ பக்திக்கு குடும்ப ஜெபங்கள். ஞாயிறு பள்ளிகள் கோடை விடுமுறை பள்ளிகள் போன்றவைகள் எல்லாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால், ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ச்சி அடைய அவையெல்லாம் பாலமாகத் திகழ்கின்றன.

வேத வாக்கியங்களை தாண்டி இளம் வயதினருக்கு அவர்கள் பின்பற்றத்தக்க கண்ணால் காணக்கூடிய உதாரணங்கள் அவசியப்படுகின்றன. (அப்போஸ்தலர் 10:1-2) வசனங்களில் கொர்நேலியு கிறிஸ்தவராகாமல் இருந்தபோது கூட கிறிஸ்தவ நெறிமுறைகளை அவர் பின்பற்றிக்கொண்டிருந்தார். வாலிபர்களின் பெற்றோர்களும், அங்கத்தினர்களும் அந்த வாலிபர்களால் உதாரணத்துவ குணம் உள்ளவர்களாகவும், உபசரிக்கவர்களாகவும், கருணை காட்டுகிறவர்களாகவும் பார்க்கப்பட வேண்டும்.

அது மாத்திரமல்ல, அந்த இளம் பிள்ளைகளின் பாதுகாவலர்கள், பவுல்(1 கொரிந்தியர் 11:1)ல் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல நீங்கள் என்னை பின்பற்றுகிறவர்களாய் இருங்கள் என்று சொல்லத்தக்கதாய் காணப்பட வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினர் பிறரால் காணப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதைப்போல் பிறரால் பாராட்டப்பட வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். காரியங்கள் இப்படி இருக்கும்போது நல்ல சமாரியனுடைய மனப்பான்மையை அவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று போதிப்பதை விட சிறந்த வழி எதுவாயிருக்க முடியும்? கர்த்தர் நமக்காக செய்திருப்பவைகளை நாம் அவருக்காக செய்பவைகளோடு ஒரு போதும்

ஒப்பிட முடியாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (சங்கீதம் 105:2) ஆனாலும், நாம் அவரைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும், அதை நம் பிள்ளைகள் பார்த்து நாம் அவர்களிடம் எதையும் சொல்லாமலேயே தானாய் காரியங்களைச் செய்ய வைக்க வேண்டும். பெற்றோரே நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு எதைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? (மத்தேயு 6:19,20).

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் யாரிடம் சகவாசம் வைத்திருக்கிறர்கள் என்பதை பற்றிய அறிவு உங்களுக்கு உண்டா? ஒரு அதிர்ச்சி அடைந்த பெற்றோராக, உங்கள் பிள்ளைகள் யாரிடம் பழக வேண்டும், யாரிடம் சகவாசம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் தான் தீர்மானித்து அவர்களை வழிநடத்த வேண்டும். இதை நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு நன்றாய் பழகி அவர்களிடம் நல்ல உறவை வைத்துக் கொண்டே செய்யலாம்.

இன்றைய குழந்தைகள் எல்லாமே புத்திசாலிகளாக இருக்கிறார்கள், அவர்கள் உங்களை விட புத்திசாலிகளாக எண்ணுகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் பெற்றோர் என்னும் நிலையில் நீங்கள் உங்கள் கடமையைச் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது. தீமோத்தேயு ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவனாக இருப்பதற்கு பிரதான காரணமே அவருடைய தாயும், பாட்டியும் தான் என்பதை நாம் மறக்க முடியாது (2 தீமோத்தேயு 1:5). எனவே, பெற்றோர்களே நாம் இந்தத் தீமோத்தேயுவை போல உண்மையுள்ள, தெய்வ பக்தியுள்ள பிள்ளைகளை எழுப்ப முடியும்.

வாலிபர்களே, எல்லோரும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்; நீங்களும் அங்கே இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். தேவனுடைய பார்வையிலே நீங்கள் பொக்கிஷமாய் இருக்கிறபடியால் அவர் தம்முடைய குமாரனுடைய பணியை இவ்வுலகிலே தொடர, இழந்து போனவர்களை இரட்சிக்கவும் தேவன் உங்களை நம்பிக் கொண்டிருக்கிறார். (லூக்கா 19:10) தேவனுடைய தலைமையில் நீங்கள் அவருக்காக வாழும்போது சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நீங்கள் உங்களுக்கு உகந்த வேலையை செய்து கொண்டு கூட, கர்த்தருடைய வேலையைச் செய்ய முடியும். அது உங்களுக்கு நிச்சயமின்மையும், பாவம் நிறைந்த உலகில் மகிழ்ச்சியையும், நிறைவையும் கொண்டு வரும்

ஆனால், இன்றைய நாட்களில் வாலிபர்களைக் குறித்த புள்ளி விவரங்கள் மிகவும் நமக்கு கவலையை அளிக்கின்றன. அவர்கள் ஒரு நிமிடம் நின்று தேவனுக்கு முதலிடத்தை கொடுத்திருந்தால் அத்தகைய மோசமான சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று,

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:1,2).

மதுபானம், போதை வஸ்துக்கள், அசிங்கமான இசை மற்றும் பல்வேறுபட்ட தகாத தேவபக்தியற்ற காரியங்கள் தான் இளைய தலைமுறையினர் மத்தியில் தலை விரித்தாடுகிறது. ஆனால், வாலிபர்கள் பின்பற்றும் படி நன்மை பயக்கக்கூடிய காரியங்கள் அநேகம் உண்டு (தீத்து2:11-14).

அன்பான வாலிபர்களே, நீங்கள் உங்கள் உலகப்பிரகாரமான நண்பர்களைப்போலிருக்க வேண்டாம் என்று தேவன் உங்களிடம் மன்றாடுகிறார். நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருந்து கொண்டு உலகத்தின் நண்பர்கள் செய்வது போல செய்தால் உங்களுடைய ஜீவியம் மாயமாலத்தை வெளிப்படுத்துகின்ற ஒன்றாகத்தான் இருக்க முடியும். உங்கள் உலகத்தின் நண்பர்களுக்கு இப்போது வாழ்க்கையை நன்றாய் அனுபவிப்பது போல தோன்றலாம். ஆனால், நித்தியத்தில் அவர்களுடைய நிலை என்ன- அதேப்போல் அவர்களுடைய பாவமான வழிகளைப் பின்பற்றினால் உங்களுடைய நிலை என்ன என்பதை ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்? நாம் உலகத்தாரைப் போல நடந்து கொண்டால் அது நிச்சயமாக நம்முடைய ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தும். அவர்கள் தங்கள் கலகம் உண்டாக்கும் நடத்தையினால் ஒரு கிறிஸ்தவராக உங்களை பரிகாசம் செய்யலாம். ஆனால், நீங்கள் தேவனை நோக்கிப் பாருங்கள். ஏனென்றால், அவரால் தான் நீங்கள் வழி நடத்தப்படப்போகிறீர்கள். வாலிபரே உங்கள் சேவைக்காக தேவன் காத்துக் கொண்டிருக்கிறார், உங்களை அவருக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுங்கள்.

✞

---

**ஒரு குழந்தை நடக்கவும் பேசவும் ஆரம்பிக்கும் போது அதன் கையில் ஒரு மின்னணு சாதனத்தை கொடுத்துவிட்டு பின்பு சில நாட்கள் அதை கண்காணிக்காமல் விட்டுவிட்டால் ஒரு 13 வருடங்களுக்குப் பிறகு அது போன்ற மின்னணு சாதனங்களை அக்குழந்தையிடமிருந்து பறிப்பது முடியாத காரியமாக மாறிவிடும். பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான் (நீதிமொழிகள் 29:15).**

## சத்திய வழி


❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி


❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை


❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | செவ்வாய் | காலை | 6.30 மணி |
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**


E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ..................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# 5 நிமிட வேத பாடம்

## கிறிஸ்துவுக்குள் நிச்சயம்

**Paula Bates**

1. துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்................. இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண ......................... சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை ........................... அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. (எபிரேயர் 10:22,23).

2. அவர்களுடைய இருதயங்கள் ......................... அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ...................... உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன் (கொலோசெயர் 2:2).

3. அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் திரைக்குள்ளாகப் ...................... போகிறதுமான ஆத்தும ................................. (எபிரேயர் 6:19).

4. அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் ........................... திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் ....................... உண்டாயிருக்கிறது. (எபேசியர் 3:12).

5. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே ............................... (1 யோவான் 3:24).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**


எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

'திருமறை ஆசான்'
'கிருபையுள்ள வார்த்தை'
'வேர்டு ஆப் கிரைஸ்ட்'

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385